தமிழர் செல்வம்

ஆசிரியர் :
ஆ. வ. இராமநாதன் செட்டியார், M.A.
தலைவர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி.

வெள்ளையன் பதிப்புக் கழகம்
கண்டனூர், இராமநாதபுர மாவட்டம்.

தமிழர் செல்வம்

ஆசிரியர் :
ஆ. வ. இராமநாதன் செட்டியார், M.A.
தலைவர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி.

வெள்ளையன் பதிப்புக் கழகம்
கண்டனூர், இராமநாதபுர மாவட்டம்

பதிப்புரிமை] 1952 [விலை ரூ. 1–12–0

முதற் பதிப்பு—1951
இரண்டாம் பதிப்பு—மே, 1952

Kabeer Printing Works Madras (1914)

முன்னுரை

தமிழர்க்குரிய நாடு, மொழி, இலக்கியம், அரசு, வீரம், வாழ்வு, அவர்கள் செய்யும் தொழில்கள், அவர்கள் போற்றி வளர்க்கும் கலைகள் முதலியவற்றின் தொகுப்பே ‘தமிழர் செல்வ’ மாகும்.

இந்நூலில் இவை அனைத்தும் இடம் பெற்றுள்ளன. சங்ககாலம் முதல் விஜயநகர அரசர் ஆட்சி முடிய நீண்ட கால அளவில் இவை எங்ஙனம் வளர்ச்சி பெற்றன என்பது பற்றிய விவரங்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பெற்றுள்ளன. ஆதலின் மேற்சொல்லிய தமிழர் தம் நீண்டகால வாழ்க்கை விவரங்களைச் சுருக்கமாக அறிய இந்நூல் துணைபுரிய வல்லது. தமிழ்ப் பேராசிரியர்களும், பிற பெரியோர்களும் இந்நூலைக் கண்ணுற்று ஆதரவு நல்க வேண்டுகிறேன்.

ஆ. வ. இராமநாதன்

பொருளடக்கம்

தமிழர் செல்வம்

1. தமிழ்நாடு

தமிழ் நாடு

மொழியைக் கொண்டு நாட்டுக்குப் பெயரமைப்பது பண்டை வழக்கம் என்பதை,

"தமிழ்கூறு நல்லுலகம்"

என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர அடியால் நன் கறியலாம். "தமிழ்கூறு நல்லுலகம்" தமிழ் நாடு எனப் பட்டது. 'தமிழ் நாடு' என்னும் தொடர் 'தமிழ் மொழி வழங்கும் நாடு' எனப் பொருள்படும். தமிழ் மொழி எப் பொழுது தோன்றியது என்பதை எவராலும் வரையறுத்துக் கூறமுடியாது. இன்றுள்ள பழந்தமிழ் நூல்கள் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை என்பது உண்மையாகும். அந்நூல்களை நோக்கின், அக்காலத்தில் மொழிவளம் சிறந்திருந்தது என்பது நன்கு தெரிகிறது. மொழிவளம் சிறக்கப் பல நூறு ஆண்டுகள் செல்லு மாதலின், தமிழ் பன்னூறு ஆண்டுகளாக நாட்டில் வழங்கி வருகின்ற மொழியெனக் கூறலாமன்றி, இன்ன நூற் ருண்டில் தோன்றியது எனக் கூறுதல் இயலாது.

இவ்வாறு வரையறுத்துக் காலம் கூறக்கூடாத பழமை வாய்ந்த மொழி வழங்கும் நாடு, மொழி தோன்றுதற்கு முன்னரே தோன்றியதாதல் வேண்டும். எனவே, மொழி

வழங்கும் நாடு மொழிக்கு முற்பட்டது; மிக்க பழமை யுடையது என்பன துணியப்படும்.

கடல் கோள்கள்

பண்டைக் காலத்தில் தமிழகம் மிகப் பரந்திருந்தது. இன்றுள்ள குமரிமுனைக்குத் தெற்கேயுள்ள இந்துப் பெருங் கடலில் பெரிய நிலப்பகுதி இருந்தது. அப்பகுதியில் குமரி யாறு, பஃறுளியாறு என்னும் இரண்டு பெரிய யாறுகள் பாய்ந்தன. அந்நிலப் பரப்பில் ஏழ் தெங்கநாடு, ஏழ் மதுரைநாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ் பின்பாலைநாடு, ஏழ் குன்றநாடு, ஏழ் குணகாரைநாடு, ஏழ் குறும்பனைநாடு என நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. அந்நாடுகள் கடல்கோளால் அழிந்தன. இவ்விவரங்கள் புறநானூறு, சிலப்பதிகாரம், இவற்றின் உரைகள் ஆகியவற்றால் புலனா கின்றன.

பாண்டிய நாட்டின் தலைநகரம் தென்மதுரை என்றும், அங்கு அகத்தியம் செய்யப்பட்டதென்றும், அந்நகரம் கடல் கோளால் அழிந்த பின்னர்க் கபாடபுரம் பாண்டியர் தலைநகர் ஆயிற்று என்றும், அங்குத் தொல்காப்பியம் செய்யப்பட்டதென்றும், பின்னர் அந்நகரம் கடலாற் கொள்ளப்பட்டமையால் இன்றுள்ள மதுரை பாண்டியர் தலைநகரம் ஆயிற்று என்றும் இறையனார் களவியலுரை கூறுகின்றது.

சங்ககாலத் தமிழகம்

இன்றுள்ள சங்க நூல்களில் தமிழகத்தின் வடவெல்லை வேங்கடமலை என்றும், தெற்கெல்லை குமரிமுனை என்றும், கிழக்கெல்லையும் மேற்கெல்லையும் கடல் என்றும் கூறப்பட் டுள்ளன. இந்நான்கு எல்லைகட்குட்பட்ட தமிழகத்தில்

தொண்டைநாடு, சோழநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு, சேரநாடு என்னும் நாட்டுப் பிரிவுகள் இருந்தன.

தொண்டை நாடு

தொண்டைநாடு என்பது ஏறக்குறைய வடவேங்கடம் முதல் தென்பெண்ணைவரை உள்ள நிலப்பகுதியாகும். இப்பகுதியில் நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, சித்தூர், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் வடபகுதி என்பன அடங்கும். இந்நாடு சங்க காலத்தில் 'அருவாநாடு' எனப்பட்டது. இதன் வடபகுதி 'அருவா வட தலைநாடு' என்று பெயர் பெற்றது. இந்நாடு மலை வளமும் காட்டு வளமும் மிக்குடையது. திருப்பதி மலைத்தொடரும், கிழக்குத் தொடர்ச்சி மலையும் இந்நாட்டில் மலைவளத்தை உண்டாக்கி வருகின்றன. ஆலங்காடு, ஆர்க்காடு, வேற்காடு, காட்டூர் முதலிய இக் கால ஊர்கள், இவ்விடங்கள் ஒருகாலத்தில் காடுகளாக இருந்தன என்பதை உணர்த்துவனவாகும்.

இந்நாடு பழங்காலத்தில் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை (1) புழல் கோட்டம், (2) ஈக்காட்டுக் கோட்டம், (3) மணவிற் கோட்டம், (4) செங்காட்டுக் கோட்டம், (5) பையூர்க் கோட்டம், (6) எயில் கோட்டம், (7) தாமல் கோட்டம், (8) ஊற்றுக்காட்டுக் கோட்டம், (9) களத்தூர்க் கோட்டம், (10) செம்பூர்க் கோட்டம், (11) ஆம்பூர்க் கோட்டம், (12) வெண்குன்றக் கோட்டம், (13) பல்குன்றக் கோட்டம் (14) இளங்காட்டுக் கோட்டம், (15) காலியூர்க் கோட்டம் (16) செங்கரைக் கோட்டம், (17) படுவூர்க் கோட்டம், (18) கடிகூர்க் கோட்டம், (19) செந்திருக்கைக் கோட்டம், (20) குன்ற வட்டான கோட்டம், (21) வேங்கடக் கோட்டம்,

(22) வேலூர்க் கோட்டம், (23) சேற்றூர்க் கோட்டம், (24) புலியூர்க் கோட்டம் என்பன.

இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு யாண்டுகட்கு முன் அருவா வட தலைநாட்டைத் **திரையன்** என்பவன் ஆண்டு வந்தான். அவனது தலைநகர் 'பவத்திரி' என்பது. தென் பகுதியை **இளந்திரையன்** என்பவன் ஆண்டு வந்தான். அவனது தலைநகரம் காஞ்சி மாநகரம். இளந்திரையன், திரையன் பிரதிநிதியாக இருந்து தென் பகுதியை ஆண்டவன்போலும்! இவர்கட்குத் 'தொண்டையர்,' 'தொண்டைமான்கள்' என்னும் பெயர்களும் வழங்கின. தொண்டைமான் ஆண்ட நாடு 'தொண்டை நாடு' எனப்பட்டது. திரையனைத் தவிரத் தொண்டை நாட்டில் வேங்கடமலைப் பகுதியைப் **புல்லி** என்னும் கள்வர் கோமான் ஆண்டுவந்தான். அவன் சிறந்த கொடையாளி என்று புலவரால் பாராட்டப்பட்டவன். இளந்திரையன் தமிழ்ப் புலவன்; புலவரைப் போற்றிய வள்ளல்.

தொண்டை நாட்டில் மகாபலிபுரம் சிறந்த துறைமுக நகரமாக இருந்தது. மகாபலிபுரம் சங்க காலத்தில் சிறந்த பெருநகரமாக இருந்தது; **கலங்கரை விளக்கத்தைப் பெற்றிருந்தது.** நகரத்தில் செல்வ வளம் பொழிந்தது. இவ்விவரங்களைப் பெரும்பாணாற்றுப்படை கொண்டு உணரலாம்.

தொண்டை நாடு சங்க காலத்தில் கரிகால் வளவனால் கைப்பற்றப்பட்டது. மணிமேகலையின் காலத்துச் சோழனான நெடுமுடிக்கிள்ளி சோழநாட்டை ஆண்டபொழுது அவன் தம்பியான இளங்கிள்ளி என்பவன் காஞ்சியில் சோழப் பிரதிநிதியாக இருந்து தொண்டை நாட்டை ஆண்டான் என்பது தெரிகிறது. பல்லவர்க்குப் பின்வந்த பிற்காலச் சோழராட்சியில் ஏறத்தாழ 400 ஆண்டுகள் தொண்டைநாடு சோழப் பேரரசுக்குட்பட்டு இருந்தது;

விஜயநகர அரசர்கள் காலத்தில் அவர்கள் பாதுகாப்பில் இருந்தது; இடையிடையே சிற்றரசர் பலரது ஆட்சிக்குட் பட்டது.

காஞ்சி மாநகரம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு களாகவே பெரும்புகழுடன் இருந்துவரும் நகரமாகும். "கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்று கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த அப்பர் அதனைச் சிறப்பித் துள்ளார். பல்லவர் ஆட்சியில் அங்கு நாகரிகக் கலை களான **இசை, நடனம், ஓவியம், சிற்பம்** என்பன வளர்ச்சி பெற்றன; பல சமயங்களும் வளர்ச்சி பெற்ற இடமும் அதுவாகும். சாளுக்கியர், இரட்டர், பாண்டியர், முகம்மதியர் முதலியோர் படையெடுப்புக்களைப் பார்த்துப் புன்னகை புரிந்த பண்டைநகரமும் அதுவேயாகும். தென்னுட்டுக் கட்டடக்கலைக்குத் தாயகமாக விளங்கும் அத்தொன்னகரம் இன்று தன் முதிய தோற்றத்துடன் காணப்படுகின்றது.

சோழ நாடு

சோழநாடு என்பது தில்லைக்கு வடபாலுள்ள வெள் ளாற்றுக்கும் தஞ்சை மாவட்டத்தின் தென்கோடியிலுள்ள வெள்ளாற்றுக்கும் இடைப்பட்டது. இஃது இக்காலத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் சேர்ந்த நிலப் பகுதியாகும். இந்நாடு சமவெளியில் அமைந்திருக்கிறது; காவிரியும் அதன் கிளையாறுகளும் பாய்வதால் நாடு மருத வளம் செறிந்ததாகவுள்ளது. யாண்டும் வானளாவிய தென்னைமரங்களும், பாக்குமரங்களும், பருத்து வளர்ந்த வாழைமரங்களும், பச்சைப் பசேலெனப் பசுங்கம்பளம் போர்த்தாற்போன்ற பயிர்களும் விளையும் வற்றுத வள முடைய சோழநாட்டை, "சோழவளநாடு சோறுடைத்து" என்று ஆன்றேர் பாராட்டிப் பாடியுள்ளனர்.

இவ்வளமிக்க நாட்டைப் பண்டுதொட்டே ஆண்டு வந்தவர் **வளவர்** என்றும், **சோழர்** என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் குடிகளின் நலன் ஒன்றையே தம் ஆட்சியின் குறிக்கோளாகக் கொண்டு நீர்வளத்தைப் பெருக்கிவந்தனர் ; செங்கோல் முறையில் வழுவாது ஆட்சி புரிந்தனர். அம்மன்னருட் பெரும் புலமை படைத்தவரும் இருந்தனர். பொதுவாகச் சோழர் தமிழ்ப் புலவர்களை மிக்க மதிப்புடன் போற்றிப் பாதுகாத்துவந்தனர் ; அவர் தம் அறிவுரைகளைக் கேட்டு, அவ்வாறே நடந்துவந்தனர்.

சோழநாட்டின் பண்டைத் தலைநகரம் உறையூராகும். பின்னர்ச் சிலப்பதிகார காலத்தில், காவிரி கடலோடு கலக்கும் இடத்திலிருந்த **பூம்புகார் நகரம்** எனப் பெயர்பெற்ற **காவிரிப்பூம்பட்டினம்** தலைநகரமாக விளக்கமுற்றது. அதுவே சோணாட்டிற்கமைந்த துறைமுகமாகவும் பொலிவுற்றது. அங்குப் பலநாட்டுப் பண்டங்கள் இறக்குமதியாயின ; சோணாட்டுப் பண்டங்கள் அயல்நாடுகட்கு ஏற்றுமதியாயின ; அந்நகரம் முதலிரண்டு நூற்றாண்டுகளில் மிகச் சிறந்த துறைமுக நகரமாக இருந்தது என்பது சிலப்பதிகாரம், பட்டினப்பாலை என்னும் நூல்களாலும் அயல்நாட்டு வழிபோக்கர்தம் குறிப்புக்களாலும் நன்கறியலாம்.

சங்ககாலத்திற் புகழ்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் மணிமேகலையின் காலத்தில்—ஏறத்தாழக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில்–கடல்கோளுக்கு உட்பட்டது. அதன் பின்னர் நாகையே சோணாட்டின் சிறந்த துறைமுக நகரமாயிற்று. பின்வந்த பல்லவர்கள் அந்நகரைக் கடல் வாணிகத்தாற் சிறப்பித்தனர். பிற்பட்ட சோழர் காலத்தும் அந்நகரம் துறைமுக நகரமாகப் பொலிவுற்றது.

பாண்டிய நாடு

. இக்கால மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதி பழைய பாண்டிய நாடாகும். இந்நாடு பெரும்பாலும் மலைப்பகுதியும் பாலையும் நிறைந்த இடமாகும். வைகையாறும் தாமிரவருணியாறும் பாய்கின்ற இடங்களே மருதவளம் பெற்றவை. பாண்டிய நாடு முத்தெடுப்பதில் பல நூற்றாண்டுகளாகப் பெயர் பெற்றிருந்தது. கொற்கைத் துறையில் எடுக்கப் பெற்ற முத்துக்கள் ஐரோப்பிய நாடுகட்குப் பண்டைக் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டிய நாடு மலை வளத்திற் சிறந்தது. அங்கு விளையும் பலவகை வாழையும், ஏலக்காய் முதலிய மணப் பொருள்களும் மலைபடுபொருள்கள் ஆகும்.

பாண்டிய நாடு முன்சொன்னவாறு படிப்படியாகத் தன் தென் எல்லையிற் சுருங்கிவிட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளாக மதுரையே அதன் தலைநகரமாக இருந்து வந்தது. அப்பெரு நகரத்தில் சைவ, வைணவ, பௌத்த, சமண சமயங்கள் வளர்ச்சிபெற்றன. கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்பு சைவமும் வைணவமுமே அங்குச் செல்வாக்குப் பெற்றன. தாமிரவருணி கடலோடு கலந்த இடத்தில் பண்டைக் **கொற்கை** என்னும் துறைமுகப் பட்டினம் இருந்தது. கடல் தள்ளிச்சென்ற பிற்காலங்களில் **காயல், கீழக்கரை, தூத்துக்குடி** முதலியன துறைமுக நகரங்களாயின. மணிவாசகர் காலத்தில் **திருப்பெருந்துறை** சிறந்த துறைமுகப் பட்டினமாகப் பெருமை பெற்றது. அயல் நாட்டுக் குதிரைகள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டன.

பாண்டிய நாட்டைப் பல நூற்றாண்டுகளாக ஆண்டு வந்தவர் பாண்டியர் என்ற மரபரசராவர். அவர்களே தம் தலைநகரத்தில் சங்கத்தை அமைத்துப் புலவர்களைச்

சேர்த்துத் தமிழை வளமுற வளர்த்த பெருமையுடைய வர்கள். நக்கீரர், கபிலர், பரணர் போன்ற புலவர் பெரு மக்கள் இருந்து தமிழாராய்ந்த இடம் மதுரையேயாகும். பாண்டியர்களிற் பலர் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங் கினர். பாண்டிமாதேவியாரும் கவிபாடும் வன்மை பெற் றிருந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்களால் அறிய லாம். பாண்டியர் தமிழ் வளர்ச்சியில் தனிப்பற்றுக் காட்டி வந்தனர் என்பதை, அவர்கள் சங்கம் வைத்திருந்தமை கொண்டும், பிற்பட்ட காலத்திலும் வரதுங்கராம பாண்டியர், அவர் மனைவியார், அதிவீரராம பாண்டியர் என்பவர் புலவர்களாக இருந்தமை கொண்டும் நன் குணரலாம்.

பாண்டிய நாடு கி.பி. 300-க்குப் பிறகு சிறிது காலம் களப்பிரர் ஆட்சியில் இருந்தது; கி. பி. 900-க்குப் பிறகு ஏறத்தாழ நானூறுண்டுகள் சோழராட்சியில் இருந்தது; பின்னர் முகம்மதியர் படையெடுப்பால் அல்லலுற்றது; பின் விஜயநகர அரசர் ஆட்சிக்குட்பட்டது. விசுவநாத நாயக்கர் முதலிய நாயக்க மன்னர்கள் பாண்டிய நாட்டை ஆண்டார்கள். இறுதியில் இந்நாடு கருநாடக நவாபின் ஆட்சியிலிருந்து ஆங்கில ஆட்சிக்கு மாற்றப்பட்டது.

கொங்கு நாடு

சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் கொங்கு நாடு எனப்படும். கொங்கு நாடு மலைவளம் நிறைந்தது. கொல்லி மலைத்தொடர், சவ்வாது மலைத் தொடர், நீலகிரி முதலியன அந்நாட்டை மலைவள நாடாக் குகின்றன. அங்குத் தேன் மிகுதியாகக் கிடைத்தலின் அந்நாடு 'கொங்கு (தேன்) நாடு' எனப் பெயர் பெற்றது என்று ஒருசார் அறிஞர் கூறுகின்றனர். அங்குப் பொன் கிடைத்துவந்த காரணத்தால் அந்நாடு 'கொங்கு (பொன்)

நாடு' எனப் பெயர் பெற்றது என்று பிறிதொருசார் அறிஞர் கூறுகின்றனர்.

கொங்கு நாட்டில் சேர, சோழ, பாண்டியர் போன்ற முடிவேந்தர் இருந்திலர்; சங்க காலத்திலிருந்து அந் நாட்டைச் சிற்றரசர் பலர் ஆண்டுவந்தனர்; கொல்லி மலைப்பகுதியை **மழவர்** ஆண்டனர்; தகடூர்ப் பகுதியை **அதியமான்கள்** புரந்தனர்; முதிரமலைப் பகுதியைக் குமணனும் அவன் முன்னோரும் பின்னோரும் பாது காத்தனர். கொங்குநாடு சேர, சோழ, பாண்டிய நாடுகட்கு இடையில் இருப்பதாலும், ஒரு முடிவேந்தர் ஆட்சியில் இல்லாமையாலும், ஒருபொழுது சேரர் ஆட்சிக்குட்பட்டும் பிறிதொரு சமயம் சோழர் ஆட்சிக்குட்பட்டும் மற்றோர் சமயம் பாண்டியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டும் இருந்து வந்தது.

சேர நாடு

இன்றுள்ள மலையாள மாவட்டமும், கொச்சி-திருவாங் கூர்ச் சீமைகளும் சேர்ந்தது பண்டைச் சேர நாடாகும். அது வடக்கே விரிந்திருந்த காலமும் உண்டு. 'மலையாள நாடு' என்னும் பெயரே அந்நாட்டின் மலைவளத்தை நன்குணர்த்தும். வானோக்கி உயர்ந்துள்ள மலைகளும் மலைப்பாங்கான நிலப்பகுதியும் உடைய அந்நாடு 'வானவர் நாடு' எனப்பட்டது. அங்குள்ள மலைப் பகுதிகளில் அடர்ந்த காடுகள் மிக்கிருந்தன. அக்காடுகளில் சந்தனம், அகில், கருங்காலி முதலிய மரங்கள் வளர்கின்றன. அங்கு யானைகள் மிகுதியாக உண்டு. "வேழம் உடைத்து மலைநாடு" என்னும் ஆன்றோர் வாக்கினை நோக்குக. சங்க காலத்தில் சேர நாட்டில் மிளகு மிகுதியாகப் பயிராகி வந்தது. சேரநாட்டுத் தலைநகரம் **வஞ்சிமாநகரமாகும்.** அது பேரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்

திருந்தது. அப்பெருநகரத்தில், சங்க காலத்தில், பல்வேறு சமயங்கள் விளக்கமுற்றிருந்தன. மேலைக் கரையில் **தொண்டி, முசிறி**, முதலியன சேர நாட்டுத் துறைமுகங் களாக இருந்தன. சேர நாட்டிலிருந்து மயிலிறகு, யானைத் தந்தம், மிளகு என்பனவும், அகில், சந்தனம் முதலிய மணப் பொருள்களும் மிகுதியாக அயல் நாடுகட்கு ஏற்று மதி செய்யப்பட்டன.

சேர நாட்டை ஆண்டுவந்தவர் **சேரர்** எனப்பட்டனர். அவர்கள் தங்கள் நாட்டுக் கடல் வாணிகத்தை நன்கு வளர்த்தனர் ; அவ்வாணிகப் பொருள்களை ஏற்றிச் சென்ற கப்பல்களையும் அயல்நாடுகளிலிருந்து பண்டங்களை ஏற்றி வந்த கப்பல்களையும் வழிமறித்துக் கொள்ளையடித்துவந்த கடற் கொள்ளைக்காரரை அழித்த விறலுடையர். சேர வேந்தர் அனைவரும் தமிழை வளர்த்த சிறப்புடையர். அவருள் பேரரசராகக் கருதப்பட்டார் இருவர் ; ஒருவன் **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்** ; மற்றொருவன் அவன் மகனை **சேரன் செங்குட்டுவன்**. செங்குட்டுவன் தன் காலத்தில் தமிழரசர் அனைவரினும் மேம்பட்டு விளங் கினன். கண்ணகிக்குக் கோயில் எடுத்த பெருமகன் அவனே. "இமயத்தில் நாம்" என்று இன்று தமிழரை நாடகம் நடிக்கச் செய்த மாவீரன் செங்குட்டுவனே யாவான் ; தென்றமிழ் ஆற்றலை வடநாட்டிற் காட்டிய வாள் வீரன் செங்குட்டுவன். அவன் பரணரையும் சாத்த னரையும் ஆதரித்த வள்ளல். அப்பெரு வேந்தனுக்கு இளவலே 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' பாடிய இளங்கோவடிகள். இச்சேரர் பரம்பரையினர் பெரும் பாலும் தொடர்ச்சியாகச் சேர நாட்டை ஆண்டுவந்தனர் என்று வரலாறு கூறுகிறது. சங்ககாலச் சேர மன்னர் களைப்பற்றிக் கூறும் தனி நூல் **பதிற்றுப்பத்து** என்பது.

தமிழ்ச் சிற்றரசர்கள்

மேற் சொல்லப்பட்ட பெருநிலப் பரப்பை ஆண்ட திரையர், முடி மன்னர் மூவர் என்பவர் நீங்கலாகச் சிறிய நிலப் பகுதிகளை ஆண்டுவந்த குறுநில மன்னர் பலர் பழந்தமிழகத்தில் இருந்தனர். அவர்களுட் சிலரே கொங்கு நாட்டுக் குறுநில மன்னர். சோணாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடைப்பட்ட **நடு நாடு** என்பதை **மலையமான்கள்** என்பவர் ஆண்டுவந்தனர். அவர்கள் ஆட்சி சங்ககால முதல் பல நூறு ஆண்டுகள்வரை இருந்ததாக வரலாறு கூறுகின்றது. அவர்கள் பண்டுதொட்டே தமிழ்ப் பற்றிலும் சமயப் பற்றிலும் சிறந்திருந்தார்கள். சங்க காலத்தில் **காரி** என்பவன் மலையமான்களிற் சிறந்த புகழ் எய்தியவன். நடு நாட்டின் தலைநகர் **திருக்கோவலூராகும்**. இக்காலக் குறுநில மன்னர் போல அக் காலத்தில் **வேளிர்** என்பவர் இருந்தனர். அவர்கள் நூறு, இருநூறு, முந்நூறு ஊர்கட்குத் தலைவர்களாக இருந் தார்கள். அவர்களுள் வேள்-பாரி, வேள்-பேகன், வேள்-ஆய் என்பவர் குறிப்பிடத்தக்கவர். **வேள்-பாரி** என்பவன் இப்பொழுது பிரான்மலை என வழங்கப்பெறும் ஊரைச் சுற்றியுள்ள நிலப்பகுதிக்குத் தலைவனாயிருந்தான். **வேள்-பேகன்** என்பவன் இக்காலப் பழநிக்கும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதிக்கும் தலைவனாயிருந்தான். **வேள்-ஆய்** என்பவன் பொதியில் மலைநாட்டுத் தலைவன். இவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் குறுநில மன்னர் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் தம் பேரரசர்க்கு அடங்கியும் சிறுபான்மை அடங்காமலும் இருந்து நாடாண்டவராவர்.

அரசும் கலைகளும்

சங்ககாலத்தில் முடியுடைவேந்தர், குறுநிலமன்னர் ஆகிய நாடாண்ட பெருமக்களின் குறிக்கோள் ஒன்றாக இருந்தது. அஃதாவது, 'குடிகள் வாழத் தாம் வாழ்வது' என்பது. அதனோடு, அவர்கள் புலவர், பாணர், கூத்தர் ஆகியோரை ஆதரித்து, அச்செயல் வாயிலாக முத்தமிழை யும் போற்றி வளர்த்தார்கள். இவ்வாறு சங்ககாலத்தில் அரசர்கள் மேற்கொண்ட நன்னோக்கங்களால், குடிகள் வாழ்ந்தனர்; குடிகள் வாழக் கலைகள் வாழ்ந்தன. பிற்பட்ட பல்லவர்—சோழர் காலங்களிலும் பண்டைத் தமிழ்க் கலைகள் அவ்வக்காலத்திற்கேற்பச் சிற்சில மாறுதல்களோடு வளரலாயின. இவ்விவரங்களை அடுத்து வரும் பகுதிகளிற் காண்க.

2. அரசு

அரசனது இன்றியமையாமை

நாட்டு நல்வாழ்விற்கு ஆட்சி இன்றியமையாதது. பண்டைக்காலத்தில் கோனாட்சியே எங்கும் பரவியிருந்த தாதலின், தமிழகத்தும் கோனாட்சியே நிலவியிருந்தது. பண்டைத் தமிழ் மக்கள் நெல்லையோ நீரையோ தங்கள் நாட்டுக்கு உயிராகக் கருதவில்லை; மன்னனையே உயிராக மதித்தனர்.[1] நாட்டில் மக்களுக்கு நெல் முதலிய உணவுப் பண்டங்கள் இருக்கலாம்; வற்றாத நீர்நிலைகள் இருக்கலாம். ஆயின், அவற்றை வேற்றார் கவர்ந்து கொள்ளாதவாறு பாதுகாக்க அரசு வேண்டுமன்றோ? நல்லரசு நாட்டில் நிலைபெற்றாற்றான் நெல்லும் நீரும் மக்கட்குப் பயன்படும். ஆதலின், பண்டை மக்கள் நெல்லையும் நீரையும்விட அரசனையே நாட்டுக்கு உயிராக மதித்தனர். நாட்டின் வளத்தை மேன் மேலும் பெருக்கவும் கல்வி, தொழில் முதலியவற்றிற் கருத்தூன்றவும், பகைவர், கள்வர் முதலியோரிடமிருந்து குடிகளைப் பாதுகாக்கவும் அக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் அரசு இன்றியமையாததாயிற்று. கடுமை யான வெய்யிலிற் செல்பவன் மரநிழலில் தங்கி இன்புறல் போல, மக்கள் கள்வர், பகைவர் முதலானோர் துன்பங் களினின்று நீங்கி, அரசனது ஆட்சியில் தங்கி இன்புறுதல் பற்றியே நம் முன்னோர் ஆட்சியை 'நிழல்' என்று குறித்தனர்; "என் நிழல் வாழ்நர்" என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறினான்.

---

[1] "நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்."

—புறநானூறு, 186.

ஆட்சிமுறை

சங்ககாலத் தமிழரசர் குடிகளின் கருத்தறிந்து அதற்கேற்ப ஆட்சியை நடத்த இரண்டு பேரவைகளைத் தமக்குத் துணையாகக் கொண்டிருந்தனர். அவை **ஐம்பெருங்குழு, எண்பேராயம்** என்பன. அமைச்சர், புரோகிதர், தானைத் தலைவர், தூதுவர், சாரணர் என்பவர் ஐம்பெருங்குழுவினராவர். கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், பரிவீரர், கரிவீரர் என்பவர் எண்பேராயத்தார். இவருள் **தூதர்**[2] என்பவர் அரசகாரியங்களை அரசர் ஆணை பெற்று வேற்றரசர்பாற் சென்று அறிவிப்பவர். **சாரணர்** என்பவர் ஒற்றர்.[3] **கரணத்தியலவர்** என்போர் அரசாங்கப் பெருங்கணக்கர். **கருமவிதிகள்** என்பவர் பலதுறை அரச காரியங்களை நடத்தும் தலைவர்கள்.[4] **கனகச் சுற்றம்** என்பவர் அரச பண்டார அதிகாரிகள்.[5] **கடை காப்பாளர்** என்பவர் நாடு காவல் அதிகாரிகள். **நகரமாந்தர்** என்பவர் தலைமைபெற்ற நகர மக்கள். இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்போலும்! அரசன் இந்த இரண்டு பேரவையினரைக் கூட்டித் தக்கவற்றை ஆராய்ந்து, இப்பெரியார்கள் உதவியால் நாட்டை ஆட்சி புரிந்துவந்தான். நாட்டுத் தொடர்பான பெரு விழாக்களிலும் சிறப்பான பிற செயல்களிலும் இவ்விரு பேரவையினரும் பங்கெடுத்துக்கொண்டனர். இவ்விரண்டு பேரவையினரும் ஆட்சித் துணைவராய் இருந்தமை கொண்டு, அக்கால அரசாங்கம் மிகச்

---

2 Ambassador, Envoy. 3 Spies.

4 Heads of the various departments of administration in a state.

5 Men in charge of the treasury.

சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தது என்பதை நன்குணரலாம். இவ்வரசாங்க அமைப்புமுறை தமிழகத்தில் நீள நிலேத்திருந்தது.

அரசாங்கப் பலதுறை அலுவலர்

பிற்காலச் சோழராட்சியில் பலதுறை அலுவலர் இருந்தனர் என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. நாட்டை அளந்ததைக் கண்காணித்து உண்மை கண்டவர் **நாடு கண்காட்சி** எனப்பட்டனர். வரிகளால் வருந்தொகையைக் கணக்கிற் பதிந்துகொண்டவர் **வரியிலார்** என்று பெயர் பெற்றனர். கணக்கிற் பதிந்துள்ள தொகையை இன்ன இன்ன காரியங்கட்குச் செலவிட வேண்டும் எனப் பாகுபாடு செய்த அதிகாரிகள் **வரிக்குக் கூறுசெய்வார்** எனப்பட்டனர். அரசிறை நீங்கிய ஊர்களிலிருந்து வரவேண்டிய பிற வரிகளுக்குக் கணக்கு வைத்திருந்தவர் **புரவுவரி** எனப் பெயர் பெற்றனர். அரசனுக்கு ஒவ்வொரு ஊரிலிருந்தும் வருவதற்குரிய நிலவரிக்குக் கணக்கு வைத்தவர் **வரிப் புத்தகம்** எனப்பட்டனர். நாடோறும் அரசாங்கத்தில் நடந்த நிகழ்ச்சிகளே எழுதிவைத்தவன் **பட்டோலேப் பெருமான்** எனப்பட்டான். கிராம சபைகளிலிருந்தும் பிற அதிகாரிகளிடமிருந்தும் வந்த ஓலேகளேப் படித்து அவற்றிற்குத் தக்கபடி விடையெழுதி விடுதலும், அரசன் ஆணேத் திருமுகத்தை ஊர்ச் சபைகட்கும் அதிகாரிகட்கும் எழுதி விடுதலும் ஆகிய வேலேயில் ஈடுபட்டவன் **விடையதிகாரி** எனப் பெயர் பெற்ருன். அரசன் கூறிய ஆணேகளேக் கேட்டுவந்து திருமந்திர ஓலேயிடம் தெரிவித்த அதிகாரி **திருவாய்க் கேள்வி** எனப்பட்டான். அவன் கூறிய ஆணேகளே ஓலேகளில் எழுதினவன் **திருமந்திர ஓலே** எனப் பெயர் பெற்ருன்.

அரசன் கடமைகள் : அறங்கூறவையம்

இருவர் தமக்குள் மாறுபட்டு வந்தால் அவர்களது வழக்கைத் துலைநாவன்ன நடுவுநிலை பிறழாதிருந்து கேட்டு, நன்கு ஆராய்ந்து உண்மை தெரிந்து, முடிவாகத் தீர்ப்புக்கூறும் இடமே **அறம்கூறு அவையம்** என்பது. இந்த அவையத்திலிருந்தவர் கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவற்றிற் சிறந்த சான்ரோர் ஆவர். அரசனே இவர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்திவந்தான். இவர்கள் அறநெறி தவருது நீதி வழங்கவேண்டும் என்பது அரசனது அவாவாகும். வேந்தன் குடிகட்கு நீதி வழங்குதலை முதன்மையான பணியாகக் கருதிஞன் என்பதை,

> "அறநிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி மெலிகோல்
> செய்தே ஞகுக."

என்று ஓர் அரசன் சூளுரை கூறுவதிலிருந்து நன்கறியலாம் அன்ரோ?

நீர்வளம்

உயிர் வாழ்க்கைக்கு உணவுப் பொருள்களும், உண்ணீரும் இன்றியமையாதவை. அவ்விரண்டிற்கும் மழை இன்றியமையாதது. எனவே, நாடு நீர்வளம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்; அரசன் நீர்ப்பாசன வசதிகளை உண்டுபண்ணுதல் வேண்டும். பொறுப்புள்ள அரசன் தன் நாட்டிற் பாயும் ஆற்றை அகலப்படுத்தல் வேண்டும்; உயர்ந்த கரைகளை அமைத்தல் வேண்டும்; ஆற்றிலிருந்து நீரை நாடு முழுவதும் கொண்டுசெல்லத் தக்க பெரிய கால்வாய்களையும் சிறிய கால்வாய்களையும் வெட்டுவித்தல் வேண்டும்; இடமறிந்து ஆற்றில் அணைகட்டி நீர் வெவ்வேறு வழிகளில் பிரிந்து பாயுமாறு செய்தல்

வேண்டும். கரிகாற் சோழன் காவிரிக்குக் கரையிடுவித்தான் என்பது இலக்கியம் கண்ட உண்மையாகும். அவன் அவ்வேலைக்கு ஆயிரக்கணக்கானவரை அமர்த்தியிருந்தான். 'இராஜன் வாய்க்கால்', 'வைரமேகன் வாய்க்கால்', 'வீரசோழன் ஆறு', என்று நமது நாட்டில் வழங்கிவரும் வாய்க்கால்களும் ஆறுகளும் அரசர் பெயர்களைத் தாங்கியிருத்தல் கொண்டே பண்டையரசர் நீர்ப்பாசனத்திற்கொண்ட முயற்சியை நன்கறியலாம். காவிரியிற் கட்டப்பட்டுள்ள 'கல்லணை' பண்டைச் சோழ மன்னன் கட்டிய அணையாகும். அதன் உறுதிப்பாட்டைக் கண்டு இக்காலப் பொறிவல்லுநர் வியப்படைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"நிலம் எங்கெங்குச் சிறிது பள்ளமாக இருக்கின்றதோ அங்கங்கு நீர்நிலையங்கள் அமையுமாறு கரைகளைக் கோலித் தளை செய்தல் வேண்டும். அவ்வாறு தளை செய்த அரசர்களே இவ்வுலகில் தம் பெயரை நிறுத்தித் தளை செய்தவராவர். அங்ஙனம் நீர்நிலைகட்குத் தளையிடாதவர், தம் புகழைத் தளை செய்யாதவராவர்," [6] என்று குடபுலவியனார் என்ற புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தலை நோக்கி, அரசனது கடமை எவ்வாறு வற்புறுத்தப்பட்டது என்பதை நன்குணரலாம்.

கல்வி

"தாயும் தான் ஈன்ற மக்களுள் கல்வியாற் சிறப்பெய்தியோனையே பெரிதும் விரும்புவாள்; ஒரு குடியிற்பிறந்த

---

[6] "நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே;
தள்ளா தோரிவண் தள்ளா தோரே."—புறநானூறு, 18.

பலருள்ளும் 'மூத்தவன் வருக' என்று சொல்லாது, கல்வியறிவுடையவன் சென்ற நெறியே அரசனும் செல்வான்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன் கற்பின், மேற்குலத்தவன் 'இவன் கீழ்க்குலத்தவன்' என்று கருதாது, கல்வியின் பொருட்டு அவன் அறிவின் வழிப்படுவான். ஆதலின் எவ்வாறுயினும் கற்றல் ஒருவற்கு நன்று,'' என்று சங்ககாலத்துப் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாடியுள்ளான்.

இதிலிருந்து கல்வியின் சிறப்பும், அக்காலத்தரசர் கல்வியின் இன்றியமையாமையை நன்கறிந்தவர் என்பதும், கற்றவரைப் போற்றிவந்தனர் என்பதும் நன்குணரலாம்; உணரவே, அவ்வரசர் பெருமக்கள் தங்கள் நாடுகளில் மக்கள் கல்வி அறிவு பெறுதலுக்கு ஆவன செய்தனர் என்பதைக் கூறுதே அறிந்துகொள்ளலாமன்றே?

சங்ககாலக் கல்விநிலை

சங்ககாலத்தில் செய்யப்பட்டனவாகக் கூறப்படும் செய்யுட்கள் தமிழகத்திலிருந்த எல்லா வகுப்பினராலும் பாடப்பட்டன என்பது தெரிகிறது. கபிலர் போன்ற அந்தணரும், கோப்பெருஞ் சோழன் போன்ற முடி மன்னரும், சீத்தலைச் சாத்தனர் போன்ற வணிகரும், கோவூர்கிழார் போன்ற வேளாளரும், மருத்துவம் முதலிய பல தொழில் மக்களும் இலக்கண இலக்கியம் பயின்று கவிபாடும் ஆற்றல் பெற்று மன்னர்களால் மதிக்கப் பெற்றனர். அக்காலப் பெண்கல்வியின் நிலை, கருதி மகிழத்தக்கது: பூதபாண்டியன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு போன்ற அரசமாதேவியார், பாரிமகளிர் போன்ற குறுநில மன்னருடைய பெண்மணிகள், பேய்மகள் இளவெயினி போன்ற வேட்டுவமகளிர், காவற்பெண்டு போன்ற செவிலித்தாயர், வெண்ணிக்குயத்தி

யார் போன்ற குயவர் குலப் பெண்மணிகள்,—ஆக, அரசமாதேவியர் முதல் யாவரும் எவ்வித வேறுபாடும் இன்றிக் கல்விகற்று நன்கு மதிக்கப்பெற்றனர் என்பதைச் சங்கச் செய்யுட்களால் அறியலாம். குறத்தி, வேட்டுவச்சி, குயத்தி என்னும் பெண்பாற் புலவர்தம் பாக்களின் சொற்செறிவையும் பொருட்செறிவையும் நோக்கின், அவர்தம் வியத்தகு பெரும்புலமை நன்கு விளங்கும். அத்தகு புலமையை அப் பிற்பட்ட மரபினரும் அக்காலத்துப் பெற்றனர் எனின், சங்ககாலத் தமிழகத்தில் கல்வி எங்ஙனம் பரப்பப்பட்டுவந்தது என்பதை நாம் உய்த்துணரலாம்.

காக்கைபாடினியார் என்ற பெண்பாற் புலவர் சங்ககாலத்தில் யாப்பிலக்கணம் செய்தவராகக் காணப்படுகின்றனர். யாப்பருங்கல விருத்தியுரைப் பகுதிகள், தொல்காப்பியர் போன்ற பேராசிரியர் பதவியில் வைத்து எண்ணத்தக்க இலக்கண அறிவு பெற்றவர் காக்கை பாடினியார் என்னும் உண்மையை உணர்த்துகின்றன. இவ்வுயரிய நிலையிற் பெண்பாற் புலவர்கள் விளக்கம் பெற்றிருந்தனர் எனின், அக்காலப் பெண்கல்வியின் நிலையை யாதெனக் கூறுவது!

கூலவாணிகன், மருத்துவன், அறுவைவாணிகன், கணியன், கொல்லன், வண்ணக்கன் (நாணய பரிசோதகன்) எனப்பட்ட பல தொழில் மக்களும் தொடக்கக் கல்வி கற்றதோடமையாது, கவிபாடவும், காவியம் பாடவும் வல்லராயிருந்தனர் எனின், அம்மக்கள் கல்வியிற் கொண்ட ஊக்கத்தை நாம் நன்கறியலாம்.

இங்ஙனம் அக்கால மக்கள் கல்வியிற் சிறப்புப் பெறப் **பள்ளிகள்** பல இருந்திருத்தல் வேண்டும். வாணிகத்திற்குக் கணக்கும் எழுத்தறிவும் இன்றியமையாதன. தமிழர் திரைகடலோடித் திரவியம்

தேடியவர் ஆதலின், எண்ணிலும் எழுத்திலும் சிறந்திருந்தனர். அவர்களை அம்மேனிலைக்குக் கொணரத்தக்க பள்ளிகள் நாட்டில் பல்கி இருந்திருத்தல் இயல்பேயாகும். அக்கால ஆசிரியர் 'கணக்காயர்' எனப்பட்டனர். 'மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர்' என வரும் தொடரை நோக்குக.

மருத்துவன் தாமோதரனுர் என்பவர் மருத்துவக் கலையில் வல்லவர்; **கணியன்** பூங்குன்றனுர் சோதிடக் கலையில் வல்லுநர்; தமிழக் **கூத்தனுர்** என்பவர் நடனப் புலவர். எனவே, சங்க காலத்தில் மருத்துவக்கலை, வானக்கலை, நடனக்கலை போன்ற கலைகள் சிறந்திருந்தன என்பதும் அறியப்படும். இவை அனைத்திற்கும் அடிப்படைப் பொதுக்கல்வி இன்றியமையாதது ஆதலின், அது சங்ககாலத் தமிழகத்தில் நன்கு வளர்க்கப்பட்டதெனத் துணிந்து கூறலாம்.

அரசரும் புலவரும்

தமிழில் வல்ல புலவர்களைத் தமிழரசர்கள் நன்கு மதித்துப் போற்றினர்; அவர்கட்குப் பெரும்பொருளை வாரி வழங்கினர்; அவர்கள் மனம் நோவாதபடி நடந்து வந்தனர்; அவர்கள் கூறிய அறிவு மொழிகளை ஏற்று நடந்தனர். புலவர்களுக்கு ஊர்களை வழங்கிய அரசர் சிலர்; தமது நாட்டு வருவாயில் ஒரு பகுதியைப் பரிசாக அளித்த அரசர் சிலர். அரசர்கள் இவ்வாறெல்லாம் நடக்கக் காரணம் என்ன? புலவர்களே நாட்டுச் செல்வம்; பொதுமக்கள் மதிப்பைப் பெற்றவர்; நாட்டு மக்கட்குக் கல்வி பரப்பிவந்தவர் ஆதலின், அரசர்கள் அவர்களிடம் பெருங்கொடையாளராய் விளங்கினர்.

இசையும் கூத்தும்

சங்ககால அரசர்கள் இசையில் வல்ல பாணரையும் நடனத்தில் வல்ல கூத்தரையும் நன்கு ஆதரித்தனர்; பொற்பூ, பலவகை அணிகள், சிறந்த ஆடைகள் முதலியவற்றைப் பரிசாக நல்கினர். அரசர்களும் பெருஞ் செல்வர்களும் இங்ஙனம் விரிந்த மனப்பான்மையுடன் நடந்தமையாற்ருன் இசை, கூத்து முதலிய கலைகள் நாட்டில் நல்வளர்ச்சி அடைந்தன.

தொழில்கள்

தொழில்களைப்பற்றிய பல செய்திகளைப் பின்வரும் ஐந்தாம் பிரிவில் விரிவாய்க் காணலாம். அரசர் உதவியின்றி நாட்டில் எத்தொழிலும் மேன்மையுருது. அரசர் பயிர்த்தொழில் வளம்பெற ஆறுகளையும், குளங்களையும் செப்பனிட்டனர்; நெய்தல் முதலிய தொழில்கள் பெருக அயல்நாட்டு வாணிகத்தை மேற்கொண்டனர்; தொழிற் சிறப்பைப் பலவாருகப் பெருக்க அயல்நாட்டுத் தொழிலாளரை வரவழைத்துத் தமிழ்த் தொழிலாளருடன் சேர்ந்து தொழில் செய்ய இடமளித்தனர். மகதநாட்டு வினைஞரும் மராட்டக் கம்மரும் அவந்தி நாட்டுக் கொல்லரும் யவன நாட்டுத் தச்சரும் இந்நாட்டில் இருந்து தமிழ் வினைஞருடன் தொழில்வளம் பெருக்கினர்.

நீண்டகாலமாகத் தமிழகம் கடல் வாணிகத்திலும் உள்நாட்டு வாணிகத்திலும் பெயர் பெற்றதென்பது உலகறிந்த செய்தியாகும். ஒரு நாடு செல்வ வளத்திற் செழிப்புறவேண்டுமாயின், அந்நாட்டில் உழவு, வாணிகம் முதலிய தொழில்கள் உயர்நிலையில் இருத்தல்வேண்டும் என்பதைத் தமிழரசர் நன்கறிந்திருந்தனர்.

போர்த்திறம்

தங்கள் நாட்டைப் பாதுகாப்பதில் தமிழரசர் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். போருக்கென இலக்கணம் வகுத்தவன் தமிழன் எனின், தமிழ் மக்களது போர்த் திறத்தை என்னென்பது! அவர்கள் அதனை ஒரு கலை யாகக் கருதினர் என்பது தெரிகிறது.

ஒரு நாட்டின்மீது படையெடுக்கக் கருதும் அரசன், ஆனிரைகளையும் அந்தணரையும் பெண்களையும் குழந்தை களையும் நோயாளிகளையும் பிள்ளை பெருதோரையும் அப்புறப்படுத்தல் கருதிப் பறையறைவிப்பான்; பறை யறைவதை உணரமாட்டாத பசுக்களைக் கைக்கொண்டு பாதுகாக்கக் கருதித் தன் வீரரை ஏவுவான். அவர்கள் பசுக்களைக் கவரும் முயற்சி **வெட்சி** எனப்படும். பசுக்களுக்குரியார் பசுக்களை மீட்கப் போர்புரிதல் **கரந்தை** எனப்படும். பகைவர் நாட்டைக் கொள்ளக் க்ருதி வஞ்சி சூடி, அரசன் படைகளுடன் மேற் சென்று போரிடல் **வஞ்சி** எனப்படும். இங்ஙனம் வந்தவனை மாற்றரசன் எதிர்நின்று தாக்குதல் **காஞ்சி** எனப்படும். மதிலின் புறத்தே பகையரசர் முற்றுகை யிட்டுப் போர்புரிதல் **உழிஞை** எனப்படும். மதிலுக்குள் நின்று அரசன் தன் வீரருடன் மதிலைக் காத்துப் போர் புரிதல் **நொச்சி** எனப்படும். போர்க்களத்தில் நடக்கும் கடும்போர் **தும்பை** எனப்படும். வெற்றி பெறுதல் **வாகை** எனப்படும். இவை அனைத்திற்கும் முறையே வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை என்பன அடையாளப் பூக்கள். தமிழ் வீரர்கள் இவற்றை அணிந்தே போர்புரிந்தார்கள். இந்த எண்வகைப் போர்முறைகள் ஒவ்வொன்றிலும் பல படிகள் உண்டு. அவை எல்லாம் **துறைகள்** எனப்படும். இந்தப் போர் இலக்கணங்களைத் தொல்காப்பியப் புறத்திணையியலிலும்,

புறநானூற்றிலும், புறப்பொருள் வெண்பாமாலையிலும் பரக்கக் காணலாம். இப் போரிலக்கணம் ஒன்றுகொண்டே பழந்தமிழரது போர்த்திறத்தை நன்கறியலாம்.

போரில் வல்லுநராக இருந்தும், தமிழரசர் இயலும் அளவு அயல் அரசர்களுடன் போரின்றி வாழவே விரும்பினர். தகடூரை ஆண்ட அதியமான் இக்கருத் துடனே தொண்டைமானிடம் ஔவையாரைத் தூது விடுத்தான் என்று கருத இடமுண்டு. மேலும் யானைப் படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படைகள் இருப்பினும், நிலையான வெற்றி அப்படைகளால் வருவ தன்று. அஃது அறவழிகளாலேயே உண்டாவது,[7] என் னும் உண்மையை, அறிஞர்கள், போரை விரும்பிய அரசர்க்குச் சில சமயங்களில் அறிவுறுத்தியதும் உண்டு.

அரசர்தம் பொறுப்புணர்ச்சி

வலியத் தன் நாட்டின்மீது படையெடுத்துவந்த அரசன்மீது இரங்காத தமிழரசன் இல்லை; இரங்கிப் பின் சினந்து சூள் உரைத்துப் போருக்குச் செல்லுதல் வழக்கம். அச்சூளுரையிலிருந்து அவனது நாடு காக்கும் பொறுப்பையும் ஒழுக்க மேம்பாட்டையும் நாம் நன்குணர லாம். பூதபாண்டியன், “என்மீது போருக்கெழுந்த பகைவரை வெல்லேனாயின், நான் என் மனைவியை விட்டு நீங்கினேனாகுக; கொடுங்கோல் செய்தேனாகுக; உயிர் நண்பர் நட்பினை இழந்தேனாகுக; பல உயிரையும்

---

[7] “கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்.”
—புறநானூறு, 55.

பாதுகாக்கும் அரசர் குலத்திற் சிறந்த பாண்டியநாடு காக்கும் காவலை விடுத்துப் பிறருடைய வன்புலங்களைக் காக்கும் காவற்கண் இக்குடிப்பிறப்பினீங்கி யான் பிறப்பேனாகுக," என்று சூளுரைத்தான். இதிலிருந்து அவ்வரசன் தன் மனைவிமீது கொண்ட அன்பு, அவனது செங்கோற் பற்று, நண்பர்மீது கொண்ட உண்மைப்பற்று, 'உயிர்களைப் பாதுகாப்பதே அரசனது கடமை' என்ற உணர்ச்சி முதலியன நன்கு புலனாகின்றன அல்லவா? "யான் என்மீது போருக்கெழுந்த பகைவரை வெல்லேனாயின், எனது குடை நிழற்கண் வாழ்வார், தாங்கள் சென்றடையும் நிழல் காணாது, 'எமது வேந்தன் கொடியன்' என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிப் பழிதூற்றும் கொடுங்கோலை உடையேனாகுக," என்று தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் கூறிய சூளுரையிலிருந்து, 'குடிகள் மனம் வருந்தாத முறையில் ஆள்பவனே அரசன்' என்னும் உண்மையை அவன் நன்குணர்ந்திருந்தான் என்பது ஐயமற அறியக் கிடத்தல் காண்க.

"பகைவரை யான் வெல்லேனாயின், உண்மை அன்பு கொள்ளாத பொதுப் பெண்டிரது மார்பிடத்து என் மாலை துவள்வதாக," என்று சோழன் நலங்கிள்ளி உரைத்த சூளுரையிலிருந்து அவனது நல்லொழுக்கத்தை நன்கறியலாம்.

கண்ணகிக்குத் தவறிழைத்த பாண்டியன் இறந்தான் என்பதும், மதுரை எரிவாய்ப்பட்டது என்பதும் சாத்தனார் கூறக்கேட்டு மனம் வருந்திய செங்குட்டுவன், "மழையாகிய வளம் பெய்யாது மறையின், மிகப் பெரிய அச்சம் உண்டாகும்; யாதானுமொன்றால் உயிர்கள் வருத்தமுறின், அதனாலும் மிகப் பெரிய அச்சமுண்டாகும்; குடிகளைக் காத்தலை மேற்கொண்டும் கொடுங்கோலுக்கு அஞ்சி மக்களைக் காக்கும் நல்ல அரசர் குடியில் பிறத்தல் துன்பந்

தருவதல்லது போற்றத் தக்கதன்று,'' என்று கூறினன் எனின், அவ்வேந்தனது ஆட்சிப் பொறுப்புணர்ச்சி அங்கைக் கனிபோல் ஐயமற விளங்குகிறதன்றோ ?

இத்தகைய நன்மக்கள் ஆட்சியில் தமிழர்கள் நல் வாழ்வு வாழ்ந்தனர் என்பது கூருதே அமையும். பிற் காலச் சோழராட்சியிலும் குடிகள், நாட்டுக் கலைகளை நன்கு வளர்த்துக்கொண்டு இன்பந்துய்த்தனர் என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

வரிகள்

ஆட்சி உருளை இயங்குதற்குப் பொருள் வேண்டு மன்றோ ? அக்காலத்தில் குடிகள் செலுத்திய **பலவகை** வரிகளும், வாணிகப் பொருள்களுக்குரிய **சுங்கம்,** சிற்றரசர் கட்டிவந்த **திறை** ஆகியவைகளும் அக்கால அரசாங்க வருவாய்களுட் சிறந்தவை என்னலாம்.

குடிகள் செலுத்திய வரிகளுள் சிறந்தது **நிலவரி** யாகும். பல்லவர் காலத்தில் (கி. பி. 300—900) தமிழகத்தில் பலவகைப்பட்ட வரிகள் அரசாங்கத்துக்குக் குடிகளால் செலுத்தப்பட்டன. மரங்களைப் பயிரிட வரி, கள் இறக்க வரி, மருந்துச் செடிகளைப் பயிரிட வரி, மருக்கொழுந்து முதலிய மணச்செடிகளைப் பயிரிட வரி எனப் பலவகை வரிகள் செலுத்தப்பட்டன. ஆடு மாடுகளால் பிழைப்பவர், ஓடக்காரர், தரகர், செக்கார், நூல் நூற்போர், ஆடை நெய்பவர், ஆடை விற்போர், வலைஞர், நெய் விற்போர், கத்தி முதலிய போர்க்கருவிகள் செய்பவர், பறையடிப்போர் முதலிய பலதிறப்பட்ட தொழிலாளரும் வரி செலுத்தினர்.

பிற்காலச் சோழர் காலத்தில் நிலவரி நெல்லாகவேனும் பணமாகவேனும் வாங்கப்பட்டது. மூன்றும் ஆண்டு தொடங்கிய பின்னும் கடந்த ஈராண்டிற்கும் நிலவரி கொடாதவரின் நிலங்கள் ஊர்ச்சபையினரால் கவரப்

பட்டு விற்கப்பட்டன. பல்லவர்கால வரிகளுட் பெரும் பாலன சோழர் காலத்தும் இருந்தன. **கடன், இறை, பாட்டம், பூட்சி, காணம்** என்பன அக்கால வரிகளை உணர்த்திய மொழிகள் ஆகும். ஊர்களைக் காக்கத் தனி வரி இருந்தது. அது 'நாடு காவல்' எனப் பெயர் பெற்றது.

நில அளவு

குடிகளிடமிருந்து நிலவரி வாங்குதற்காக நிலம் அளக்கப்பட்டது. பிற்காலச் சோழர் காலத்தில் பலமுறை நிலம் அளக்கப்பட்டது. அந்நாளில் நிலத்தின் மிகச் சிறிய பகுதியும் விடாமல் நுட்பமாக அளக்கப்பட்டது என்பது, "இவ்வூரை ஊடறுத்துப் புறவூர்க்கு நீர்பாயும் வாய்க்கால்களால் நிலம் மூன்றே அரைமாவின்கீழ் அரையே மாகாணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒரு மாவும்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் நன் கறியலாம்.[8]

இறையிலி

சைவ, வைணவக் கோயில்களுக்கு வரியின்றி அளிக் கப்பட்ட நிலங்கள் 'தேவதானம்' எனப்பட்டன. சமண, பௌத்த கோவில்கட்கு அளிக்கப் பெற்றவை 'பள்ளிச் சந்தம்' எனப் பெயர்பெற்றன. பிராமணர்க்கு விடப் பட்டவை 'பிரமதேயம்', 'பட்டவிருத்தி' எனப்பட்டன. அறநிலையங்கட்கு விடப்பட்ட நிலங்கள் 'சாலா போகம்' எனப்பட்டன. புலவர்க்கு விடப்பட்டவை 'முற்றூட்டு' எனப் பெயர்பெற்றன.

---

[8] S.I.I. IV. 529

நாணயங்கள்

சங்க காலத்தில் தமிழகத்தில் நாணயங்கள் இருந்து வந்தன என்பது இலக்கியங்களால் தெரிகிறது. பல்லவர் காலம் முதல் நாட்டில் வழக்கில் இருந்த நாணயங்கள் கிடைத்துள்ளன. காய்ச்சி உருக்கினும் மாற்றும் நிறையும் குன்றாதது என்று அதிகாரிகளால் ஆராய்ந்து உறுதி செய்யப்பட்டதற்கு அடையாளமாகத் துளையிடப்பட்ட பொன் 'துளைப் பொன்' எனப்பட்டது. பொன், செம்பு நாணயங்கள் வழக்கிலிருந்தன. அவை 'காசு' எனப் பட்டன. 'காசு' என்பது இன்றளவும் செல்வத்தைக் குறித்து நிற்றலை அறியலாம்.

அளவைகள்

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைகள் இருந்தன. பொன் வெள்ளி முதலிய உயர்ந்த பொருள்கள் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி என்னும் நிறை களால் நிறுக்கப்பட்டன; செம்பு, பித்தளை முதலிய தாழ்ந்த உலோகங்கள் தொடி, கஃசு[9] என்னும் நிறைகளால் நிறுக்கப்பட்டன; 'குடிஞைக்கல்' என்பது அரசாங்க முத்திரை இடப்பெற்ற கல். நெய், பால், தயிர், அரிசி முதலியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்னும் முகக்கும் கருவிகள் கொண்டு அளக்கப்பட்டன. அரசாங்க முத்திரை யிடப் பெற்ற மரக்காலும் இருந்தது. மிளகு, சர்க்கரை முதலியன பலத்தால் நிறுக்கப்பட்டன. தோரை, விரல், சாண், முழம் என்பவை கொண்டு நீட்டல் அளவை மதிப்பிடப் பெற்றது.

---

[9] தொடி - ஒரு பலம். கஃசு - காற்பலம்.

ஆவணக் களரி

ஒவ்வோர் ஊரிலும் எழுதப்படும் ஆவணங்களை (பத்திரங்களை)க் காப்பிட ஆவணக்களரி இருந்தது. என்றும் நிலைத்துப் பொது நன்மையைக் குறிக்கத்தக்க ஆவணங்கள் கோவிற் சுவரில் பொறிக்கப்பட்டன. அவ் வாறு பொறிக்கப்பட்டவையே, நம் முன்னோர் வரலாற்றை எழுத இக்காலத்திற் பெருந்துணை செய்யும் கல்வெட்டுக் கள் ஆகும். ஆவணங்கள் பெரும்பாலும் பனையோலை களில் வரையப்பட்டன. ஆவணக்களரியில் ஆவணப்படி களை வைத்தற்கென்று ஓர் அறை இருந்தது. மூல ஓலை யின் பிரதி 'படி ஓலை' எனப்பட்டது.

கிராம ஆட்சிமுறை

நமது தமிழகத்தில் சங்ககால முதல் சிற்றூர் (கிராம) ஆட்சி நடைபெற்றுவந்ததென்னலாம். பல்லவர் காலத்தி லும் பிற்காலச் சோழர் காலத்திலும் ஊர்தோறும் கிராமசபைகள் இருந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. ஓர் ஊரைப் பற்றிய எல்லாச் செயல் களையும் அவ்வூரவையார் நடத்திவந்தனர். அவையின் உறுப்பினர் அனைவரும் கிராமமக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவரேயாவர். ஒவ்வொரு பெரிய கிராமமும் பல குடும்பு (wards) களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ் வொரு குடும்பிற்கும் பிரதிநிதியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப் பெற்றூர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் ஊரில் இருந்த குடும்புகட்கேற்பச் சிலராகவேனும் பலராக வேனும் இருந்து செயலாற்றிவந்தனர்.

தேர்ந்தெடுக்கப்பெறுவோர் தகுதிகள்

ஊரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் உரிமையுடையோர் காணிக்கடன் செலுத்தற்கேற்ற கால்

வேலி நிலமும், சொந்த மனையும் உடையராக இருத்தல் வேண்டும்; கல்வி கேள்விகளில் சிறந்தவராகவும் செயலாற்றும் திறனுடையராகவும் அறவழியிற் பொருளீட்டித் தூய வாழ்க்கை நடத்துவோராகவும் இருத்தல் வேண்டும்; முப்பத்தைந்துக்கு மேல் எழுபத்தைந்து வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்; மூன்ருண்டுகட்கு உட்பட்டு எந்த நிறைவேற்றுக்கழகத்திலும் உறுப்பினராக இருந்திராதவராக இருத்தல் வேண்டும். இவ்விதிகள் சோழர் காலக் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கத் தகுதியற்றவர்

எந்த அவையிலேனும் உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதவர், ஐவகைப் பெரும் பாதகங்கள் செய்தவர், கிராமக் குற்றப் பதிவு நூலில் பதிவு செய்யப் பட்டவர், பிறர் பொருளை வவ்விஞேர், கள்ளக் கையெழுத் திட்டவர், குற்றத்திற்காகக் கழுதைமீது ஏற்றப்பட்டவர், கையூட்டு வாங்கியவர், கிராமத்துரோகி என்று கருதப் பட்டவர், இப் பிழைபட்டவர்கட்கு உறவினர், ஆகியோர் தம் வாழ்நாள் முழுமையும் ஊரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

தேர்தல் முறை

தேர்வுக்குரிய நாளில் அரசாங்க உயர் அலுவலர் ஒருவர் அவை கூடுதற்குரிய இடத்தில் ஊரார் அனைவரையும் கூட்டுவர். அக் கூட்டத்தின் நடுவில் குடம் ஒன்று வைக்கப்படும். அங்குள்ள நம்பிமாருட் பெரியவர் ஒருவர் அக் குடத்தை எடுத்து, அதனுள் ஒன்றுமில்லை என்பதை அனைவரும் அறியக் காட்டிக் கீழே வைப்பர். பின்னர் ஒவ்வொரு குடும்பினரும் தமக்குத் தகுதியுடையார் என்று தோன்றுபவர் பெயரைத் தனித்தனி ஓலையில் வரைந்து,

அவ்வோலைகளை ஒன்று சேர்த்து, அக்குடும்பின் பெயர் எழுதப் பெற்ற வாயோலை ஒன்றைச் சேர்த்துக் கட்டி, அவையின் நடுவிலுள்ள குடத்தில் இடுவர். இங்ஙனம் எல்லாக் குடும்பினரும் குடவோலை இட்ட பின்னர், அவையிலுள்ள பெரியவர் சிறுவன் ஒருவனைக் கொண்டு ஓர் ஓலைக்கட்டை எடுத்து அவிழ்த்து வேறொரு குடத்திலிட்டுக் குலுக்குவர்; அச்சிறுவன் குலுக்கப் பெற்ற ஓலைகளிலிருந்து ஒன்றை எடுத்துப் பெரியவரிடம் கொடுப்பான். அவர் அதனைக் கணக்கனிடம் கொடுப்பார். அவன் தன் ஐந்து விரல்களையும் விரித்து அதனை அங்கையில் வாங்கி, அவ்வோலையில் எழுதப்பட்டுள்ள பெயரைக் கூட்டத்தினர் அனைவரும் கேட்கும்படி படிப்பான். பின்பு அங்குள்ள நம்பிமார் அனைவரும் அதனைப் படிப்பார். அப்பெயர் ஓர் ஓலையில் எழுதப்படும். அப் பெயருடையவரே அக் குடும்பிற்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவராவர். இங்ஙனமே பிற குடும்புகளுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஊரவை அலுவல்கள்

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் ஊர் அலுவல்கட்கேற்பப் பல குழுக்களைத் தமக்குள் அமைத்துக் கொள்வர். அக்குழுவினர் சம்வத்சர வாரியர், தோட்ட வாரியர், ஏரி வாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியர் எனக் குழு அமைப்பிற்கேற்பப் பெயர் பெறுவர். நியாய விசாரணை செய்தலும் அறநிலைய ஆட்சியை மேற்பார்த்தலும் **சம்வத்சரவாரியர்** கடமை யாகும். நிலத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் கவனித்தல் **தோட்டவாரியர்** கடமையாகும். ஊராரிடமிருந்து வரியாகவும் தண்டமாகவும் வாங்கப் பெற்ற காசுகளை ஆராய்வது **பொன் வாரியர்** கடமையாகும். ஏரி, குளம் முதலிய நீர் நிலை

களைப் பாதுகாத்தலும் விளைவிற்கு வேண்டும் நீரைப் பாய்ச்சுவித்தலும் **ஏரிவாரியர்** கடமையாகும். குடிகளின் வருவாயில் ஆறில் ஒரு பங்கை அரசனுக்கும், ஏனை ஐந்து பங்கை உரியவருக்கும் சேர்ப்பித்தல் **பஞ்சவாரியர்** கடமையாகும். இவ்வுறுப்பினர் அனைவரும் ஓராண்டு முடியக் கிராம வேலைகளைச் செய்வர்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்ருல், தமிழகத்தில் கோனுட்சியே நீண்ட காலமாக நிலவியது என்பதும், அரசன் தன் குடிகளது நல்வாழ்விலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான் என்பதும், அதற்காக நீர்நிலைகளைச் செப்பனிட்டான்—கைத் தொழில்களை வளப்படுத்தினுன்—வாணிகத்தைப் பெருக்கினுன் என்பனவும், அவனது நல்லாட்சியில் பொதுக்கல்வியும் பலவகைக் கலைகளும் வளர்ச்சி பெற்றன என்பதும், அறம்கூறு அவையம், ஆவணக்களரி முதலிய அரசாங்க அலுவலகங்கள் பணியாற்றின என்பதும், தானைத்தலைவர் முதலிய பலவகை அரசியல் அலுவலாளர் அரசாங்கத்தில் வேலை பார்த்தனர் என்பதும், அரசன் போரின் இலக்கணத்தை நன்கறிந்தவன் என்பதும், ஆயினும் இயலும் அளவு அயல்நாட்டு அரசனுடன் ஒற்றுமையா யிருத்தலையே விரும்பினுன் என்பதும், ஒழுக்கத்தை விழுக்கலனுகப் போற்றினுன் என்பதும், அவனது நாட்டுச் சிற்றூர்களில் கிராம சபைகள் இருந்து சீரிய முறையில் ஆட்சி புரிந்தன என்பதும் நன்கறியப்படுகின்றன.

3. வீரம்

முடியுடை மூவேந்தர்

தமிழர் பிற செல்வங்களைப் போலவே வீரச் செல்வத்தையும் நிரம்பப் பெற்றிருந்தனர். அதனுற்றான் இந்தியாவின் பெரும்பகுதியைப் பிடித்தாண்ட மோரியர் காலத்தும், தமிழர் தம் ஆட்சி பெற்று மானவீரராக மாண்புற்றனர். கி. மு. இரண்டாம் நூற்றுண்டின் இடையில் நடு இந்தியாவிற் பேரரசனுக விளக்கமுற்ற **ருத்ரதாமன்** என்ற கலிங்க அரசன் தமிழரசருடன் போரிட்டதாகத் தன் கல்வெட்டிற் குறித்துளன். இவற்றி லிருந்து அப் பண்டைக்காலத்திலேயே தமிழர் பெற்றிருந்த வீரவுணர்ச்சியை நன்கறியலாம்.

வடநாடு சென்ற மூவேந்தர்

கி. மு. இரண்டாம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் வீரமிக்க சோழமன்னன் ஒருவன் இலங்கையைப் பிடித் தாண்டதாக இலங்கை வரலாறு கூறுகின்றது. கி. மு. முதல் நூற்றுண்டினன் என்று கருதத்தகும் **கரிகால் வள வன்** தமிழகத்திற்குப் பேரரசனுக விளங்கியதுடன் வட இந்தியாவிற்கும் சென்றுன். அங்கிருந்த வட நாட்டரசர் அவனை வரவேற்று நண்பராயினர். மகதநாட்டு மன்னன் தன் நட்புக்கு அறிகுறியாகப் பட்டிமண்டபத்தையும், வச் சிரநாட்டு வேந்தன் கொற்றப்பந்தரையும், அவந்தி அரசன் தோரணவாயிலையுங் கொடுத்துத் தமிழரசனைச் சிறப்பித் தனர். கரிகாற் சோழன் தன் வடநாட்டுச் செலவிற்கு அறிகுறியாக இமயமலையில் புலி இலச்சினையைப் பொறித்து மீண்டனன் என்று 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' சிறப்பாக எடுத்தோதுகின்றது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்னும்

பாண்டியன் வடநாடு சென்று, தன்னை எதிர்த்த ஆரியப் படைகளைப் புலிக்கூட்டத்துள் சிங்கம் பாய்வதை ஒப்பப் பாய்ந்து பகைவரைச் சிதறடித்தான்; அதனால் 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' எனத் தமிழ்ப் புலவ ராலும் குடிகளாலும் பாராட்டப் பெற்றான். சங்ககாலச் சேர வேந்தருட் பேரரசனாக விளங்கிய **செங்குட்டுவனும்** ஆரணர் உற்ற வீரபத்தினியாகிய கண்ணகிக்கு உருவம் செய்யத் தக்க கல்லை இமயத்திலிருந்து தேர்ந்தெடுத்து வருவதற்காக வடநாடு சென்றான். அப்பொழுது கனகன், விசயன் முதலிய ஆரிய அரசர்கள் வட கோசலத்தில் அவனைத் தாக்கினர். பலநூறு கற்களுக் கப்பால் தன் நாட்டை விட்டுச் சென்ற சேரன், அப்பகை வரை அவர்கள் நாட்டிலே எதிர்த்துப் பதினெட்டு நாழி கைக்குள் பொருது வென்றான் எனின், அம்மம்ம! அப் பேரரசனது பேராற்றலை என்னென்பது! அவன் முன்பு ஒருமுறை தன் தாயின் உருவச் சிலையைக் கங்கை நீராட்டுதற்பொருட்டும் வடநாடு சென்று மீண்டுள்ளான்.

தமிழர் போர்க்கலை

இங்ஙனம் முடியுடை மூவேந்தரும் வடநாட்டரசர் மதிக்கத்தக்க பேராற்றல் பெற்று விளங்கினர் என்பதைச் சங்க நூல்களால் அறியலாம். சங்ககாலத் தமிழர் போர்த் துறையில் எவ்வளவு சிறந்திருந்தனர்—அதனை எங்ஙனம் ஒரு கலையாக வளர்த்திருந்தனர் என்பதைத் தொல் காப்பியம் **புறத்திணையியல்** நன்கு விளக்கும். வெட்சி–கரந்தை–வஞ்சி–காஞ்சி–நொச்சி முதலிய திணைகளும், ஒவ்வொரு திணையிலும் காணப்படும் பல துறைகளும் **தமிழர் போர்க்கலைப் பண்பினை** உள்ளங்கை நெல்லிக் கனி என விளக்கவல்லன ஆகும். இவை முன்னரே குறிக்கப்பெற்றுள்ளன.

தமிழ் மறவர்

அரசர் வீரராக விளங்கினர் ; வெற்றி பெற்றனர் எனின், இக்கூற்றின் கருத்தென்னே? அவர்தம் வீரர் உண்மைப் போர்வீரராக விளங்கினர் என்பதே பொருளாகும். தமிழ்வீரர் **மறவர்** எனப்பட்டனர். மறம்—வீரம் ; போர் எனில், தாங்கொணு மகிழ்ச்சியுற்றுக் கூத்தாடுதல் அவர்தம் பண்பு. மார்பு முழுவதும் துளைக்கப்பட்டுப் புண்படுதலையே பண்டை வீரர் **விழுப்புண்** என்றனர். 'விழுப்புண் படாத நாள் எல்லாம், இருந்தும் பயனற்ற நாட்களேயாகும்', என்று அவர் கருதினர். ஒரு போரில் தந்தை இறந்தான் என்று மைந்தன் அஞ்சி வாளா இருந்திலன் ; தானும் போர்க்கோலம் கொண்டு, போர்க்களம் சென்று, தன் ஆற்றல் தோன்றப் பொருது வெற்றி கண்டான் ; இன்றேல், தன்னளவில் வெற்றி பெற்று விழுப்புண் உற்றுப் போர் முனையில் மடிந்தான். அங்ஙனம் அவன் இறந்தானே என்று, அவன் இளையர் ஓடி ஒளிந்திலர் ; 'எமது தாய் நாட்டைக் காப்பது எமது கடமை' என்பது அவ்வீரர்தம் உள்ளத்திருந்த உயர் கொள்கையாகும். அதனல் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புதல் போல மறக்குடி இல்லங்களிலிருந்து மறவர் ஒருவர் பின் ஒருவராகப் போருக்குப் போய்க்கொண்டே இருந்தனர்.

மறவர் சீற்றம் கொள்ளின், அவர் கண்கள் கோவைப் பழங்களை மானும். அவர் சொற்கள் கடுஞ்சொற்களாக வெளிப்படும். முடியுடைப் பேரரசர் பெண் கேட்பினும், தமக்கு விருப்பமில்வழிக் கொடார் ; அதனுற் போர் மூளுவதெனினும் தயங்கார் ; முன் வைத்த காலைப் பின் வையார். தமக்கு விருப்பமற்ற பேரரசனிடமிருந்து பெண் பேசவரும் தூதனைப் பார்த்து மறவர் சீறி மறுத்துப் பேசுதல், **மறம்** என்று பிற்காலக் கலம்பக நூல்களிற் பெயர் பெற்றுள்ளது.

இம்மறவரைப் பற்றிய சுவை பயக்கும் செய்திகள் பல வற்றைப் புறநானூறு முதலிய சங்க நூல்களிற் கண்டு களிக்கலாம்.

மறக்குடி மகளிர்

மறவர் போர்த்துறையில் இத்தகைய ஊற்றம் பெற முதற் காரணராக இருந்தவர் **மறக்குடி மகளிரேயாவர்.** வாழையடி வாழையாக வந்த வீர உணர்ச்சி அவர்களிடம் பொலிவுற்றுக் காணப்பட்டது. அவர்கள் தம் கடமை களையும் தந்தையர், அரசர், பிள்ளைகள் கடமைகளையும் நன்கு உணர்ந்திருந்தனர்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."[1]

என்று மறக்குடி மகள் பாடினள் எனின், அத்தகைய சீரிய கடமை உணர்ச்சியையுடையவள் பெற்றெடுத்த மைந்தர் எங்ஙனம் வினையாற்றியிருப்பர் என்பதை நாம் எண்ணி யறியலாம். மறக்குடி மங்கை நல்லாள் ஒருத்தியின் வீர உணர்ச்சியை இங்குக் காண்க: ஒரு முறை நடந்த போரில் அவள் தந்தை தன் ஆற்றலை உணர்த்தி மடிந்தான். அவனுக்காகக் கல் நாட்டி அதனில் அவன் பெயரும் பீடும் பொறிக்கப்பட்டன. பின்னர் அவளது கொண்கன் போர்க் கோலம் பூண்டு புறப்பட்டான்; அவன் தன் ஆற்றல் தோன்ற மொய்யமர் உடற்றி இறுதியில் பகைவர் கணைக்கு இலக்காகி இறந்தான். பின்னொரு முறை நடைபெற்ற போரில் அவள் உடன்பிறந்தார் வீரப்போர் புரிந்து மொய்ய

[1] புறநானூறு, 312.

விந்தனர். பின்னர் அவளது வீட்டில் அவள் பெற்ற சிறுவன் ஒருவனே எஞ்சியிருந்தான். அவ்வீரத்தாய் அவனை அழைத்துத் தன் மறக்குடிப் பண்பை அவனுக்கு விளங்க உரைத்துப் போர்க்கோலம் பூணச் செய்து, அவன் கையில் வேல் கொடுத்து வாழ்த்தி வழிவிட்டாள். அம்மாதரசியின் வீர உணர்ச்சி இருந்தவாறு என்னே!

மறக்குடி மைந்தன் போர்க்களம் குறுகினான். "குல விச்சை கல்லாமற் பாகம்படும்" என்பது அனுபவ வாக்கன்றோ? அவன் போதிய போர்ப் பயிற்சி பெறாத இளைஞனாயினும், மறக்குடி மகனாதலின், வீர உணர்ச்சி கொண்டு தன்னை மறந்து போர் செய்தான். அவன் ஆற்றலைக் கண்டு அரசனும் பாராட்டினான். பகைவர் அவனைக்கண்டு பொறாமை கொண்டனர்; அவன்மீது அம்பு மழை பொழிந்தனர். காளையின் உடல் முழுவதும் கணைகள் துளைத்தன; குருதி பெருக்கெடுத்தது. எனினும், இளைஞன் இறுதி வரை போராடி, முகமலர்ச்சியுடன் உயிர் துறந்தான்.

தன் வீரமகன்-குடிக்கென்றிருந்த ஒப்பற்ற மைந்தன், அரசன் வியந்து பாராட்ட அமர் முருக்கி ஆருயிர் துறந்தான் என்பதைக் கேள்வியுற்ற வீரத்தாய் போர்க்களம் புகுந்து, தன் மைந்தனது உடலைக் காண விழைந்தாள்; அங்ஙனமே போர்க்களம் குறுகினாள்; அறிந்தவர் காட்டத் தன் மைந்தனது மாண்புற்ற உடலைக் கண்டாள். சுற்றியிருந்த வீரர்கள் அவனது போர்த் திறனைப் பாராட்டிப் பேசினர். வீரத்தாய் மைந்தனது உடலை நன்கு பார்த்தாள்; அவனது வீரப் போரினை எண்ணி மகிழ்ந்தாள்; அவனைப் பெற்றெடுத்த தன் நல்வினைப் பயனைப் பாராட்டினாள்; அப்பொழுது அவள் வாயிலிருந்து சில சொற்கள் வெளிப் போந்தன. அவை இவ் வெண்பாவாக வுருக்கொண்டன:

"கன்னின்றான் எந்தை; கணவன் களப்பட்டான்;
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்;—பின்னின்று

கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் ஏறு. ”[2]

வீர பத்தினி

கண்ணகியின் வீரத்தை அறியாதார் உளரோ? பெரு வீரனுன ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முற்ற ஆராயாது தன் கணவனைக் கள்வனென்று தவருகக் கருதிக் கொல்வித்தான் என்பதை அறிந்தவுடன், அப்பத்தினி பொங்கி எழுந்தாள்; ‘அடாது செய்த அரசனைப் படாத பாடு படுத்துவேன்,’ என்று வஞ்சினம் கூறிப் பாண்டியனைக் காணச் சென்ருள். கண்ணீர் ஆருய் வடிய, கூந்தல் அவிழ்ந்து புரள, கையில் ஒற்றைச் சிலம்பினைத் தாங்கியவளாய்ச் சென்ற அவ்விள நங்கையைக் கண்டு அரண்மனைக் காவலன் அஞ்சி அலறினுன்; அவளைக் கண்டவுடன் அவனுக்குக் காளி முதலிய மாதர் எழுவர் நினைவு தோன்றிற்று. அவன் காட்ட அரசனைக் கண்ட ஆரணங்கு, சிறிதும் அச்சமின்றித் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைப் பாண்டியன்முன் மெய்ப்பித்தனள், அவனைத் தன் தவறுணர்ந்து இறக்கச் செய்தனள் எனின், அவளது வீரத்தினை என்னென்பது! அவ்வீரமகள் அவ்வளவில் நின்றனளா? இல்லை! இல்லை!! அவள் ‘மதுரையை அழித்திடுவேன்’ என்று முழக்கமிட்டு மதுரையை எரியுண்ணச் செய்தாள். அவளது வீரத்தை வியந்து இளங்கோவடிகள் **வீரபத்தினி** என்று பாராட்டினுர். பெரு வீரனுன சேரன் செங்குட்டுவன் அப்பத்தினியினது வீரத்தைப் பாராட்டிக் கோவிலெடுத்து அவளை வழிபட்டான் எனின், அத்தமிழ் மகளது வீரத்துக்கு வேறென்ன சான்று வேண்டும்?

---

[2] புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப் படலம், 22.

வாதாபி வென்ற பரஞ்சோதியார்

சங்க காலத்துக்குப் பின்னர்ப் பல்லவர் காலத்துத் தமிழர் வீரத்திற் சிறந்திருந்தனரா ? எனின், 'ஆம்' என்று தயங்காது விடை கூறலாம். கி. பி. 7-ஆம் நூற்றுண்டினனுன நரசிம்மவர்ம பல்லவனிடம் சேனைத் தலைவராயிருந்த **பரஞ்சோதியார்** ஒப்பற்ற தமிழர். அவர் காலத்தில் மேலைச் சாளுக்கிய மன்னனுன **இரண்டாம் புலிகேசி** என்பவன் பெரும்படையுடன் போந்து பல்லவ நாட்டைத் தாக்கினன். நரசிம்மன் கோட்டைக்குள் பதுங்கிக்கொண்டான். புலிகேசி பல்லவனை எளியவனுக எண்ணி இறுமாந்து பல்லவநாட்டு உட்பகுதிக்குள் நுழைந்தான்; தன் நாட்டுக்குப் பல நூறு கல் தொலைவில் இருந்த பகைவர் நாட்டிடைத் தன் படையுடன் சுற்றினன். அவ்வமயம் பல்லவன் தன் படையை நாற்புறமும் ஏவித் திடீரெனச் சாளுக்கியப் படையை வளைத்துக்கொண்டான். சாளுக்கியப் படைக்கு சாளுக்கிய நாட்டிலிருந்து உதவி வரத்தக்க வழியும் பல்லவனுல் அடைக்கப்பட்டது. இவ்வாறு பகைவர் நாட்டில் பகைவர்க்கிடையில் அகப்பட்டுக்கொண்ட சாளுக்கியன் தன்னுலானவரை கடுமையாகப் போரிட்டான். எனினும், 'பகைவர் நாட்டின் நடுப் பகுதியில் அறிவின்றி அகப்பட்டுக்கொண்டோம்' என்ற அச்சத்தாலும் உணவுக் குறை உண்டானதாலும் அவன் சேனை சின்னபின்னப்பட்டுச் சிதறியது. புலிகேசி பல்லவனுக்கு ஆற்றுதுய்த் தப்பித் தன் நாடு நோக்கி ஓட முயன்றுன். பல்லவன் அவனைத் துரத்திச் செல்லுமாறு தன் தானைத் தலைவராகிய **பரஞ்சோதியார்க்கு** ஆணை பிறப்பித்தான். பரஞ்சோதியார் புலிகேசியைத் துரத்தி வடக்கு நோக்கிச் சென்றுர். புலிகேசி தன்னுட்டிற்குள் புகுந்தான். பரஞ்சோதியார் அவனை அங்கும் விடாது துரத்திச் சென்று, பலவிடங்களில் அவனை வென்று, முடிவில் அவன் தலை

நகரான **வாதாபியை** அடைந்தார்; அடைந்து, அந் நகரத்தின் பல பகுதிகளை அழித்தார்; சாளுக்கியனுடைய அரச பண்டாரத்தைக் கைப்பற்றினார்; அரசனுடைய யானை கள், குதிரைகள் முதலியவற்றைக் கைக்கொண்டார். இறுதியில் தம் வெற்றிக்கு அறிகுறியாக நகரத்தின் நடுப் பகுதியில் **வெற்றித் தூண்** ஒன்றை நாட்டினார். இவ் வெற்றி நிகழ்ச்சி கி. பி. 642-இல் நடைபெற்றது. வாதாபி அதுமுதல் பதின்மூன்று ஆண்டுகள் பல்லவர் ஆட்சியில் இருந்தது.

ஹர்ஷனையும் எதிர்த்துப் பேராற்றலோடு விளங்கிய இரண்டாம் புலிகேசியைப் பரஞ்சோதியார் வென்ற காரணத்தால் தென்னாட்டு மக்கள் அவரைப் பல நூற் றுண்டுகள் மறவாது போற்றிவந்தனர். அவரே அறுபான் மும்மை நாயன்மாருள் "வாளால் மகவரிந்து ஊட்ட" முயன்றவரான **சிறுத்தொண்ட நாயனார்** ஆவர். பரஞ் சோதியாரின் வாதாபிப் படையெடுப்பை உணர்ந்த சோழப் பேரரசின் அமைச்சரான சேக்கிழார் பெருமான், அப் படையெடுப்பின் விவரங்களைத் தாம் இயற்றிய திருத் தொண்டர் புராணத்திற் குறித்தனர்.[3] அதனால் பரஞ் சோதியார் பெயர் எக்காலத்தும் நின்று நிலவ இடம் உண்டாயிற்று.

நெல்வேலி வென்ற நெடுமாறன்

பரஞ்சோதியார் காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன் னன் **நெடுமாறன்** என்பவன். அவன் மிகச் சிறந்த வீரன். அவனுடைய போர்ச் செயல்கள் வேள்விக்குடி, சின்ன

---

[3] "மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்.
—சிறுத்தொண்டர் புராணம், 6.

மனூர்ப் பட்டயங்களிற் குறிக்கப்பட்டுள்ளன. அவனது ஆட்சி இறுதியில் 'வடபுலத்து முதல் மன்னன்' பெரும் படையுடன் வந்து பொருதான். பாண்டியன் அவனை நெல் வேலி என்ற இடத்திற் போரிட்டு வெற்றி கண்டான். அப் பொழுது நடைபெற்ற போரைப்பற்றிய நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் ஐந்து செய்யுட்களில் அழகாகக் கூறியுள்ளார்.[4] 'வடபுலத்து முதல்மன்னன்' இரண்டாம் புலிகேசியின் மகனை முதலாம் விக்கிரமாதித்தனாக இருத்தல் வேண்டு மென்று அறிஞர் கருதுகின்றனர். உண்மை எதுவா யினும், நெடுமாறன் வடநாட்டுப் பேரரசன் ஒருவனைக் கடும்போரில் முறியடித்தான் என்பது உண்மையாகும். இதிலிருந்து பாண்டியனது வீரத்தை நன்கறியலாம் அன்றோ? இதனையே சுந்தரர்,

"நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்."

என்று பாராட்டலாயினர்.

பேரரசன் இராஜராஜன்

பிற்பட்ட சோழருள் சோழப் பேரரசினைக் கிருஷ்ணை யாறுவரை விரிவாக்கிய பெருமை இராஜராஜனைச் சேர்ந்ததென்பது அறிஞர் அறிந்த உண்மையாகும். பெரு வீரனான இராஜராஜன் சேரநாடு, பாண்டியநாடு, இலங்கை முதலிய நாடுகளை வென்றான்; கங்கநாடு குடகு நாடுகளை அடிப்படுத்தினான்; வடக்கே சாளுக்கிய நாடுவரை தன் பெரு நாட்டை விரிவாக்கிப் பேரரசனாகப் பொலிவுற்றான். அவன் சிறந்த கடற்படை பெற்றிருந்தான். அதன் உதவியால் மாலத்தீவுகளையும் வென்றான் எனின், அத்தமிழரசனது கடற்படைச் சிறப்பினையும் பேராற்றலையும் என்னென்பது! அவன் வீரத்துடன் அரசியல் சூழ்ச்சியிலும் வல்லவனாக

[4] நெடுமாறர் புராணம், 3-7.

விளங்கினன் ஆதலின், கீழைச் சாளுக்கியரைத் தன் வயப் படுத்தித் தன்மகளைக் கீழைச் சாளுக்கிய இளவரசனுக்கு மணம் செய்வித்தான்; பின்னர் அவனையே அரசனாக்கித் தன் செல்வாக்கினைக் கோதாவிரி யாறுவரை நிலைநிறுத்தி னன். சுருங்கக் கூறின், இக் காலத்தார் போற்றிக் கூறும் ‘இராஜ தந்திரம்’ என்னும் ‘அரசியல் சூழ்ச்சி’ கி. பி. 10-ஆம் நூற்றாண்டிலேயே நம் தமிழரிடம் சிறந்து காணப் பட்டதென்பதற்கு இஃதொரு தக்க சான்றாகும்.

இராஜேந்திர சோழன்

‘புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?’ என்னும் நமது நாட்டுப் பழமொழிக்கேற்ப, இராஜராஜன் தவ மைந்த னன இராஜேந்திரன், தந்தையைப் போலவே பெருவீரனாக விளங்கினன். அவன் வடநாடு சென்று, எதிர்த்தோரை வென்று, கங்கை நீரைக் கொணர்ந்து, **கங்கை கொண்ட சோழன்** எனப் பெயர் பெற்றான்; பின்னர்க் கிழக்கிந்தி யத் தீவுகளைக் கைப்பற்றத் தன் கடற்படையை அனுப்பி வெற்றி பெற்றுக் **‘கடாரம் கொண்டான்’** என அழியாப் புகழ் பெற்றான். இவற்றால், தமிழரசர் வரலாற்றில் இராஜேந்திரன் வரலாறு மணிமகுடமாக இலங்குவதாகும். தமிழர் பேரரசு கட்டியாளத் தகுதியுடையவர் என்பதையும், தேவைப்படின், கடல் கடந்து நாடுகளை வெல்லவும் வல்லவர் என்பதனையும் உலகறியச் செய்த பெருமை இராஜேந்திர னுக்கு உரியதாகும்.

இராஜேந்திரன் வீரமக்கள்

இராஜேந்திரன் மக்களாகிய **இராஜாதிராஜன், இராஜேந்திர தேவன், வீரராஜேந்திரன்** என்பவர் மூவரும் தம் தந்தையும் பாட்டனும் அமைத்த சோழப் பெருநாட்டைச் சாளுக்கியரிடமிருந்து காக்கவே தம் ஆயுட் காலத்தைச் செலவழித்தனர்; அம்முயற்சியில் இராஜாதி

ராஜன் இறந்தான். அப்பொழுது இராஜேந்திர தேவன் போர்க்களத்திலேயே மூடிசூடி (வீராபிஷேகம் செய்து கொண்டு) சாளுக்கியருடன் போர் புரிந்து வெற்றி பெற்ருன். வீரராஜேந்திரன் சாளுக்கியருடன் கிருஷ்ணை யாற்றங்கரையில் பல இடங்களில் போர்புரிந்து, தமிழர் வீரத்தை நிலைநாட்டினன்.

சுந்தர பாண்டியன்

பிற்காலப் பாண்டியருள் **சடையவர்மன் சுந்தர பாண்டியன்** (கி. பி. 13-ஆம் நூற்ருண்டு) குறிக்கத்தக்க பெருவீரன். அவன் சோழப் பெருநாட்டை ஆலைக்கரும்பு போல அலைத்து, நெல்லூர்ப் பகுதிகளிலிருந்த தெலுங்க அரசர்களை வென்று, நெல்லூரில் வீராபிஷேகம் செய்து கொண்டான். அவன் இலங்கையையும் அடிப்படுத்தினன்.

தளவாய் அரியநாதர்

சோழ பாண்டிய அரசுகள் வீழ்ச்சியுற்றுத் தமிழகத்தில் விஜயநகர ஆட்சி தோன்றிய பிற்காலத்தில் (கி. பி. 16-ஆம் நூற்ருண்டில்) **அரியநாத முதலியார்** என்பவர் பெரு வீரராகத் திகழ்ந்தார்; அச்சுததேவ ராயர் பாராட்டித் தளவாய்ப் பட்டம் தரத்தக்க நிலையில் விளக்கமுற்ருர்; விசுவநாத நாயக்கருடன் தென்னுடு போந்து, தென்னுட்டில் நாயக்கர் அரசினை ஏற்படுத்தப் பெருந்துணைவராக இருந்தார்; நாட்டில் பாளையப்பட்டுகளை அமைத்துச் சிற்றரசர்களையும் தானைத்தலைவர்களையும் பாளையப்பட்டுத் தலைவர்களாக்கி, நாட்டின் காவல் குலையாதவாறு செய்தார்; தென்னுட்டில் இருந்த குழப்பங்களை அடக்கி அமைதியான வாழ்க்கை நடைபெறச் செய்தார். சங்ககாலத் தமிழர் வீரம், ஆண்மை, ஆட்சித்திறன் முதலியவற்றிற்கு இடைக் காலத்தில் பரஞ்சோதியாரும் பிற்காலத்தில் தளவாய் அரிய நாத முதலியாரும் சிறந்த எடுத்துக்காட்டாவர்.

4. வாழ்க்கை

இல்வாழ்க்கை

பழந்தமிழ் மக்கள் இல்வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினர். அக்காலத்தில் அன்பினுல் பிணைக்கப்பட்ட காதல்மணம் பெருவழக்குடையதாக இருந்தது. அத்தகைய காதல் மணமே சிறந்ததென்று அக்காலப் புலவர்கள் கருதினுர்கள்போலும்! அவர்கள் அதற்கெனப் பல துறைகளை வகுத்து இலக்கணமும் இலக்கியமும் செய்துள்ளனர். தொல்காப்பியம் அகத்திணையியல், களவியல், கற்பியல் முதலியன காதல் மணத்தைப் பற்றிப் பேசும் இலக்கணப் பகுதிகளாகும்; அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியன அம்மணம் பற்றிப் பேசும் இலக்கியமாகும். சங்ககாலத்திற்குப் பின்பு பெற்ருேர் முயற்சியால் நடைபெறும் இக்கால மணமே பெருவழக்குப் பெறலாயிற்று. இவ்வுண்மையைக் காரைக்காலம்மையார், திலகவதியார் வரலாறுகள் நன்குணர்த்துவனவாகும். தலைவனும் தலைவியும் உயிரும் உடலும்போல ஒன்றி வாழ்ந்தனர்; விருந்தினரைப் பேணினர்; உலக இன்பங்களைக் குறைவறத் துய்த்தனர். ஒழுக்கந் தவறி நடந்த தன் காதலனைக் காதலி தன் அன்புரையினுல் நல்வழிப்படுத்தினுள்; தன் குற்றத்தைத் தானே உணர்ந்து வருந்துமாறு செய்தாள். இதற்குக் கோவலன் வருத்தவுரையே ஏற்ற சான்ருகும். கணவனும் மனைவியும் முதுமை அடைந்த பிறகு உள்ளத் துறவு பூண்டு இறை வழிபாட்டில் மிகுதியாக ஈடுபட்டனர்.

பொருளீட்டும் முயற்சி

ஒருவன் தன் திருமணச் செலவிற்கும், பிற அறச் செயல்கட்கும் தானே பொருளீட்டுதல் வேண்டுமென்பது

அக்காலக் கொள்கையாக இருந்தது. முன்னோர் தேடி வைத்த செல்வத்தை வைத்துச் செலவழித்தல் இழிவெனக் கருதப்பட்டது. ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழில் செய்து பொருளீட்ட வேண்டுமென்பது அக்காலத்தார் கருத்தாகும். அதனாற்றான் 'இரத்தல்' இழிவெனப்பட்டது. பசுவுக்கு நீர் வேண்டுமென்று இரப்பதும் இழிவாகக் கருதப்பட்ட[1]தெனின், மனிதன் தனக்கென இரத்தலை இழி வெனக் கூறல் வேண்டுமோ? தான் செல்லும் திசையினால் வீழ்ந்து தன் இடப்பக்கத்தே கிடக்கும் பன்றியைச் சிறிதும் கண்ணெடுத்துப் பாராமல் அடுத்த நாள் ஒரு பெரிய யானையுடன் போரிட்டு, அதனைத் தன் வலப்பக்கத்தில் வீழ்த்தி அதனையே உணவாகக் கொள்கின்ற புலிபோன்ற பெருமுயற்சியுடையாரையே அக்கால மக்கள் மதித்தனர். உதவி பெறத் தக்கவர் இன்னவர் என்று **மணிமேகலை**[2] கூறுகிறது. இவர் ஒழிந்தார் அனைவரும் முயன்று பொருள்தேடற் குரியவர் என்று அக்காலத்தினர் கருதினர்.

உதவி

மேலே கூறப்பெற்ற மக்கள் உதவிபெறத் தக்கவர். அவ்வுதவிதானும் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டதே யன்றிப் பயன் கருதிச் செய்யப்பட்ட தன்று. அருளுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது

---

1 "ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவி னிளிவந்த தில்." —திருக்குறள்

2 "காணார் கேளார் கால்முட மானோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோய் உற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள்" (காதை 28, அடி 222–5)

ஈகையாதலின், ஈதலை அக்காலத்தார் அனைவரும் கைக் கொண்டிருந்தனர்.

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

என்று உணவளித்தவர் பாராட்டப்பெற்றனர்; வள்ளல்கள் புலவர் பெருமக்களால் ஏத்தெடுக்கப்பெற்றனர்.

ஒற்றுமை

பழங்கால மக்கள் ஒற்றுமைப்பட்ட வாழ்க்கையையே பெரிதும் விரும்பினர். அவரவர் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டு பொருளீட்டி, ஒருவர்க்கொருவர் வேண் டும்பொழுது உதவி, மன ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். அவர் மிக்க முயற்சியுடையவர் ஆதலின், திரைகடலோடித் திரவியம் தேடினர். அங்ஙனம் அயல் நாடுகளிற் சென்று தங்கி அவ்வந் நாட்டு மக்களுடன் உளங்கலந்து பழகி வாணிகஞ் செய்துவந்தமையால், "**யாதும் ஊரே, யாவரும் கேளீர்**" என்னும் விரிந்த கொள்கையைப் பரப்பினர்.

சங்ககாலப் புலவர்க்குள் இருந்த மன ஒற்றுமை வியத்தற்குரியது. "புலவர் காய்ச்சல்" அக்காலத்தில் இல்லை. நிறைகுடம் தளும்பாதன்றோ? புலவர் ஒருவரை ஒருவர் தம் பாக்களிற் குறித்துள்ளமை படித்து மகிழ்தற் குரியது. நல்லந்துவனார், கபிலர், பரணர் என்ற புலவர்கள் பிற புலவர்களால் பாராட்டப்பெற்றுள்ளனர். புலவர்க்கும் புரவலர்க்கும் இருந்த மனவொற்றுமை போற்றற்குரியது. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தான் என்பதைக் கேள்வி யுற்றதும் ஓடோடிச் சென்று அவனுடன் வடக்கிருந்து உயிர்நீத்த புலவர் பலர். அவன் இறந்தபின் அவன் சொல்லியவாறு அவனது நடுகல்லினிடம் சென்று வடக் கிருந்து உயிர் நீத்த பொத்தியாரது மன வொற்றுமையை

என்னெனப் பாராட்டுவது! பாரி இறந்த பின்னர் அவன் மகளிரை அழைத்துச் சென்று குறுநில மன்னர்களிடம் உதவிபெற விரும்பிய கபிலர்க்கும் பாரிக்கும் இருந்த மன வொற்றுமையை எவ்வாறு விளக்கிக் கூறுவது!

துறவு வாழ்க்கை

தமிழகத்தில் இந்து சமயத்தையும் பௌத்த, சமண சமயங்களையும் சேர்ந்த துறவிகள் நெடுங்காலமாகவே இருந்துவந்தனர். அவர்கள் இல்லறத்தால் நன்கு மதிக்கப்பெற்றனர்; உபசரிக்கப்பெற்றனர். அரசருள் பெரும்பாலர் எல்லாச் சமயத் துறவிகளையும் நன்கு மதித்து ஆதரவு நல்கினர். செங்குட்டுவன் துறவிகளிடம் அன்புடன் நடந்துகொண்டான் என்பது சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. காபாலிகர், மாவிரதியர் முதலிய சைவசமய துறவிகளிடம் பல்லவர்கால மக்கள் மிகுந்த பயபக்தியுடன் நடந்துகொண்டனர் என்பது பெரிய புராணத்திற் குறிக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழ மன்னர்கள் கருவூர்த் தேவர் முதலிய துறவிகளிடம் பேரன்பும் பெருமதிப்பும் காட்டி நடந்துகொண்டனர் என்பது இலக்கியத்தாலும், கல்வெட்டுக்களாலும் அறியப் படும் உண்மையாகும்.

சமயங்களின் வரலாறு

சங்ககாலத்தில் தமிழகத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் என்னும் நான்கு சமயங்கள் சிறப் பிடம் பெற்றிருந்தன. நான்கும் அக்காலத்தில் ஓரளவு ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தன. அரசர்கள் அவ்வச் சமயக் கொள்கைகளை நாட்டிற் பரப்ப உரிமையளித்தனர். மக்கள் தத்தம் விருப்பப்படி வெவ்வேறு சமயத்தினராயிருந்தனர்; எனினும், ‘யாவரும் தமிழர்’ என்ற உணர்ச்சியோ

டிருந்தனர். செங்குட்டுவன் **சைவன்**; அவன் தம்பியா ரான இளங்கோவடிகள் **சமணர்**; அவர் இருவர்க்கும் நண்பரான சாத்தனர் **பௌத்தர்**. எனினும், மூவரும் மிக்க ஒற்றுமையுடன் மனங்கலந்து பழகினர்.

இத்தகைய மன ஒற்றுமை பல்லவர் காலத்திற் கெட்டது. சமயப்பூசல்கள் தோன்றின. அரசர்கள் சமயச் சார்பு கொண்டனர். அதனல் நாட்டிற் சமயப் போராட்டம் தலைதூக்கியது. இறுதியில் சமணமும் பௌத்தமும் செல்வாக்கை இழந்தன; சைவமும் வைணவமும் வளர்ச்சி பெற்றன. இவ்வளர்ச்சி, பிற்காலச் சோழர் காலத்தில் மேலும் வளர்ந்தது. சைவ, வைணவ இலக்கியங்கள் பல்லவர் காலமுதல் பெருகலாயின. பன்னிரண்டாம் நூற்ருண்டு முதல் சைவசித்தாந்த நூல்களும் உருப் பெறலாயின; நாடெங்கும் சைவ வைணவ மடங்கள் பெருகின; சமயத் துறவிகள் பெருகினர். பல்லவர்-சோழர் காலங்களில் சமய உணர்ச்சி வெள்ளம் ஆற்று வெள்ளம் போல நாட்டிற் பெருக்கெடுத்தது. வானளாவிய விமானங் களையும் கோபுரங்களையும் கொண்ட கோவில்கள் புதியன வாகத் தோன்றின; பல புதுப்பிக்கப்பட்டன. அவற்றிற்கு மானியங்கள் நிறைய விடப்பட்டன. விஜயநகர அரசர் களின் ஆட்சிக் காலத்தில் சமய உணர்ச்சி குன்ருதிருந்தது.

ஒழுக்கம்

யாவரும் பாராட்டத்தக்க முறையில் நன்னெறி பற்றி ஒழுகுதல் **ஒழுக்கம்** எனப்படும். அங்ஙனம் ஒழுகுதல் தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். யாவரிடத்தும் இனிமையாகப் பேசுதல், பிறர்க்கு இன்ன செய்யாமை, உண்மை பேசுதல் முதலிய உயர்குணங்களையுடைமையே 'ஒழுக்கம்' எனலும் தவருகாது. இத்தகைய ஒழுக்கமே

ஒருவர்க்கு நற்பயன் தரவல்லது. அதுவே ஒவ்வொருவரும் பெறத்தக்க பேறு என்பது ஆன்றோர் கருத்து.

" பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை "

என்பது தமிழ் மறையாகும்.

இந்நல்லொழுக்கத்தை எல்லாச் சமயங்களும் வற்புறுத்துகின்றன. ஏன்? அருட்பேற்றிற்கு அடிப்படை நல்லொழுக்கமாதலின் என்க.

' நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் '

என வருதல் காண்க. மன-மொழி-மெய்களால் தூய்மை உடையவராய் நடந்துகொள்பவர் அருட் பேற்றிற்கு (நன்றிக்கு) அருகராவர் என்பது எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொண்ட உண்மையாகும். அதனையே திருவள்ளுவரும் இங்கு வற்புறுத்தியுள்ளார்.

இறை வழிபாடு

தமிழர் உலகத்தைப் படைத்த வாலறிவன்மீது நம்பிக்கை கொண்டவர்; அவனை வழிபட்டுப் பேறு பெற்றவர். அவ்வழிபாடு மிகவுயரிய மனவழிபாடு முதல் உயிர்க்கொலை வழிபாடு ஈருக அவரவர் அறிவு நிலைக்கேற்பப் பலவகைப்பட்டிருந்தது. சிறந்த அறிஞர்கள்,

"..................................யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும் " [3]

என இறைவனை வேண்டினர். "பிறவாமை வேண்டும்; பிறந்தால் உன்னை மறவாமை வேண்டும்" என்று காரைக்கால் அம்மையார் போன்ற அடியார்கள் வேண்டினர்.

---

* [3] பரிபாடல் 5.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றிலிருந்து—பழந்தமிழர் காதல் மணம் செய்துகொண்டனர், பிற்காலத்தில் பெற்ருேர் முயற்சியால் நடைபெறும் மனமே பெருவழக்குப் பெற்றது, காதலர் இருவரும் கருத்தொருமித்து வாழ்ந் தனர், முதுமையில் உள்ளத்துறவு பூண்டனர், பொருளீட் டலிற் பெருமுயற்சி உடையவர், திரை கடலோடித் திரவியம் தேடியவர், உழைத்துப் பொருள் தேடியவரையே மதித்தவர், உறுப்புக்குறை உடையார்க்கும் துறவிகட்கும் அருள் உணர்ச்சியால் உதவி செய்தவர், அங்ஙனம் செய்தல் இல்லறத்தார் கடமை என்பதை உணர்ந்தவர், ஒற்றுமை உணர்ச்சி மிக்கவர், உலகத்தவரைத் தம் கேளிராகக் கருதிய நன்னெறியாளர், சமயப் பற்றுடையவர், ஒழுக் கத்தை உயிரினும் உயர்வாகக் கருதியவர், இவ்வுலக இன் பத்தை மட்டும் கருதி இறைவனை வழிபடாதவர் என்பன நன்குணரக்கிடத்தல் காண்க.

இத்தகைய விழுமிய வாழ்க்கை கொண்ட தமிழ் மக்கள் எங்ஙனம் தொழில் புரிந்தனர்—பலதிறப்பட்ட நாகரிகக் கலைகளில் நல்லுணர்ச்சி பெற்றிருந்தனர் என்பனவும், அவற்றை எங்ஙனம் போற்றி வளர்த்தனர் என்பதும் அடுத்துவரும் பகுதிகளிலிருந்து தெளிவுறத் தெரிந்துகொள்ளலாம்.

5. தொழில்கள்

உழவுத்தொழில்

உலகில் உள்ள பலதிறப்பட்ட தொழில்களுள் என்றும் அழியாத தொழில் **உழவுத் தொழில்** ஆகும். மக்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டும் உணவுப் பொருள்கள் அனைத்தும் இத்தொழிலாற்ருன் உண்டாகின்றன. மேலும் நாட்டிற்குச் செல்வ வளத்தை உண்டாக்கும் வாணிகப் பொருள்களுள் உழவினுல் உண்டாகும் விளைபொருள்களே சிறந்தனவாகும். இத்தகைய உயிர்நாடியான தொழிலே நமது நாட்டில் பெருவாரியாக நடைபெற்றுவந்தது. நம் முன்னேர் இத்தொழில் முறைகளை நன்கறிந்திருந்தனர் என்பதற்குத் திருக்குறளில் உள்ள 'உழவு' என்னும் அதிகாரமே தக்க சான்ருகும். உழவுத் தொழிலில் ஈடு பட்டவருள் நிலமுடைப் பெருமக்கள் 'உழுவித்துண்ணும் வேளாளர்' என்றும், நிலம் பயிரிடும் உழவர் 'உழு துண்ணும் வேளாளர்' என்றும் கூறப்பட்டனர். உழுவித் துண்ணும் வேளாளர் 'வேளிர்' எனப்பட்டனர். அவர் களிடம் அரசர்கள் பெண் கொண்டனர்; அவர்களை அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளில் அமர்த்திவந்தனர்.

நெய்தல் தொழில்

பண்டைத் தமிழகத்தில் உழுதொழிலுக்கடுத்து உயர்ந்த தொழிலாகக் கருதப்பட்டதும், பெருவாரியாகச் செய்யப்பட்டதும் நெய்தல் தொழிலே ஆகும். பருத்தி யினுல் மட்டுமன்றிப் பட்டினுலும் ஆடைகள் நெய்யப் பட்டன. எலி மயிர், ஆட்டுமயிர் முதலியவற்றினுலும் கம்பளங்கள் முதலியன நெய்யப்பட்டன. ஆடைகளில் பல நிற ஆடைகள் நெய்யப்பட்டன ஆடைகளில் பூத்

தொழில் செய்யும் வழக்கமும் இருந்துவந்தது. "நீலக் கச்சைப் பூவாராடை" என வரும் புறநானூற்று (274) அடியைக் கொண்டு இதனை உணரலாகும்.

ஆடைகள் பலவேறு வகையினவாக நெய்யப்பட்டமை யால் அவற்றின் வகைகள் பலவாயின. கோசிகம், பீதகம், பச்சிலை, அர்த்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி என 36 வகைப்பட்ட ஆடைகள் சிலப்பதிகார உரையிற் காட்டப் பட்டுள்ளன. சங்க காலத்தில் மிக நுட்பமாக நெய்யப்பட்ட மெல்லிய ஆடைகள் பாம்பின் சுட்டை போலவும், மூங்கி லில் உரித்த மெல்லிய தோல் போலவும், புகையைப் போலவும், பால்நுரை போல்வும், தெளிந்த வெண்ணிறமான அருவி நீர்வீழ்ச்சி போலவும் இருந்தன என்பது பண்டை நூல்களால் தெரிகிறது.

சங்ககாலப் பெண்மணிகளுட் சிலர் நூல் நூற்குந் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் 'பருத்திப் பெண்டிர்' எனப்பட்டனர்.

ஆடைக்கு **அறுவை** என்னும் பெயரும் அக்காலத்தில் வழங்கியது. நெய்கின்ற தறிகளிலிருந்து ஆடைகள் தனித்தனியே **அறுக்கப்**படுதலின், 'அறுவை' எனப் பெயர் பெற்றன. தறிவேலை செய்தோர் 'அறுவையர்' எனப்பட்டனர். இவ்வேலைக்காரர் பலநிறங்களைச் சேர்த்து மிக நுண்ணிய இழைகளைக்கொண்டு ஆடை நெய்வதில் வல்லுநராயிருந்தனர். இக்காலத்தில் பட்டுநூற்காரர் தெரு, சேணியர் தெரு என்றிருத்தல் போல, அக்காலத்தில் இத்

தொழிலாளர் இருந்த தெரு 'அறுவையர் மறுகு' எனப் பட்டது.

"கண்ணுழை கல்லா நுண்ணூல் கைவினை
வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகு"
(காதை 28, அடி 52-3)

எனவரும் மணிமேகலை அடிகளைக் காண்க.

பொற்கொல்லத் தொழில்

சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் பொற்கொல்லத் தொழில் மிகவுயரிய நிலையில் இருந்தது என்பதற்குப் பழந் தமிழ் நூல்களிலும் பிற்காலக் கல்வெட்டுகளிலும் காணப் படும் எண்ணிறந்த அணிவகைகளே சான்றாகும். பொன்னைக்கொண்டே செய்யப்படும் அணிகள் ஒரு வகைய; மணிக்கற்களைப் பதித்துச் செய்யப்படும் அணிகள் மற்றொரு வகையின. உயர்தரக் கற்கள் பதித்துச் செய்யப்பட்ட அரசனது முடியினும் உயர்ந்த அணி யாதுள்ளது? அது மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்டதாக இருத்தல் வேண்டுமன்றோ? அதனைச் செய்பவரும் சங்ககாலத்தில் இருந்தனர் என்பதை,

"...................................வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன்,"

என வரும் சிலப்பதிகாரப் பகுதி உணர்த்துகின்றது.

சங்ககாலப் பெண்கள் கை, கால் முதலிய உறுப்புக் களில் அணிந்துவந்த அணிவகைகள் பலவாகும். பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, காற்சரி என்பன காலில் அணியப்பட்ட அணிகளாம். வீரச்சங்கிலி, நேர்ஞ் சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி முதலியன கழுத்தணி களாம். தெய்வவுத்தி, வலம்புரி, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி என்பன தலையலங்கார அணிகளாம். இத்தகைய பலவகை அணிகலன்களின் பெயர்களை நோக்கி, இவற்

றைச் செய்துவந்த அக்காலப் பொற்கொல்லரது தொழில் நுட்பத்தை நாம் நன்குணரலாமன்றோ? அவர் உருக்குத் தட்டார், பணித்தட்டார் என இருவகைப்பட்டனர். உருக்குத் தட்டார் பொன் வேலை செய்தவர்; பணித்தட்டார் மணிகள் பதித்து அணிகள் செய்வதில் கைதேர்ந்தவர்.

அப்பொற்கொல்லர் மாணிக்கம், நீலம், வயிரம் முதலிய மணிகளைப்பற்றிய இலக்கணங்களை நன்கு அறிந்திருந்தனர். இவை பற்றிய தனித்தனி நூல்களும் அக்காலத்தில் இருந்தன என்பது சிலப்பதிகார உரையால் வெளியாகின்றது.

பிறவகைத் தொழில்கள்

கன்னர், செம்பினைக்கொண்டு தொழில் நடத்துவோர், தச்சர், மரத் தொழிலாளர், ஓவியர், சிற்பியர், கட்டடத் தொழிலாளர், கப்பல் கட்டுபவர், துணி தைப்பவர், தோலைக்கொண்டு பல பொருள்களைச் செய்பவர், நெட்டித் தொழிலாளர், முத்துக் கோப்பவர், வளையல்களை அறுப்பவர், பலவகைப்பட்ட இசைக் கருவிகளைச் செய்பவர் முதலிய தொழிலாளர் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. இதனுல் உணவு, உடை, அணி பற்றிய தொழில்களேயன்றி, வேறு பலவகைத் தொழில்களும் அக்காலத்தில் இருந்தன என்பது நன்கு புலனுகின்றது. பாய் மிடைதல், கூடை மிடைதல், மாலை தொடுத்தல் முதலிய தொழில்களும் நடைபெற்றன. போருக்குப் பயன்படும் பலவகைக் கருவிகளையும், மதில்மேலிருந்து போர் செய்தற்குரிய பலவகைப் பொறிகளையும் செய்யப் பண்பட்ட தொழிலாளர் இருந்தனர்.

வாணிகம்

சங்ககாலக் கடல்வாணிகம்

தென்னிந்தியா, கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றுண்டுகட்கு முன்பிருந்தே கடல் வாணிகத்திற் சிறந்திருந்தது. தென்னிந்திய அரிசி, மயில், மிளகு, முத்து முதலியன மேனுடுகட்கும் சீனம் முதலிய கீழ்நாடுகட்கும் ஏற்றுமதியாயின. இவ்வாணிகம் மிக்க செழிப்பாக நீண்ட காலம் நடைபெற்று வந்தது. ரோமப் பேரரசு செழித்திருந்த காலத்தில் மிளகு, யானைத் தந்தம், உயர்ந்த மர வகைகள், மிக மெல்லிய ஆடைகள், முத்துக்கள், பருத்தி முதலியன மேலை நாடுகட்கு ஏற்றப்பட்டன. ரோம ராச்சியத்திலிருந்து தமிழகத்திற்குக் குடிவகைகளும், பவளம், மணப்பொருள்கள், தகரம், ஈயம், வெண்கலம் முதலியனவும் இறக்குமதி செய்யப்பட்டன. கீழ்த்திசைக் கடலிற் பிறந்த பவளமும், ஈழநாட்டு உணவுப் பொருள்களும், கடாரத்தில் உண்டான நுகரும் பொருள்களும், சீனம் முதலிய இடங்களிலிருந்து வந்த கருப்பூரம், பனிநீர், குங்குமம் முதலியனவும் காவிரிப்பூம்பட்டினத்தில் விற்கப் பட்டன என்பதிலிருந்து, அக்காலத் தமிழர் இலங்கை, கடாரம், சீனம் முதலிய கிழக்கு நாடுகளுடன் வாணிகம் நடத்திவந்தனர் என்பது·தெளிவாதல் காண்க.

பிளைநி, தாலமி, பெரிப்ளூஸ் ஆசிரியர் ஆகியோர் வரைந்துள்ள குறிப்புக்களும் சங்கநூற் குறிப்புக்களும் சங்ககாலத்துக் கடல் வாணிகம் சிறப்புற நடந்து வந்ததைக் குறிக்கின்றன. ரோமப் பேரரசனுக்கும் பாண்டியனுக்கும் நட்பிருந் திருத்தல் வேண்டுமென்றும், பாண்டியன் தூதுக் குழு வொன்றை ரோமப் பேரரசனுக்கு விடுத்திருத்தல் வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் நம்புகின்றனர்.

அராபியர், கிரேக்கர், ரோமர், சீனர் முதலியோர் தமிழ் நாட்டுடன் வாணிகம் செய்தனர். அவர்கள் தொண்டி, முசிரி, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய கடற் றுறைப் பட்டினங்களில் மாளிகைகளில் தங்கியிருந்து, கடல் வாணிகத்தை நடத்திவந்தனர்.

அக்காலக் கப்பல்கள்

சங்ககாலத்தில் கடலிற் செல்லும் கலங்கள் பலவகை யின. அவற்றுள் மிகச் சிறியதும் எளியதும் **கட்டுமரம்** எனப்படும். **புணை, பரிசல், தோணி, ஓடம்** என்பன ஒரு வகைச் சிறிய கலங்கள் எனலாம்; **திமில், படகு, அம்பி** என்பன சிறிதளவு பெரிய கலங்கள் போலும்! **வங்கம், கப்பல், நாவாய், கலன்** என்பன அயல் நாடுகட்குச் சென்று மீளும் கப்பல்களாக இருந்திருத்தல் வேண்டும். பெரிய கப்பல் மதில் சூழ்ந்த மாளிகையின் தோற்றத்தை அளித்தது. நான்கு பக்கங்களிலும் நீர் நிரம்பிய கழனிகள் சூழ்ந்திருக்க, நடுவே தனியாகத் தோன்றும் மதிலோடு கூடிய அரசனது கோட்டைபோல—விரிந்த கடலின் நடுவில் தனியாகத் தோன்றும் கப்பல் ஒன்று காணப் பட்டது, என்ற குறிப்புப் புறநானூற்றில் காணப்படுகின் றது.[1] கப்பலின் உயர்ந்த சுற்றுச் சுவர்கள் கோட்டைமதிற் சுவர்கள் போலவும் கப்பலின் உள்கட்டடம் கோட்டைக் குள் உள்ள மாளிகை போலவும் இருந்தன என்பது இக்குறிப்பின் பொருள். கலன்களைக் கரைநோக்கி அழைக் கும் விளக்கு (கலங்கரை விளக்கம்) ஒவ்வொரு துறை முகத்திலும் இருந்தது.

---

[1] “பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்(று)
உணங்குகலன் ஆழியின் தோன்றும்
ஓரெயில் மன்னன்” (338)

பல்லவர்–சோழர் காலக் கடல் வாணிகம்

பல்லவர் காலத்தில் மயிலாப்பூர், மாமல்லபுரம், நாக பட்டினம் என்பன பெயர் பெற்ற துறைமுகங்களாக இருந் தன. மூன்றும் நந்திவர்மபல்லவன் காலத்தில் (கி. பி. 9-ஆம் நூற்ருண்டில்) சையாம் நாட்டில் தமிழ் வாணிகர் குடியேறி இருந்தனர். அவருள் ஒருவன் சீகாழியை அடுத்த நாங்கூரினன். அவன் அங்கு ஒரு குளம் தொட் டான்; நந்திவர்மபல்லவனது மற்றெரு பெயரான 'அவனி நாரணன்' என்பதை அக்குளத்திற்குப் பெயராக இட்டான் என்று அங்குள்ள கல்வெட்டொன்று கூறுகின்றது. நாக பட்டினத்தில் இராஜசிம்ம பல்லவன், பௌத்த சமயத்தைச் சேர்ந்த சின வணிகர்க்காகப் பௌத்த விஹாரம் ஒன்றைக் கட்டிஞன். இக்குறிப்பிலிருந்து பல்லவர் காலத்தில் தமிழர் சீனருடன் வாணிகம் செய்து வந்தமை நன்கு புலனுகும். இவ்வாணிகம் பிற்காலச் சோழர் காலத்திலும் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. சோழர்கள் தங்கள் தூதுக்குழுவினரைச் சீன நாட்டிற்கு விடுத்தனர். சீனப் பேரரசன் சோழப் பேரரசனுக்குப் பரிசுகள் விடுத்தான்.

சங்ககாலமுதல் தொடர்ந்து நடைபெற்றுவந்த கடல் வாணிகம் விஜயநகர அரசர் காலத்திலும் செம்மையாக நடைபெற்றுவந்தது.

பிற்காலக் கப்பல்கள்

பல்லவர்கள் கப்பல்களில் இலங்கைக்குப் படைவீரரை விடுத்தனர். அவர்களைப்போலவே பிற்காலச் சோழரும் கடற்படை செலுத்தி இலங்கையை வென்றனர்; நிக்கோ பர்த் தீவுகளையும் மாலத்தீவுகளையும் வென்றனர். முதலாம் இராசேந்திரன் காலத்தில் மலேயா, சுமத்ரா, ஜாவா முதலிய இடங்கள் சேர்ந்த பகுதி ஸ்ரீவிஜய நாடு எனப்பட்டது.

அந்த நாட்டில் தமிழ் வாணிகர் குடியேறி வாணிகம் செய்துவந்தனர். அந்நாட்டரசன் சோழப் பேரரசனுடன் பகைமை கொண்டனனே, அல்லது தன் நாட்டிலிருந்த தமிழ் வணிகர்க்குத் துன்பம் இழைத்தனனே, உண்மை தெரியவில்லை ; சோழனது கடற்படை சென்று ஸ்ரீவிஜய நாட்டைச் சேர்ந்த பல நகரங்களைத் தாக்கிக் கைப் பற்றியது. அயல்நாடுகளில் தங்கி வாணிகம் செய்யும் தன் நாட்டவரை ஆபத்துக் காலத்தில் காக்க ஒரு நாடு தன் கடற்படையை விடுத்தல் இக்கால வழக்க மன்றே? இதுபோலவே பழைய காலத்திலும் நடந்திருத் தல் கூடும் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கடற் படை வைத்திருந்த தமிழ்நாட்டு மன்னர்களிடம் மிகப் பெரிய போர்க் கப்பல்கள் இருந்தன. அவற்றைப்போலவே வாணிகக் கப்பல்களும் பெரியனவாக இருந்தன என்பதற் குச் சான்றுகள் காணப்படுகின்றன.

உள்நாட்டு வாணிகம்

தமிழகத்தில் உள்நாட்டு வாணிகமும் சிறப்புற நடந் தது. வணிகர்கள் எருது, கோவேறு கழுதை இவற்றின் மேல் பண்டப் பொதிகளை ஏற்றிக்கொண்டு கூட்டங் கூட்டமாய் ஊர் ஊராகச் சென்று வாணிகம் செய்தனர். அங்ஙனம் செல்லும் வாணிகர் கூட்டம் 'வாணிகச் சாத்து' எனப்பட்டது. இவர்கள் செல்லும் வழிகளில் ஆறலை கள்வர் தாக்குதல் நிகழ்தலும் உண்டு. அதனால் தம்மை யும், தம் பொருள்களையும் காத்துக்கொள்ள இவர்கள் படைக்கலப் பயிற்சி பெற்றிருந்தனர். அங்ஙனம் பயிற்சி பெற்றிருந்த காரணத்தாற்றான் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த இயற்பகை நாயனாரின் உறவினர், அந்நாயனாரது மனைவியாரை ஒரு சிவனடியார் அழைத்துச் செல்வதை அறிந்தவுடன் போருக்குச் சென்றனர் ; இயற்பகையார்

வாள்கொண்டு அவர்களைத் தாக்கினர். பின்னர் அவர்களும் அவருடன் போரிட்டனர். பெரிய புராணத்தில் இப்பகுதி போராகவே சிறப்பித்துரைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் தமிழ் வணிகர் தாம் தம் பொருள்களைக் கொண்டுசென்று வாணிகம் செய்தமையன்றி இந்தியாவில் உள்ள பிறநாடுகளிலிருந்தும் பொருள்களை வரவழைத்து விற்றனர். சேரநாட்டு மிளகும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த சந்தனமும் அகிலும், தென் கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்தும், கீழ்த்திசைக் கடலிற் பிறந்த பவளமும், கங்கையாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், காவிரியாற்று விளையுளும் காவிரிப்பூம்பட்டினத்தில் விற்கப்பட்டன என்பதிலிருந்து, அக்காலத்தில் நடைபெற்ற உள் நாட்டு வாணிகத்தைப்பற்றி நாம் ஓரளவு நன்கு உணரலாகும்.

கடைத் தெருக்கள்

மதுரைப் பெரிய கடைத்தெருவில் இருந்த கடைகளில் பின்வரும் உள்நாட்டுக் கைத்தொழில் பொருள்கள் விற்கப்பட்டன: [2] கொல்லாப் பண்டி, தேர்வட்டை, தேர் மொட்டு, மெய்புகு கவசம், மணிகள் பதித்த அங்குசங்கள், பலவகைத் தோற் கருவிகள், குத்துக்கோல், செம்பாற் செய்த பொருள்கள், வெண்கலத்தால் செய்யப்பட்டவை, பலவகைக் கயிறுகள், பலதிறப்பட்ட பூமாலைகள், ஈர்வாள் முதலிய கருவிகள், யானைத் தந்தம் முதலியவற்றைக் கடையும் தொழிலுக்குரிய கருவிகள், அகில் முதலிய புகைப் பொருள்கள், மயிர்ச்சாந்துக்கு வேண்டிய பொருள்கள், மெய்ச்சாந்துக்கு வேண்டியவை.

இரத்தினக் கடைத்தெருவில் இருந்த கடைகளில் நூலோராற் குறை என்று வரைந்து சொல்லப்பட்ட

[2] சிலப்பதிகாரம் - ஊர்காண் காதை.

குற்றங்களிலிருந்து நீங்கிய வயிரக் கற்களும், பதுமம், நீலம், விந்தம், படிதம் என்னும் நால்வகைச் சாதி மாணிக்கக் கற்களும், புருடராகக் கற்களும், குற்றமற்ற ஞாயிற்றெளியெனத் தேன்துளி எனச் சொல்லப்பட்ட வயிடூரியக்கற்களும், இருளைத் தெளியவைத்தாற் போன்ற நீலக்கற்களும், மஞ்சளும் சிவப்பும் கலந்தாற் போன்ற நிறத்தையுடைய கோமேதகக் கற்களும், வெள்ளி அங்கா ரகன் போல வெண்ணீர்மை, செந்நீர்மை உடையவாய் உருண்டனவுமான முத்துக்களும், கருப்பத்தே துளைப்பட் டனவும், கல்லிடுக்கிற் புகுந்து முடங்குபட்டனவும், திருக்கு முறுக்குண்டு எழுந்தனவும் என்னும் இக் குற்றங்கள் அற்றுச் செம்மைமிக்குக் கொழுவிதாக வளர்ந்த கொடிப் பவளமும் விற்கப்பட்டன. இம்மணிகளின் பிறப்பு முதல் இறப்பு ஈருகிய வகைகளை நன்கறிந்த வணிகர் இவற்றை விற்றுவந்தனர்.

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்னையும் நன்கறியும் ஆற்றல் வாய்ந்த **பொன்வாணிகர்** 'இவ்விடத்து இப் பொன் உள்ளது'' என்பதை விளக்கக் கொடிகட்டி வாணிகம் செய்தனர்.

பருத்தி நூலினுலும், எலி மயிரினுலும், பட்டு நூலி னுலும் நெய்யப்பட்டு அடுக்கிவைக்கப்பட்ட பலவகை ஆடைகளைக் கொண்ட கடைகள் இருந்தன.

கூலக் கடைத்தெருவில் நிறுக்கும் துலாக் கோலை உடையவராய் அளக்கும் மரக்காலை உடையவராய்த் தரகு செய்வார் நிறைந்து காணப்பட்டனர். அங்கு மிளகுப் பொதிகளும், பாக்குப் பொதிகளும், நிறுக்கும் வேறு பண்டப் பொதிகளும், பதினறு வகைப்பட்ட கூலங்களும் விற்கப்பட்டன. இவ் விவரங்களைக் கொண்டு பண்டைக் காலத் தமிழ் நாட்டு வாணிகப் பெருக்கத்தையும், வணி

கரின் அறிவாற்றல்களையும் நன்கறியலாம். அக்காலக் கடைகள் பகற் கடை, அந்திக் கடை என இருவகையின வாக இருந்தன. அவை முறையே நாளங்காடி, அல்லங் காடி என்று சொல்லப்பட்டன. 'இன்ன கடையில் இன்ன பொருள் விற்கப்படுகிறது' என்பதை அதற் கென்று செய்யப்பட்ட அடையாளக் கொடி உணர்த்தி வந்தது. இராக்காலத்தில் அதனை விளக்கொளி புலப் படுத்திவந்தது.

வணிகர் சிறப்பு

உழவர், சான்றோர், வணிகர் ஆகிய மூவரும் நாட்டு நலனுக்கு வேண்டற்பாலர் என்று திருவள்ளுவர் கருதினர் என்பது,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

என்னும் திருக்குறளால் அறியப்படும். இக்குறளில் வணிகர் 'தாழ்விலாச் செல்வர்' எனக் குறிக்கப்படலால், மக்களில் மேன்மேலும் ஆக்கத்துடன் விளங்கத்தக்கவர் வணிகர் என்பது பெறப்படும். பழங்காலத்தில் வணிகர் அரசர்க்கு அடுத்த நிலையில் செல்வ வளத்துடன் இருந்தனர். கோவலனின் தந்தையாகிய மாசாத்துவான், பூம்புகார் நகரில் மிக்கு ஓங்கிய செல்வத்தையுடையவன்; தன் பொருளை வறியவர்க்கு வழங்கும் இயல்புடையவன்; கண்ணகியின் தந்தையான மாநாய்கன் என்பவனும் சிறந்த செல்வன். 'அவன் மழைபோல் வழங்கும் கையை உடையவன்' என்று இளங்கோவடிகள் குறித்துள்ளார். இத்தகைய செல்வ வளம் பெற்றிருந்தமையாற்ருன் அவர்கள் 'இளங்கோக்கள்' எனப்பட்டனர். காவிரிப் பூம்பட்டினத்தில் அரசிளங் குமரரும் வணிக இளைஞரும்

தெருக்களில் பரிமீதும் கரிமீதும் செல்வது வழக்கம் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

அறவழியில் வாணிகம் செய்து பொருளீட்டி வறியார்க்கு வழங்கித் தாமும் வாழ்தல் வேண்டும் என்ற நோக்கம் ஒன்றே அக்கால வாணிகர் நோக்கமாக இருந்தது. அவர்கள் தமக்கு உண்டாகும் ஊதியத்தை வெளிப்படையாகக் காட்டிப் பண்டங்களை விலை கூறி விற்றனர் என்று பட்டினப்பாலை பகருகின்றது. அவர்கள் பிறர் பொருளை மிகுதியாகக் கொண்டிலர்; தம் பொருளைக் குறைத்தும் கொடுத்திலர்; நடுவு நிலைமையோடும் உண்மையோடும் வாணிகம் செய்தனர்.[3]

இங்ஙனம் அறவழி தவருது வாணிகம் செய்து செல்வாக்குப் பெற்ற வணிகப் பெருமக்களைத் தமிழ் வேந்தர் மதித்து 'எட்டி' என்ற பட்டத்தையும் பொற்பூவையும் அளித்துச் சிறப்பித்தனர். இங்ஙனம் அரசர்கள் தங்கள் நாட்டு வணிகரைச் சிறப்பித்தமையாலும், அவர்கள் சென்று வாணிகம் நடத்திய பிறநாடுகளிற் பாதுகாப்பு அளித்தமையாலும் அக்கால வாணிகம் நன்னிலையில் நடைபெற்றது; நாட்டின் செல்வநிலையும் உயர்ந்தது. இக்காலத்தில் தமிழகம் போந்து வாணிகம் செய்யும் வடநாட்டார் தமிழிற் கற்றுத் தமிழ் பேசுவதுபோலவே பண்டைத் தமிழ் வணிகரும் தாம் சென்ற நாட்டு மொழி

---

[3] "நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொடுப்பதூஉம் குறைகொடாது
கொள்வதூஉம் மிகைகொளாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை"

—பட்டினப்பாலை வரி 207-12.

களை நன்கறிந்திருந்தனர் ; வேறுபல மொழிகளையும் அறிந் திருந்தனர். ஆதிரையின் கணவனுன சாதுவன் நாகர் மொழியை நன்கறிந்திருந்தனன் ஆதலின், நாகரிட மிருந்து உயிர் பிழைத்தான் என்று மணிமேகலை குறித் துள்ளது.

சீத்தலைச்சாத்தனுர் கூலவாணிகர். இவர் மணிமேகலை என்னும் காவியம் பாடியவர் ; இளவேட்டனுர் என்பவர் அறுவை வாணிகர் ; கண்ணம்புகுந்தாராயத்தனுர் என்பவர் ஓலைக்கடை வாணிகர். பொன் வாணிகனுர் என்பவர் பொன் வாணிகம் செய்தவர். இவர்கள் சங்க காலத்தில் பெரும் புலவர்களாக இருந்தவர்கள் என்பதி லிருந்து நாம் அக்கால வணிகரது கல்வியறிவை ஒருவாறு உணரலாம். காரைக்காலம்மையார் வணிகர்குல நங்கை யார். அவர் அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவராகக் கருதப்பட்ட தவச்சிறப்புடையவர். அவருடைய தெய்வ மணங் கமழும் பாக்கள் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்து வணிகர் பண்டுதொட்டே கல்வி, ஒழுக்கம், வாணிகம் இவற்றில் தலை சிறந்து விளங்கியமையால், துணிவுடன் திரைகடல் கடந்து பல நாடுகளில் தங்கி வாணிகம் செய்தனர் ; வறியார்க்கீந்தனர் ; வளம்பெற வாழ்ந்தனர் ; தம் நாட்டிற்கும் அழியாப்புகழைத் தேடித் தந்தனர் ; அரசர்பொருட்டுத் தூது போதல் முதலிய உயர்ந்த வேலைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

6. கட்டடக்கலை

கலை–ஆற்றல்

மக்களது உள்ளத்தில் நிரம்பிப் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றலே 'கலை' எனப்படும். இவ்வாற்றல் காவியமாக வெளிப்படலாம்; ஓவியமாக வெளிப்படலாம்; சிற்பமாக வெளிப்படலாம்; விழிகளுக்கு விருந்தளிக்கும் தாஜ்மஹால் போன்ற பேரெழில் மிக்க கட்டடமாக வெளிப்படலாம். அவ்வாற்றல் பாறைகளைக் குடைந்து கோவிலாக்க வல்லது; சிறு குன்றுகளைக் காட்சிக்கினிய திருக்கோவில்களாக மாற்றவல்லது; பாறைகளைக் கற்களாக உடைத்து, ஒன்றுன்மேல் ஒன்றுக அடுக்கி, வானளாவிய கோபுரங்களைக் கொண்ட இக்காலக் கோவில்களாக அமைக்க வல்லது. அந்த ஆற்றல் கட்புலனுற் காண ஒண்ணுதை ஒலியைக் காதுக்கினியதாக்கிப் பண்முறைகளைக் கொண்ட இனிய ஏழிசையாக்கி ஐம்புலன்களையும் ஒன்றச் செய்ய வல்லது; கற்பாறைகள்மீதும் செங்கற் சுவர்கள்மீதும் உயிரோவியங்களைத் தீட்டிக் களிக்கச் செய்யவல்லது.

கலையுணர்ச்சி

மக்களது உள்ளுணர்ச்சியின் தெளிவுற்ற நிலையிலிருந்து பெருக்கெடுத்து வெளித்தோன்றும் கலையுணர்ச்சியாற்றுன் பண்டைப் பாபிலோனிய நகரம் அழகு பொலிய அமைக்கப்பட்டது; உலகத்திற்கே நாகரிகத் தோற்றத்தை அளித்திருந்த பண்டை எகிப்தியவானளாவிய பிரமிட் கோபுரங்கள் எழில் பெருக அமைக்கப்பட்டன; ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிப்படையளித்த உரோமாபுரி பேரெழில் கொண்டு பெருமிதமுற்றது. அக் கலையுணர்ச்சியே நமது தாய் நாட்டிலும் எந்நாட்டவரும்

ஏத்திப் போற்றத்தக்க அஜாந்தாக் குகைச் சிற்பங்களையும் எல்லோராக் குகைச் சிற்பங்களையும் எழில்பெறச் செய்தது. அதுவே காந்தாரச் சிற்பத்தைக் கவினுற அமைத்தது; அமராவதிச் சிற்பங்களை அழகுபெறச் செய்தது; தென்னாட்டுச் சிற்பங்களைத் தெவிட்டாத இன்பக் காட்சியாக நல்கியது. சுருங்கக் கூறின், மக்களது பேராற்றலாகிய கலை உணர்ச்சி உலகில் அழியாத இன்பத்தை அளிப்பதாகும். இத்தகு உயரிய பண்பை உணர்ந்த நம் தமிழ் மக்கள் அக்கலையைத் தம்முயிர் போல மதித்து வளர்த்து வந்தனர் எனின், அவர்தம் கலையுணர்ச்சியை வியந்து போற்றுதல் நமது தலையாய கடனன்றோ?

சங்ககாலக் கட்டடக்கலை

ஒருநாட்டுமக்களது நாகரிகத்தை அறிவிப்பனவற்றுள் கட்டடக் கலையும் ஒன்றாகும். தஞ்சை இராசராசேச்சரத்தில் அமைந்துள்ள அற்புத வேலைப்பாட்டைக் கண்டு, அது கட்டப்பட்ட காலத்தில் தமிழர் பெற்றிருந்த கட்டடக் கலைப் பண்பை நன்கறிந்து மேனாட்டறிஞர் வியக்கின்றனர்; அக்காலத் தமிழ்மக்கள் உயர்ந்த நாகரிகத்தினர் என்று கூறுகின்றனர். எனவே சங்ககால முதல் பிற்பட்ட காலம்வரை, தமிழகத்தில் முறையாக வளர்ச்சி பெற்றுவந்த கட்டடக் கலைத் திறனை உணருவோமாயின், நம் முன்னோரின் கலையறிவு வளர்ச்சியை நாம் நன்கறிந்தவராவோம்.

நாம் பண்டைக் காலத்துக் கட்டடக் கலையைப் பற்றி அறிய வேண்டுமாயின், அழியாமல் இருக்கும் இக்காலக் கோவில்களைக்கொண்டே அறிதல் வேண்டும். அக்கோவில்கள் கருங்கற் கோவில்களாக இருப்பின் நெடுநாள் நிலைத்திருக்கும். நமது தமிழகத்தில் கருங்கற் கோயில்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதலே தோன்றின. அதற்கு முன்னர் இருந்த கோயில்களும், அரண்மனைகளும், மாட

மாளிகைகளும், அழியத்தக்க மண், மரம், சுண்ணும்பு, செங்கல் இவற்ருல் ஆனவையாகும். ஆதலின் அவை பற்றிய விவரங்களை அறியச் சங்கநூல்களின் துணையையே நாம் நாடல்வேண்டும்.

சங்ககாலத்தில் வீரர் வணக்கத்துக்குரிய (நடுகல் கொண்ட) கோவில்கள், முருகன், திருமால், துர்க்கை, சிவன் கோயில்கள், பத்தினிக் கோயில்கள் முதலியன இருந்தன. இவை அனைத்தும் குன்றுகள்போலச் சிறியனவும், பெரியனவுமாய் இருந்தன. இவை செங்கற் கோயில்களே ஆகும். அக்காலத்தில் அரசனது அரண்மனையும் 'கோயில்' என்றே வழங்கப்பட்டது. இக் கோவில்களும் அரசன் மாளிகைகளும் மண்டபங்கள் போன்ற கட்டடங்களும் சிற்ப வல்லுநரால் நாள்குறித்துத் திசைகளையும் அவற்றில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி வகுக்கப்பட்டன என்பது நெடுநல்வாடை அடிகளாலும் சிலப்பதிகார அடிகளாலும் நன்கு விளங்குகின்றது[1].

அற்புத மண்டபம்

காவிரிப்பூம்பட்டினத்தில் மணிமேகலை வாழ்ந்த காலத்தில் அரசனது அரண்மனைத் தோட்டத்தில் இருந்த

---

[1] "ஒருதிறம் சாரா வரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"
—நெடுநல்வாடை (75–78.)

"அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று
மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"
—சிலப்பதிகாரம் (28, 222–225.)

மண்டபம் மிக்க வேலைப்பாடு கொண்டதாக மணிமேகலை நூலில் கூறப்பட்டுள்ளது. மகதநாட்டு மணிவேலைக் காரரும், மகாராட்டிரத்தைச் சேர்ந்த பொன் கம்மியரும், அவந்தி நாட்டுக் கொல்லரும், யவன நாட்டுத் தச்சரும், தமிழ் நாட்டுத் தொழில் வல்லாரும் ஒன்று சேர்ந்து அம்மண்டபத்தை அமைத்தனர். அம்மண்டபத் தூண்கள் பவளத்தால் சமைந்தவை; போதிகைக் கட்டைகள் பல வகை மணிகளால் ஆனவை; மண்டபத்தின் ஒவ்வொரு கோணத்திலும் முத்து மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன; மேற்கூரை பொன்னால் வேயப்பெற்றது; பொன் மண்டபம் ஆதலின் ஆவின் சாணத்தால் மெழுகப் படாமல், தரை சந்தனத்தால் மெழுகப்பட்டிருந்தது.[2] இம் மண்டபச் சிறப்பு ஒன்றைக்கொண்டே அக்காலக் கட்டடக் கலை பெற்றிருந்த மேன்மையை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

கட்டட வுறுப்புக்கள்

தெய்வங்களின் கோயில்களும் அரசர் கோயில்களும் சுற்றுமதிலையும் உயர்த்த வாயில்களையும் அவ்வாயில்கள் மீது உயர்ந்த கோபுரங்களையும் பெற்றிருந்தன. சில, கோபுரம் இன்றி மாடத்தைப் பெற்றிருந்தன. வாயில் கட்குத் துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவங்கள் பொருத்தப்பெற்றிருந்தன. அக்கோபுரங்களில் பல நிறங்கள் தீட்டப்பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன என்பது மணிமேகலை முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.[3] இக்கோவில்களின்மீது உலோகத் தகடுகளும்

---

[2] சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை.

[3] மணி: சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை, மலர் வனம் புக்க காதை.

சாந்தும் வேயப்பட்டிருந்தன. மக்கள் வாழ்ந்த உயர்ந்த மாடங்களில் நிலாமுற்றங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. காவிரிப்பூம்பட்டினத்து மாளிகைகளில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்று மணிமேகலையில் கூறப்படுவதி லிருந்து அம்மாளிகைகள் உயர்ந்த வேலைப்பாடு கொண்டவை என்று கருதுதல் பொருந்தும்.

தெரு, கரந்துபடை முதலியன

அக்காலத் தெருக்கள் நீளமாகவும் அகலமாகவும் விளங்கின. "ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெரு" என்னும் தொடரைக் காண்க. அக்கால மக்கள் தெருக் களின் அடியில் கால்களை அகழ்ந்து அவற்றின் வழியே கழிநீரைப் போக்கிவந்தனர். அக்கால்கள் கண்ணுக்குத் தெரியாதவாறு மறைத்து அமைக்கப்பட்டமையின் '**கரந்து படை**' எனப் பெயர் பெற்றன.[4] இதிலிருந்து அக் கால மக்களின் சுகாதார உணர்ச்சியை நாம் நன்கறியலாம். பெரிய நகரங்களில் பூங்காக்களும் இயந்திர வாவிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவை நற்காற்றையும் நற்காட்சி யையும் அளித்துவந்தன.

கோச்செங்கட் சோழனின் திருப்பணிகள்

சங்ககாலத்து இறுதியில் வாழ்ந்தவனுகக் கருதப்படும் கோச்செங்கட்சோழன் சிவபெருமானுக்கு **70 கோயில்கள்** கட்டினுன் என்று திருமங்கையாழ்வார் கூறியுள்ளார். அவன் கட்டியவற்றுள் சில மாடக்கோவில்கள் ஆகும். மாடக்கோவில் என்பது கட்டு மலையையும் யானை செல்ல முடியாத திருமுன்பையும் பெற்றது. சாய்க்காடு, நன் னிலம், பெருவேளூர் ஆகிய இடங்களில்உள்ள கோவில்கள் மாடக் கோவில்களாகும்.

---

[4] சிலப். காதை 14, வரி 65 ; குறிப்புரை.

பல்லவர் காலத்தில் கட்டடக்கலை

நூல்களிற் குறிக்கப்பெற்ற கோவில்கள்

சைவ சமயகுரவர் காலமும், பல்லவர் காலமும் ஒன்ருகும். சமயகுரவர் பாடல்களில் வைப்புத்தலங்கள் உட்பட ஏறத்தாழ ஐஞ்ஞூறு கோவில்கள் குறிக்கப்பெற்றுள்ளன. ஆழ்வார்கள் நூற்றெட்டுக் கோவில்களைக் குறித்துள்ளனர். இத்துணைக் கோவில்களும் (மிகச்சில தவிர) செங்கற் கோவில்களேயாகும். அவை பெருங்கோவில், இளங் கோவில், மாடக்கோவில்எனப் பலவகைப்பட்டன. திருவரங்கம் 'பெரியகோவில்' என்னும் வழக்கிலிருந்து பெருங் கோயிலின் அமைப்பினை ஒருவாறு அறியலாம். மதுரை, திருவொற்றியூர், மயிலாப்பூர், சிதம்பரம், திருவாரூர் முதலிய இடங்களில் உள்ளவை பெருங்கோயில்களாகும். அவற்றில் கோபுரம், திருச்சுற்று, கருவறை, நடுமண்டபம், முன்மண்டபம் முதலிய உறுப்புக்கள் அகன்றும் பெரியனவாகவும் இருக்கும். இளங்கோயில் என்பது உருவத்திற் சிறியது. பெரிய கோயிலைப் பழுது பார்க்கும் பொழுது மூர்த்தங்களை வேறிடத்தில் இருத்தி வழிபாடு செய்வர். அவ்விடத்தில் ஒரு சிறிய கோயில் கட்டப்பெறும். அதுவும் இளங்கோயில் எனப்பட்டது. தூங்கும் யானை வடிவில் அமைந்த விமானத்தைக்கொண்ட கோவில் **தூங்கானை மாடம்** எனப்பட்டது. பெண்ணாகடம் திருத்தூங்கானை மாடக்கோயில் இவ்வகையைச் சேர்ந்தது.


பல்லவர் எடுப்பித்த கோவில்கள்

பல்லவர்கள் என்றும் நிலைபெற்றிருக்கத்தக்க கற் கோவில்களை அமைத்தார்கள். அவர்கள் மலைச்சரிவுகளைக் குடைந்து கோவில்களை அமைத்தனர் ; ஒற்றைக் கற்களைக் கோவில்களாக மாற்றினர் ; கற்களைச் செங்கற்கள்போல் ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கிக் கோவில்களை எடுப்பித்



சோழர் காலக் கட்டடக்கலை
தஞ்சைப் பெரிய கோவில்

[பக்கம் 72]



பல்லவர் காலக் கட்டடக்கலை
மாமல்லபுரத்துக் கோவில்கள்

[பக்கம் 69]

தனர். முதல் வகையில் சேர்ந்தவற்றைக் குடுமியான்மலை, சித்தன்னவாசல், திருமெய்யம், திருச்சிராப்பள்ளி, மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், மகேந்திரவாடி, வல்லம் முதலிய இடங்களிற் காணலாம். இவை மூர்த்தங்களை வைக்கத்தக்க சிறிய அறைகளையும், முன் மண்டபத்தையும் கொண்ட கோவில்களாகும். 'பஞ்சபாண்டவர் இரதங்கள்' என்று மகாபலிபுரத்திற் கூறப்படுகின்றவை ஒற்றைக்கற் கோவில்கள் ஆகும். அவற்றின் விமானங்கள் கூர்ந்து நோக்கத்தக்கவை. அக்காலக் கிராம தேவதையின் கோவில், பௌத்த விஹாரம் முதலிய பழைய கட்டடங்களைப் பார்த்தே ஒற்றைக் கற்கோவில்கள் அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும் என்பது இக்கால ஆராய்ச்சியாளர் கருத்தாகும். அக்கருத்து உண்மையாயின், ஒற்றைக் கற்கோயில்களின் வேலைப்பாட்டைக் கொண்டு, சங்க காலம் முதல், பல்லவர்கள் காலம்வரை இருந்த கோயில்கள் பெற்றிருந்த வேலைப்பாட்டினை ஒருவாறு உணரலாம். மகாபலிபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயிலும் காஞ்சி—கயிலாசநாதர் கோயிலும் பிறவும் மூன்றும் வகையின.

காஞ்சி–கயிலாசநாதர்கோவில்

இது கி. பி. 8–ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் எடுக்கப்பட்ட கற்கோயிலாகும். இது மிகப் பெரிய திருச்சுற்றையும், திருச்சுற்று மண்டபங்களையும் பெற்றிருந்தது. அவை நாளடைவில் அழிந்துபட்டன. இதன் விமானம் 'மேரு' அமைப்பிற் கட்டப்பட்டது. இதனை எடுத்துக்காட்டாகக் கொண்டே பிற்காலத்துத் தஞ்சை இராசராசேச்சரத்து விமானம் பெரிய அளவில் கட்டப் பட்டது. கயிலாசநாதர் கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள பெரிய புரைகளின் அமைப்பும், திருச்சுற்றில்

உள்ள சிறிய புரைகளின் அமைப்பும் காணத்தக்கவை. அவற்றின் வேலைப்பாடு கண்டு வியக்கத்தக்கது. சுவர்களில் உள்ள சிறுசிறு கோவில்களில் கடவுளர்—முனிவரர் முதலியோர் திருவுருவங்கள் அமைக்கப்பெற்று இருக்கின்றன. அவை அனைத்தும் புராண—இதிகாசக் கதைகளை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டவையாகும். இம்முறையிலேயே, காஞ்சி–வைகுந்தப் பெருமாள் கோவிற் திருச்சுற்றுச் சுவர்களில் பல்லவ அரசர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் சிற்பங்களாக அமைந்துள்ளன. இத்தகைய சிற்பங்களைத் திருச்சுற்றுச் சுவர்களில் கொண்ட கோவில்கள் தென்னாட்டில் பெரும்பாலும் இவை இரண்டென்றே கூறல் தகும்.

பல்லவர் காலத் தூண்கள் பார்க்கத் தக்கவையாகும்: மகேந்திரன் காலத்தில் முதலிற் செய்யப்பட்ட தூண்கள் நீள் சதுரமாகவும், வேலைப்பாடு அற்றும், பின்னர்ச் செய்யப்பட்டவை வேலைப்பாடு கொண்டும் காணப்படுகின்றன. முதலாம் நரசிம்மவர்மன் காலத்துத் தூண்கள் அமர்ந்த நிலையில் உள்ள சிங்கங்களை அடியிற் கொண்டவையாகும். இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தவை, நிற்கின்ற நிலையில் உள்ள சிங்கங்களைக் கொண்டவையாகும். இவ்வகைத் தூண்களை மேற் சொன்ன இரண்டு கோயில்களிலும் கண்டு களிக்கலாம். இவ்விரு கோயில்களிலும் காணப்படும் அற்புத வேலைப்பாடு அக்காலத்துக் கட்டடக்கலைச் சிறப்பினை நன்கு காட்ட வல்லது.

நகர அமைப்பு

பல்லவர் தலைநகராகிய காஞ்சிபுரத்தின் நகரமைப்புத் திட்டம் வியந்து கூறப்படுகிறது. அங்குள்ள இக்கால இராஜ வீதிகள் ஏறக்குறைய எண்பதடி அகல

முடையவை. அவை தேரோடும் வீதிகளாதலின் அகன்று பள்ளமாக இருக்கின்றன. இருபுறமும் அமைந்த பெரிய மேடைகள்மீதே வீடுகள் உள்ளே தள்ளிக் கட்டப்பட்டுள்ளன. தேர் செல்லுதற்கு இடையூறின்றி இருக்கவே வீடுகள் இங்ஙனம் உள்ளே தள்ளிக் கட்டப்பட்டன போலும்! பண்டைக்காலத்து அரண்மனையும் கோட்டையும் இருந்த இடம் மேடு பள்ளங்கள் நிறைந்த இடமாகத் தோன்றுகின்றது. 'பல்லவர் கோட்டை மதில் ஏறமுடியாத உயரமுடையது; எளிதில் அழிக்கக்கூடியதாக இல்லை,' என்று சாளுக்கியர் சாசனம் குறித்திருப்பது பல்லவர்களது கோட்டை மதிலின் திண்மையையும் வேலைப்பாட்டையும் உணர்த்துகிறதன்றோ?

பிற்காலச் சோழர் காலத்தில் காஞ்சி மாநகரம் இருந்த நிலையைக் கீழ்வரும் தண்டியலங்கார மேற்கோள் பாடல் நன்கு விளக்குகின்றது:

"ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவா—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு."

கெட்டிஸ்துரை புகழ்மாலை

"காஞ்சி மாநகரம் மிக்க தேர்ச்சியும் கூர்த்த அறிவும் கொண்ட நகர அமைப்பாளர்களால் அமைக்கப்பட்டதாகும். இந்த நகர அமைப்புத் திட்டத்திற்கு இணையான திட்டம் இந்தியாவில் வேறு எந்த நகரத்திலும் இல்லை என்னல் தவறன்று. தெருவின் அளவிற்குப் பல அடிகள் உயர்த்தி வீடுகள் கட்டப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. மேனாட்டுப் பெரிய நகரங்களிற் காணப்படும் இருட்டுச் சந்துகள் இங்கு இல்லை. ஏகாம்பரநாதர் கோவிலைச் சுற்றியுள்ள தேரோடும் தெருக்களும், காமாட்சி அம்மன்

கோவிலைச் சுற்றியுள்ள தேரோடும் தெருக்களும் ஒன்றுக் கொன்று முட்டிக்கொள்ளாமல் அமைத்துள்ள முறை வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது,'' என்று நகரமைப்புத் திட்ட வல்லுநரான கெட்டிஸ் துரை கூறியிருப்பது காஞ்சி மாநகரத்தை அமைத்த முன்னோர்க்கு ஏற்ற புகழ்மாலையாகும். *

சோழர் காலக் கட்டடக்கலை

தஞ்சை—இராஜராஜேசுவரம்

பல்லவர்க்குப் பிற்பட வந்த சோழப் பேரரசர்கள் கட்டிய அரண்மனைகள் அழிந்துபட்டன. இன்று அவர்கள் காலக் கட்டடத்திறனை நமக்கு அறிவித்து நிற்பவை அவர்கள் கட்டுவித்த கோவில்களே ஆகும். அவற்றுள் தஞ்சை—இராஜராஜேசுவரம், கங்கை கொண்ட சோழேசுவரம், தாராசுரத்தில் உள்ள ஐராவதேசுவரர் கோவில் என்பன குறிப்பிடத்தக்கவை. தஞ்சைப் பெரிய கோவில் ஆறுண்டுகளில் கட்டப்பெற்றது. சிவபாத சேகரனை முதலாம் இராஜராஜ சோழன் தன் உயிரெனக் கருதி எடுப்பித்த அப்பெரிய கற்றளி தமிழர் கட்டடத் திறமையை இன்று உலகறியச் செய்வதாகும். கோவிலைச் சூழ ஆழமான அகழி இருந்தது. கோவில் மதில் கோட்டை மதிலின் அமைப்பைக் கொண்டது. இரண்டு சிறிய கோபுரங்களைக் கடந்து உட்செல்லின், கருங் கல்லும் செங்கல்லும் பரப்பப்பெற்ற, ஏறத்தாழ எண்ணூறு அடி நீளமும் நானூறு அடி அகலமும் உள்ள பரந்த மேடையைக் காணலாம். அம்மேடையின்மீது கருவறை, நடுமண்டபம், முன்மண்டபம், தியாகேசர் எழுந் தருளியுள்ள தாபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்பன காணப்படும். கோயிலின்

* பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, பக். 334.

ஏழு வாயில்களிலும் பதினெட்டடி உயரமும் எட்டடி அகலமுமுள்ள பதினான்கு வாயிற்காவலர் உருவங்கள் இருக்கின்றன.

கருவறையின்மேல் வானோக்கிக் கட்டப்பெற்றுள்ள **விமானம்** சதுரவடிவமானது; பதின்மூன்று கோபுர மாடிகளையுடையது; 216 அடி உயரமுடையது. உச்சியில் 25½ அடி சதுர வடிவமான பிரமரந்திரத் தளக்கல் போடப் பட்டுள்ளது. அதன் நிறை எண்பது டன் ஆகும். அக்கல்மீது கலசமும் அதன்மீது ஸ்தூபியும் அமைக்கப் பெற்றுள. ஸ்தூபிக்குடம் செம்பினால் இயன்றது. அதன் நிறை 3083 பலமாம். அதன்மீது பொற்றகடு போர்த்தப் பெற்றது. தளக்கல்லை மேலே உயர்த்த நான்கு கல் தொலைவிலிருந்து சாரம் போடப்பட்டதாம். விமானத்தின் ஒவ்வொரு நிலையிலும் உள்ள உருவங்கள், ஒவ்வொரு மாடியின் அமைப்பு, நடுவில் உள்ள கற்கோவிற் பகுதியைச் சுற்றியுள்ள திருச்சுற்று, திருச்சுற்று மாளிகை முதலியன அக்காலக் கட்டட வேலையாட்களின் திறனை விளக்கி நிற்கின்றன.

கங்கைகொண்ட சோழேச்சரம்

இப்பெருங் கோயில் தஞ்சைப் பெரிய கற்றளியைப் போன்ற அமைப்புடையதேயாகும். இதன் மதிற்சுவரை வெடிவைத்துத் தகர்த்து ஒரு பகுதியை அரசாங்கத்தார் அணைகட்டப் பயன்படுத்திக்கொண்டனர். இதன் மதிற் சுவர் முற்றிலும் கருங்கற் சுவர்; ஐந்தடி அகலமுடையது; நான்கு மூலைகளிலும் கோட்டை அமைப்பைப் பெற்றது. இக்கோவில் திருச்சுற்று மாளிகை உடையது. சுண்ணாம்பும் செங்கல்லும் கொண்டு கட்டப்பெற்ற நந்தி, வேலைப்பாடு மிக்கது. அதற்கு எதிரில் உள்ள சிங்கமுகக் கிணறு சிறந்த வேலைப்பாடு கொண்டது. சிங்கத்தின்

வயிற்றுக்குள் நுழைபவர் கீழே உள்ள படிக்கட்டுகள் வழியாக இறங்கிப் பெரிய கிணற்றை நெருங்கலாம்.

தாராசுரம்—சிவன் கோயில்

இரண்டாம் இராஜராஜனுல் கட்டப்பெற்ற ஐராவ தேசுவரர் கோவில் கி. பி. 12-ஆம் நூற்ருண்டின் கட்டடக் கலை வளர்ச்சிக்கேற்ற சான்ருகும். இக்கோயிலின் முதல் திருச்சுற்று அழிந்துவிட்டது. அதனுல் சுவாமியின் கோவிலும் அம்மன் கோவிலும் தனித்தனியே கட்டப்பெற்ற கோவில்களைப்போலக் காணப்படுகின்றன. சுவாமி கோயிலுக்குள் நுழைந்ததும் எதிரில் உள்ள 'இராச கம்பீரன் மண்டபம்' வியத்தகு வேலைப்பாடு கொண்டது. அம் மண்டபம் தனித்திராது கோவிலைச் சேர்ந்தே உள்ளது. இராச கம்பீரன் மண்டபத்தின் தூண்கள், தரை, மேற் கூரை முதலியன அக்காலக் கட்டட அமைப்புத்திறனை நன்கு அறிவிக்க வல்லவை. கோவில், குதிரைகள் பூட்டிய உருளைகள் உள்ள தேர்போல அலங்கரிக்கப்பட்டுள்ளது. பக்கத்தில் உள்ள அம்மன் கோயிலின் முன்மண்டபம் நீரில் மிதக்கக்கூடிய தெப்பம் போல அமைக்கப் பெற்றுள்ளது. நடராசர் மண்டபத்தூண் ஒவ்வொன்றும் அழகிய சிற்பத்திறன் வாய்ந்ததாகும். இவை அனைத்திலும் காணப்படும் அற்புத வேலைப்பாட்டை நேரிற் கண்டு உணர்தல் வேண்டும்.

பிற கோவில்கள்

பாடல் பெற்ற கோவில்கள் அனைத்தும் செங்கல்லாலும் சுண்ணும்பாலும் இயன்றவையாகும். அவை அழிந்து படாமலிருக்கப் பிற்காலச் சோழர்கள் அவற்றைக் கற்றளிகளாக மாற்றியமைத்தார்கள் என்பதை எண்ணிறந்த கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சில கோயில்களில் நூறு

கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் என்பன சோழர் காலத்தில் புதியனவாகக் கட்டப்பட்டன. சோழர் காலத்தில் கோபுரத்தைவிட விமானத்திற்கே பெருஞ்சிறப்புக் கொடுக்கப்பட்டது.

விஜயநகர அரசர் காலம்

சோழர்க்குப் பின் தமிழகத்தில் ஆட்சி புரிந்த விஜய நகர மன்னர்களின் காலத்திலும், மதுரை நாயக்க மன்னர் காலத்திலும் தஞ்சையை ஆண்ட மகாராட்டிரர் காலத்திலும் கட்டடக் கலை நன்கு வளர்ச்சி அடைந்தது. இப் பிற்பட்ட காலத்தில் விமானங்களைவிடக் கோபுரங்கள் உயர்த்திக் கட்டப்பட்டன. மிகப் பெரிய திருச்சுற்றுக்கள் அமைக்கப்பட்டன. குதிரை வீரரைக் கொண்ட மிக உயரிய கற்றூண்கள் செய்யப்பட்டன. மண்டபங்களின் உயரம் உயர்த்தப்பட்டது. மதுரை, திருவண்ணாமலை முதலிய இடங்களில் உள்ள கோயிற் கோபுரங்களும் இக் காலத்திற் பெரியனவாய்ப் புதுப்பிக்கப்பெற்றன. மதுரை ஆயிரக்கால் மண்டபம், புது மண்டபம் என்பன இக் காலத்தில் அமைந்தவையாகும். அவற்றின் அற்புத வேலைப்பாடு கண்டு மகிழத்தக்கது. மதுரை—திருமலை நாயக்கர் மகால் என்பது தென்னாட்டிற் புதுமை வாய்ந்த கட்டடமாகும். அதன் தூண்கள், தனி மனிதனால் அணைக்க முடியாத பருமை உடையவை. மேற் கூரை மிக்க உயரமாயும், சுவர்கள் உறுதியாயும் உள்ளன.

தஞ்சாவூர் அரண்மனை

தஞ்சை அரண்மனை, நாயக்க மன்னர், மகாராட்டிர மன்னர் ஆகியோர் காலத்துக் கட்டடத்திறனை விளக்குவதாகும். அதில் உள்ள ஏழடுக்கு மாடியும் சங்கீத மகால், சரசுவதி மகால், ஆயுத மகால் முதலிய கட்டடங்களும்

கட்டடக் கலையிற் சிறந்த அறிஞர்களைக் கொண்டு அமைக்கப்பட்டவை என்பதை, அவற்றைப் பார்த்தவுடன் கூறிவிடலாம். அரச மாதேவியர் உட்பட அந்தப்புர மாதர் அரசன் திருமுன் நடைபெறும் பலவகைப் பொழுது போக்குகளைக் கண்டு களிக்க மேல் மாடியில் கண்ணள வுள்ள துளைகளைக் கொண்ட சாளரங்களை அமைத்திருத் தல் நோக்கத்தக்கது. அரண்மனையின் புறச்சுவர் நாற்ப தடிக்கு மேற்பட்ட உயரமுடையது ; ஏற வசதி இல்லாதது.

அக்காலக் கோட்டைகள்

தஞ்சாவூர்க் கோட்டை தன்னைச் சுற்றிலும் ஆழ்ந் தகன்ற அகழியைப் பெற்றிருந்தது. பகற்காலத்தில் அகழியைத் தாண்டத் ‘தொங்கு பாலம்’ அமைக்கப்பட் டிருந்தது. இராக்காலத்தில் அப்பாலம் எடுத்துவிடப்பட் டது. கோட்டை மதிலின் அகலம் இருபதடிக்கு மேற் பட்டிருந்தது. செஞ்சிக் கோட்டை, மலைகளை இணைத்துக் கொண்டிருப்பது. அதனைச் சுற்றிலும் ஆழமான அகழி இருந்தது. இராஜகிரி, கிருஷ்ணகிரி என்னும் இரண்டு மலைகளிலும் உள்ள காவலறைகள், மண்டபங்கள், கோவில்கள், தானியக் கிடங்குகள் முதலியன, மலைமீது உறுதியான கோட்டை கொத்தளங்களையும் பிற கட்டடங் களையும் அமைப்பதில் நம்மவர் திறமை பெற்றிருந்தனர் என்பதை அங்கைக் கனியென உணர்த்தி நிற்கின்றன.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் தமிழர் சங்ககால முதல் கட்டடக் கலையிற் பண்பட்ட அறிவினராயிருந்தனர் என்பதும், அவ்வறிவு நாடாண்ட மன்னர்கள் முயற்சி யாலும் பிறவற்றாலும் படிப்படியாக வளர்ச்சி பெற்ற தென்பதும் நன்கு புலனாகும்.

7. ஓவியக்கலை

நாகரிகக் கலைகள்

இசை, நடனம், சிற்பம், ஓவியம் என்பன நாகரிகக் கலைகள் எனப்படும். இவை தொன்றுதொட்டே ஒரு நாட்டில் இருந்துவருகின்றன என்பதற்குரிய அறிகுறிகள் அகப்படுமாயின், அறிஞர், அந்நாடு பண்டுதொட்டே நாகரிகம் பெற்றிருந்த நாடு என்று முடிவு கூறுகின்றனர். இவற்றுள் ஒன்றுய ஓவியக்கலை தமிழர் செல்வமாக அமைந்து வளர்ந்த வரலாற்றை இங்குக் காண்போம்.

பண்டை நாடுகளில் ஓவியக்கலை

பண்டை நாகரிக நாடுகளாக விளக்கம் பெற்றிருந்த எகிப்து, பாபிலோனியா, அசிரியா, சுமேரியா முதலியவற்றிற் கிடைத்த மண்பாண்டங்கள்மீதும் பிற பொருள்கள் மீதும் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அவை பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு தீட்டப்பட்டன ஆயினும், சிறந்த ஓவியரால் சிறந்த முறையில் தீட்டப் பட்டமையின், இன்றளவும் பேரழகுடன் காணப்படுகின்றன. மக்கள் முதன்முதல் வாழ்ந்த குகைகளில் சில ஓவியங்கள் காணப்படுவதை நோக்கும்போது இக்கலை, மிகப் பழைய காலத்திலேயே தோற்றமெடுத்தது என்னலாம். இஃது அப்பண்டைக் காலமுதல் படிப்படியாக வளர்ந்து, மேற்சொல்லப்பட்ட நாகரிக நாடுகளில் மிகுந்த வளர்ச்சி பெற்றது என்று கருதலாம்.

இந்தியாவில் ஓவியக்கலை

இந்தியாவில் இதுகாறும் கண்டறியப்பட்டுள்ள மிகப் பழைய நாகரிகம் என்று கருதத்தகும் சிந்துவெளி நாகரிகத்தில் ஓவியக்கலை, முன்சொன்ன நாடுகளிற் பெற்றிருந்த வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்று கூறச்

சான்றுகள் கிடைத்துள்ளன. சிந்துவெளி ஆராய்ச்சியிற் கிடைத்த மண்பாண்டங்கள்மீது பலவகை ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஒரு வட்டத்திற்குள் பல வட்டங்கள் தீட்டப்பட்டுள்ள திறன் கண்டு வியத்தற்குரியது. பல மண்பாண்டங்கள்மீது மரங்கள், இலைகள், இலைக் கொத்துக்கள், கட்டங்கள், குறுக்கும் நெடுக்குமாக உள்ள முக்கோணங்கள், பலதிறப்பட்ட பறவைகள், பாம்புகள், மீன்கள், விலங்குகள், கப்பல்கள் முதலியவற்றின் உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஓவியமும் மிகத் தெளிவாகத் தீட்டப்பட்டுள்ளது.* அதன் பலதிறப்பட்ட பகுதிகள் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளன. பல நிறங்களிட்டுத் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் ஓவிய இலக்கணத்துக்கு ஏற்ப நன்கு அமைந்துள்ளன. இவையன்றிச் சிந்துவெளியிற் கிடைத்த முத்திரைகளிற் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களின் வேலைப்பாடு கண்டு வியத்தற்குரியதாகும். மிகச் சிறிய முத்திரையில், அதனினும் சிறிய பகுதியில் ஒரு பொருளை உணர்த்தும் ஓவியத்தை, அப்பொருளின் பகுதிகள் அனைத்தும் பார்ப்பவர்க்குத் தெளிவாகத் தெரியுமாறு செதுக்குதல் எளிதான செயலன்று. அத்தொழிலில் மிக்க பண்பாடுற்ற தொழில் வல்லுநரே அங்ஙனம் செய்யத் தக்கவராவர். அங்ஙனம் தொழிலருமை மிகுந்த உருவங் கள் செதுக்கப்பெற்ற முத்திரைகள், தாயித்துகள் என்பன மிகப் பலவாக இருத்தலிலிருந்து, சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த பண்டைக் காலத்தில் ஓவியக்கலை பெற் றிருந்த மேன்மையை நன்குணரலாம் அன்றோ? பாடலி புரத்தில் அகப்பட்ட மோரியர் கால மண்பாண்டங்கள்மீது பொறிக்கப்பட்ட ஓவியங்கள் சிந்துவெளி ஓவியங்களின் வழி வந்தவை என்று ஆராய்ச்சியாளர் கூறுதலை நோக்க,

* மொஹெஞ்சொ-தரோ, கழக வெளியீடு, பக். 203.

இக்கலையறிவு பிற்பட்ட காலங்களில் தொடர்ந்துவந்திருக்கின்றது என்பதைத் தெளிவாக அறியலாம். அறியவே, பௌத்த சமயமும் சமண சமயமும் வீறுபெற்றிருந்த நூற்றுண்டுகளில் வட இந்தியாவில் ஓவியக்கலை வளர்ந்து வந்ததென்பது தெரிகின்றது. இனி, நமது தமிழகத்து ஓவியக்கலை வரலாற்றினைப் பார்ப்போம்.

சங்ககாலத்தில் ஓவியக்கலை

தொல்காப்பியர் காலத்தில் நடுகல் வணக்கம் இருந்தது என்பது உறுதிப்படுதலின், பழந்தமிழரிடம் சிற்பக்கலை உணர்வு இருந்ததென்பதை நாம் நன்கறியலாம். சிற்பக்கலைக்கு முதற்படியாக வேண்டப்படுவது ஓவியக்கலையாகும். சிற்பி, தான் செதுக்க இருக்கும் உருவத்தை முதற்கண் வரைந்து பார்த்தபின்னரே அவ்வோவியத்தைக் கொண்டு கல்லில் உருச்சமைப்பது இன்றளவும் இருந்துவரும் பழக்கமாகும். எனவே, தொல்காப்பியர் காலத்திலே ஓவியக்கலை உணர்வும் தமிழரிடம் இருந்ததென்று கோடல் இழுக்கில்லை. கூத்து எனப்படும் நடனக்கலை தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ளதை வள்ளிக்கூத்து முதலியவற்ருல் அறியலாம். இக்கூத்துக் கலையில் பயிற்சி பெறுவோர் ஓவிய நூலிற் பயிற்சி பெறவேண்டும் என்பது சங்ககால விதியாக இருந்தது. சிறந்த நடன மங்கையாக விளங்கிய மாதவி ஓவியச் செந்நூலில் துறைபோயவள் என்று மணிமேகலை கூறுகிறது.

> "நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை." [1]

எனவே, சங்ககாலத்தில் ஓவிய நூல் என ஒன்று வழக்கில்

---

[1] காதை 2, வரி 30–32.

இருந்ததையும், அந்நூலுள் நடனமாதர்க்குரிய பலவகை நிலைகளை உணர்த்தும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்பதையும், ஓவியரேயன்றி நடன மாதரும் அக்கலை நூலில் நுண்புலமை பெற்றிருந்தனர் என்பதையும் இவ்வடிகள் தெளிவுற உணர்த்துகின்றன அல்லவா? அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் ஓரிடத்தில் "ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள; அவற்றுள் இருத்தல்......" என்று பலபடியாகக் கூறிச்சென்றுள்ளார். இதனை நோக்க, அடியார்க்கு நல்லார் காலத்தில் (ஏறத்தாழக் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில்) ஓவியநூல் ஒன்று இருந்ததென்பது தெரிகிறது. அது மணிமேகலையிற் குறிக்கப்பெற்ற பழைய ஓவிய நூலோ, அல்லது அதனைப் பின்பற்றிப் பிற்காலத்து எழுந்த நூலோ, அறியோம்.

ஓவியம் வல்லார் 'கண்ணுள் வினைஞர்' எனப்பட்டனர். இத்தொடர்க்கு, "நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்" என்பது நச்சினார்க்கினியர் கூறியுள்ள பொருளாகும்.

" எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர் "

என வரும் மதுரைக்காஞ்சி அடிகளை நோக்குக.[2] இவ்வடிகள் அக்கால ஓவியர் சிறப்பை நன்குணர்த்துவன அல்லவா?

மாதவியின் நடன அரங்கேற்றம் நடைபெற்ற மண்டப மேற்கூரையில் பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அக்கூரை 'ஓவிய விதானம்' எனப்பட்டது.[3] கண்ணகி வழக்குரை கேட்ட பாண்டியனும் அவன் மாதேவியும் உயிர்

[2] வரி 516–18. [3] சிலப். காதை 3, வரி 106–7, 111.

துறந்தபின் ஆசான், பெருங்கணி, அறக்களத்தந்தணர் முதலியோர் “ ஓவியச் சுற்றத்து உறையவிந் திருந்தனர்,” (பேச்சற்ற சித்திரத்திரள் போல இருந்தனர்) என்று இளங் கோவடிகள் கூறுதலால், சிலப்பதிகார காலத்தில் பல சித்திரங்கள் தீட்டப்பெற்றிருந்தமையும் நன்குணரலாம்.

ஓவியங்களை அமைத்து ஆடை நெய்வதும் உண்டு.[4] கட்டடங்களில் தேவர், மக்கள் ஓவியங்களையும், பிற உயிர் களைக் குறித்த கண்கவர் ஓவியங்களையும் தீட்டுதல் தமிழர் மரபு என்பதை, மணிமேகலை முதலிய நூல்களிலிருந்து அறியலாம்.[5] ஒரு தூணில் வரையப் பட்ட பாவை கந்திற்பாவை எனப்பட்டது. ஆடை களிலும் ஓவியங்களை வரையும் பழக்கமும் பழந்தமிழரிடம் இருந்தது. மடலேறும் தலைவன் ஆடை ஒன்றில் தலைவி யைப் போல ஓவியம் தீட்டல் வழக்கமாயிருந்தது. நடன மண்டபங்களிலும் கட்டில்மீதும் சித்திர வேலைப்பாடு கொண்ட திரை இருந்தது. அது ‘ஓவிய எழினி’ எனப் பெயர் பெற்றது.

---

[4] “ செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாஅம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம் ”

(மணிமேகலை காதை 3, வரி 165–9)

[5] “ சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும் ”

(மணிமேகலை காதை 3, வரி 127–31)

ஓவியர் தாம் வரைய விரும்பும் ஓவியத்தை முதலில் மேலோட்டமாக வரைதல் (Sketch) இக்காலத்தும் நடை பெறும் பழக்கமாகும். அவர் அதன் பின்னரே ஓவியத்தைத் திறம்படத் தீட்டுவர்; நிறங்களைக் கூட்டுவர். இங்ஙனம் முதற்கண் குறிக்கப்படும் மேலோட்ட ஓவியம் சங்க காலத்தில் **புனையா ஓவியம்** எனப்பட்டது. நெடுநல் வாடை உறையில் புனையா ஓவியம் என்பதற்கு நச்சினார்க் கினியர், 'வண்ணங்களைக் கொண்டு எழுதாத வடிவைக் கோட்டின சித்திரம்' என எழுதியிருத்தல் நோக்கத் தக்கது. மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்து முருகப் பெருமான் திருக்கோயில் மண்டபங்களில், பற்பல சித்தி ரங்கள் சங்ககாலத்தில் இருந்தன. அங்கிருந்த சித்திரங் களில் கதிரவன், தண்மதி, கோள்கள், அவற்றினது நிலைமை இவற்றை உணர்த்தும் ஓவியங்கள், இரதி, மன்ம தன், இந்திரன், அகலிகை, கௌதமன் இவர்களைக் குறிக் கும் ஓவியங்கள் முதலியன குறிக்கத்தக்கன. இவற்றை யுடைய மண்டபங்கள் **எழுத்துநிலை மண்டபங்கள்** எனப் பெயர்பெற்றன.[6]

இவை அனைத்தையும் நோக்கச் சங்ககாலத்தில் (1) ஓவியர் இருந்தனர், (2) ஓவிய நூல் இருந்தது, (3) அதனை ஓவியம் கற்போரே அன்றி நாடகமகளிரும் நன்கு பயின்றிருந்தனர், (4) ஆடைகள், திரைச்சீலைகள், கட்டில் விதானங்கள் முதலியவற்றிலும் ஓவியங்கள் அமைக் கப்பட்டிருந்தன, (5) கோவில் மண்டபங்களிற் புராண இதி காச நிகழ்ச்சிகளைக் குறிக்கும் ஓவியங்கள்தீட்டப்பட்டிருந் தன, (6) நாடக அரங்கின் மேற்கூரைகளிலும் கண்கவர் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன, (7) கட்டட மாடங் களில் பல உயிர்களைக் குறிக்கும் ஓவியங்கள் காண்பவர் கண்களைக் கவரத்தக்க பேரழகுடன் வரையப்பட்டிருந்தன

[6] பரிபாடல் 19, வரி 46–53

என்பனவற்றை நன்கறியலாம். இந்த விவரங்களைக் கொண்டு, சங்ககாலத் தமிழர் ஓவியக்கலையிற் பெற்றிருந்த திறனையும், அதனை அனுபவிக்கப் பெற்றிருந்த கலை யுணர்ச்சியையும் தெரிந்துகொள்ளலாம். இனிச் சங்க காலத்துக்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் ஓவியக்கலை பெற்ற வளர்ச்சியைக் காண்போம்.

பல்லவர் காலத்து ஓவியக்கலை

பல்லவர் தமிழகத்தை ஏறத்தாழக் கி. பி. 300 முதல் 900 வரை ஆண்டுவந்தனர். எனினும், அவர்கள் ஏறத்தாழக் கி. பி. 600 முதலே நிலையாகக் காஞ்சியிலிருந்து அரசாளத் தொடங்கினர். அங்ஙனம் நிலையாக இருந்து ஆண்டுவந்த சிம்மவிஷ்ணு மரபினரே தமிழகத்தில் குடைவரைக் கோயில் களையும், ஒற்றைக்கற் கோவில்களையும் அமைத்தவர் களாவர். அவர்களே இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளைக் கவினுற வளர்த்தார்கள். அக் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவர்களுடைய கலை வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தனர். அக்காலத்தில் பல்லவ வேந்தர் கோவில்களைச் சிறப்பித்தனர்; கோவில் ஆட்சியை நன்கு அமைத்தனர்; கோவில்களில் ஓவியங் களைத் தீட்டினர்; சிற்பங்களைச் செய்தமைத்தனர்.

பல்லவர் தாம் அமைத்த கற்கோவில்களில் எல்லாம் ஓவியங்களைத் தீட்டியிருந்தனர் என்பது அக்கோவில் களில் இன்றளவும் காணப்படும் பன்னிறக் குறிகளைக் கொண்டு எளிதில் அறியலாம். கால நீட்சியாலும் கல்லின் உறுதிக் குறைவாலும் அவ்வோவியங்கள் அழிந்து பட்டன. கயிலாசநாதர் கோவிற் சுவர்கள்மேலும், சிற்பங் கள்மேலும் இங்குமங்குமாகச் சிதறிக் காணப்படும் பல நிறங்களைக் கூர்ந்து நோக்குபவர் உண்மையை உணர்வர். அங்ஙனமே மாமண்டூர்க் குடைவரைக் கோவில் சுவர்களில்

உள்ள நிறங்களைக் கொண்டும் இவ்வுண்மையை உணர லாம். அழிந்தன போக ஓரளவு நன்னிலையில் இருப்பவை சித்தன்ன வாசல் ஓவியங்களே ஆகும். ஆதலின் நாம் அவற்றைப் பற்றி விளக்கமாக அறிய முயல்வோம்.

சித்தன்னவாசல் *

'சித்தானம்-வாசஹ்' என்னும் வடமொழித் தொடர் 'துறவிகள் இருப்பிடம்' என்னும் பொருளைத் தருவது. இது சிதைந்து 'சித்தன்னவாசல்' என்றாயிற்று என்பது ஆராய்ச்சியாளர் கூற்றாகும். சித்தன்னவாசல் திருச்சி ராப்பள்ளியிலிருந்து புதுக்கோட்டைக்குச் செல்லும் பஸ் (Bus) வழியில் இருப்பது. அங்குப் பல சிறிய குன்றுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று குடைவரைக் கோவிலை உடையது. அக்கோவில், முன்மண்டபம் எனத்தகும் சிறிய தாழ்வாரத்தையும் சதுரவடிவில் அமைந்துள்ள உள்ளறையையும் உடையது. அதில் காணத் தக்கவற்றுள் (1) முன்மண்டபத் தூண்களில் உள்ள நடனமாதர் ஓவியங்கள், (2) அரசன்—அரசியர் ஓவியங்கள், (3) கூரை யில் உள்ள ஓவியங்கள் என்பன சிறந்தனவாகும்.

நடனமாதர் ஓவியங்கள்

முன்மண்டபத் தூண்கள் நான்கில் கடைசி இரண்டும் சுவர்களோடு இணைந்தவை. நடுவில் இருக்கும் இரண்டின் இடைப்பட்ட வழியிற்றான் கோவிலைப் பார்ப்பவர் நுழைதல் கூடும். அங்ஙனம் நுழைபவரை இன்முகங் காட்டி வர வேற்பன போல இரண்டு தூண்களிலும் நடன மாதர் இருவர் ஓவியங்கள் அமைந்துள்ளன. வலத்தூண் மீதுள்ள ஓவியம் மற்றதைவிட நன்னிலையில் இருக் கின்றது. வலத்தூண்மீது காணப்படும் நடனமாதின் தலை ஒப்பனை கொண்டது. கூந்தல் நடுவில் பிரிக்கப்

பட்டுத் தலைமீது முடியப்பட்டுள்ளது. அம்மயிர் முடிப்புச் சில அணி விசேடங்களாலும் மலர்க் கொத்துக்கள், தாமரை இதழ்கள், கொழுந்து இலைகள் இவற்றாலும் அழகு செய்யப்பட்டுள்ளது; காதணிகள் வளையங்களாகக் காட்சி அளிக்கின்றன. அவ்வளையங்களிற் கற்கள் பதிக்கப் பெற்றுள்ளன; பலதிறப்பட்டனவும் சிறந்த வேலைப்பாடு கொண்டனவுமான கழுத்தணிகள் அவளது கழுத்தினைப் பேரழகு செய்கின்றன; கைகளில் கடகங்களும் வளையல்களும் திகழ்கின்றன; வலக்கையின் கட்டை விரலிலும் சுண்டு விரலிலும் மோதிரங்கள் காணப்படுகின்றன; நடனமாதின் மேலாடைகள் இரண்டில் ஒன்று இடையிற் கட்டப்பட்டுள்ளது; பிறிதொன்று தோளைச் சுற்றிப் பின்புறம் விடப்பட்டுள்ளது; பின்னது வனப்புடைத் தோற்றத்துடன் காணப்படுகின்றது. ஆடையின் சுருக்கம் முதலிய அமைப்புக்கள் மிக்க ஒழுங்காகவும் தெளிவாகவும் ஓவியத்திற் காட்டப்பட்டுள்ளமை அக்கால ஓவியர் திறனை நன்கறியச் செய்வதாகும்.

இடத்தூண்மீது இருக்கும் ஓவியம் பழுதுபட்டிருக்கின்றது. எனினும், அது முன்னதைவிட அழகும் மென்மைத் தோற்றமும் கொண்டது. அவ்வோவியம் உணர்த்தும் நடனமாதின் மயிர் முடிப்பு முன்னதைவிடச் சிறிதளவு வேறுபாடு கொண்டது. ஆயினும், அணி வகைகளில் வேறுபாடு காணுமாறில்லை.

அரசன்—அரசியர் ஓவியங்கள்

வலப்புறத் தூணின் உட்புறப் பகுதியில் ஓர் அரசன் தலையும் அவன் மனைவி தலையும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. அரசனது தலையில் சிறந்த வேலைப்பாடு கொண்டதும் மணிகள் பதித்ததுமாகிய மகுடம் காணப்படுகின்றது. அவன் கழுத்தில் மணிகள் பதித்த மாலைகள்

காணப்படுகின்றன. காதுகளில் குண்டலங்கள் தொங்கு கின்றன. அரசியின் தலைமீதும் ஒருவகை மகுடம் காணப்படுகின்றது. அதனைக் கூந்தல் முடிப்பு என்றும் சிலர் கருதுகின்றனர். அவள் காதுகளிலும் வளையங்கள் அழகுசெய்கின்றன. அவள் முகம் புலவர்கள் சிறப்பித்துக் கூறும் மதிமுகமாகக் காணப்படுகின்றது.

இந்த அரசன் யாவன் ?

இந்த அரசன் யாவன் என்பதைக் கண்டறியின், இவ்வழகுடை ஓவியங்களின் காலத்தைக் கண்டறியலாம். பெருந்தோற்றமும் பெருந்தன்மையுங் கொண்ட இந்த முகம், மாமல்லபுரத்து ஆதிவராகர் கோவிலில் உள்ள மகேந்திரவர்மனது சிலையிற் காணப்படும் முகத்தையே பெரிதும் ஒத்துள்ளது. சித்தன்னவாசல் கோயில் சமணர்க்குரியது. மகேந்திரன் முதலில் சமணனாயிருந்து பின் சைவனாக மாறியவன். குடைவரைக் கோயில்களைத் தமிழகத்தில் தோற்றுவித்தவனும் அவனேயாவான். இம் மூன்று காரணங்களாலும் சித்தன்னவாசல் ஓவியங்கள் மகேந்திரன் காலத்தவை என்று அறிஞர் கூறலாயினர். மகேந்திரன் காலம் ஏறத்தாழக் கி. பி. 600—630 என்ன லாம். இதுவே சித்தன்னவாசல் ஓவியங்களின் காலமும் ஆகும். திருநாவுக்கரசர் வாழ்ந்த காலமும் இதுவேயாகும்.

கூரையில் உள்ள ஓவியம்

முன்பண்டபக் கூரை முழுவதையும் அழகுசெய்து கொண்டிருக்கும் ஓவியம் மிக்க சிறப்புடைய வேலைப்பாடு கொண்டது. இந்த ஓவியம் ஒரு தாமரைக் குளத்தைக் குறிப்பதாகும். இதனில் தாமரை இலைகளும் போதுகளும் மலர்களும் மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கிடையே மீன்கள், அன்னங்கள், யானைகள்,

எருமைகள் இவற்றின் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவற்றுடன் சமணப் பெரியார் மூவர் குறிக்கப்பட்டுளர். அவருள் இருவர் தத்தம் கைகளில் தாமரை மலர்களைத் தாங்கியுள்ளனர். ஒருவர் இடக்கையில் மலர்க்கூடை தாங்கி, வலக்கையால் மலர்களைப் பறிக்கின்றனர். இந்த ஓவியத்தில் காணப்படும் குளத்து நீர் மிகத் தெளிந்த நிலையிற் காட்டப்பட்டுள்ளது. மலர்கள் இயற்கை மலர் களை ஒத்துள்ளன. சுருங்கக் கூறின், நேராகத் தாமரைக் குளத்தைக் காண்பவர் பெறும் உணர்ச்சியையே இந்த ஓவியம் அளிக்கின்றதென்னல் மிகையாகாது. இங்ஙனம் உண்மையை ஒத்து வரையப்படும் ஓவியமே '**உயிர் ஓவியம்**' எனப்படுவது. இந்த உயிரோவியம் வரையப் பட்டு இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் இஃது இன்றளவும் தன் உயிர்ப்பினை உடையதா யிருத்தல், இதனைத் தீட்டிய பெருமக்களது கலைப்பண்பின் உணர்ச்சியையன்றோ உணர்த்துவதாகும்! அவ்வோவியப் பெருமக்கட்கு நமது வாழ்த்தும் வணக்கமும் உரியவாகுக!

உள்ளறையின் மேற்கூரை ஓவியங்கள் சிலவாகும். அவை ஸ்வஸ்திகா, சூலம், சதுரம், தாமரை மலர் முதலியவற்றை உணர்த்துவன.

இவை எங்ஙனம் தீட்டப்பட்டன ?

கற்சுவர்கள் அல்லது பாறைகள்மீது ஓவியங்கள் எவ்வாறு தீட்டப்பட்டன என்பதனை நாம் அறிதல் இன்றியமையாததாகும். கற்சுவர்ப்புறம் சிறிதளவும் மேடு பள்ளம் இல்லாமல் இருப்பது அருமையாகும். மேடு பள்ளம் இருப்பின் ஓவியம் தீட்டுதல் இயலாது. மேலும் பல நிறங்கொண்ட ஓவியங்களைப் பாறைமீது தீட்டுதல் இயலாது. ஒரு நெல் அளவுக்குச் சுண்ணச் சாந்து பூசப்படும். சலித்தெடுக்கப்பட்ட பூமணல், வைக்கோல்,

கடுக்காய் முதலியவற்றை வெல்லநீருடன் அல்லது பனஞ் சாற்றுடன் கலந்து அரைத்த சுண்ணச் சாந்தே கற்சுவரில் உறுதியாகப் பற்றிக்கொள்ளும் தன்மையுடையது. சாந்து பூசப்பட்டவுடன் அது காய்வதற்குள், ஓவியன் மஞ்சட் கிழங்கைக் கொண்டு தான் வரைய விரும்பும் ஓவியத்திற் குரிய இரேகைகளை வரைந்துகொள்வான். அங்ஙனம் வரையப்பட்ட புனையா ஓவியம் (இரேகை ஓவியம்) சுண்ணும்புடன் மஞ்சள் கலந்ததால் செந்நிறம் பெற்றுத் திகழும். பின்னர் ஓவியன் தன் ஓவியத்துக்கு வேண்டிய பல நிறங்களைத் தீட்டுவான். அவன் பல நிறங்களைத் தரும் பச்சிலை நிறங்களையே பயன்படுத்துவான்; ஈரம் காய்வதற்கு முன் கூழாங்கற்களைக் கொண்டு சுவரை வழவழப்பாக்க மெருகிடுவான். இங்ஙனம் தீட்டப்படும் ஓவியம் பல நூற்றுண்டுகள் அழியாமல் இருக்கும் என்பது ஓவியம் வல்லார் கூறும் செய்தியாகும். இத் தகைய செவ்விய முறையில் வரையப்பட்டமையாற்றான் சித்தன்னவாசல் ஓவியங்கள் இன்றளவும் தம் எழில் சிதையாது காண்பவர் கண்களைக் கவரத்தக்கனவாக உள்ளன.*

ஓவியங்கள் உணர்த்துவன

சித்தன்னவாசல் ஓவியங்கள் நம் முன்னோரது ஓவியக் கலைச் சிறப்பினை உலகறியச் செய்கின்றன; அக் கால மகளிருடைய உடை விசேடங்களையும் அணி வகைகளையும் கூந்தல் ஒப்பனையையும் அரசன் அணிச் சிறப்பினையும் முடிச் சிறப்பினையும் உணர்த்துகின்றன; சமண சமய உண்மைகளையும் ஓரளவு தெரிவிக்கின்றன. நாம் இவை அனைத்தையும் இலக்கியங்களிலிருந்து படித்துணர்வதை விட ஓவியங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுதலில்

* பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, பக். 294-298.

தனிப்பட்ட இன்பமுண்டு. காவியங்களில் உள்ளவற்றைக் கற்றவரே உணரமுடியும். ஆயின், ஓவியங்கள் கல்லாதாரையும் அறியச் செய்யும் ஆற்றல் பெற்றவை. ஆதலின் இத்தகைய ஓவியங்கள் பொன்னே போலப் போற்றத் தகுவனவாகும்.

சோழர் காலத்து ஓவியக்கலை

தென்னாட்டில் சித்தன்னவாசல் ஓவியங்கட்குப் பின் ஓவியக்கலை எவ்வாறு வளர்ச்சி பெற்றுவந்தது என்பதை அறியத் தக்க சான்றாக அமைந்திருப்பவை தஞ்சைப் பெரியகோவில் ஓவியங்களாகும். அவை கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டவை. திருத்தொண்டத் தொகை அருளிச்செய்த சுந்தரர் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற வரலாற்று நிகழ்ச்சியும், சுந்தரரும் சேரமானும் திருக்கயிலை செல்லும் காட்சியும் மிக்க அழகான ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

சிவபெருமான் கிழவேதியராக வந்து சுந்தரரது திருமணத்தை 'அற்புதப் பழ ஆவணங் காட்டி'த் தடைசெய்த வரலாற்றை உணர்த்தும் ஓவியம் கூர்ந்து கவனிக்கத் தக்கது. மணமண்டபத்தில் மணத்திற்கு வந்த மறையவர்கள்-மணமகன்-ஒரு கையிற் குடையும் மற்றொரு கையில் சுந்தரரது பாட்டனார் வரைந்து கொடுத்ததாகக் கூறப்பட்ட அடிமைப்பத்திரமும் கொண்ட கிழவேதியர் (சிவபெருமான்) ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். தாம் அடிமை என்பதைக் கேட்டவுடன் சுந்தரர் வியப்பும் சீற்றமும் கொண்டனர் என்பதை அவரது முகத்தோற்றம் நன்கு உணர்த்துகிறது. அவர்கட்குப் பின்புறம் ஒரு கோவில் கட்டப்பட்டுள்ளது.


இரண்டாம் ஓவியத்தின் மேற்பகுதி திருக்கயிலைக் காட்சியை உணர்த்துகிறது. சிவபெருமான் புலித்தோல்

மீது அமர்ந்திருக்கின்றார். சுற்றிலும் தேவ கணங்களும் முனிவர்களும் காணப்படுகிறார்கள். கீழ்ப்பகுதியில் சுந்தரர் வெள்ளானைமீது இவர்ந்து போதலும், அவருக்குப்பின் சேரமான் பெருமாள் நாயனார் குதிரைமீது செல்வதும் சித்திரிக்கப்பட்டுள்ளன. யானையுங் குதிரையும் பலவகை அணிகளுடன் காணப்படுகின்றன. கையில் தாளத்துடன் திருப்பதிகம் பாடிக்கொண்டே கயிலை நோக்கிச் செல்வ தாகச் சுந்தரர் உருவம் தீட்டப்பட்டுள்ளது. யானையை விடக் குதிரை மிக்க வேகமாகச் செல்கின்றது. ஓவியங் களில் சுந்தரரும் சேரமானும் தாடி வைத்துள்ளனர்; மயிர் முடிப்புக் கொண்டுள்ளனர்; பலவகை அணிகளை அணிந்துள்ளனர்.

கோமகள் ஒருத்தி, அவளைச் சேர்ந்த பணிப்பெண்கள் இவர்தம் ஓவியங்கள் காணத்தக்கவை. இவை அக்காலப் பெண்களின் உடை விசேடங்களையும் அணி விசேடங் களையும் நமக்கு அறிவிப்பவனமாகும். மற்றொருபால் தீட்டப்பட்டுள்ள ஆடல் பாடல்களில் வல்ல மகளிர் ஓவியங்கள் இன்புறுத்துவனவாகும். அம்மகளிர் உடை களும் அணிகளும் அவர்தம் இசைக்கருவிகளும் நன்கு புலப்படும் வகையில் தீட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங் கள் அனைத்தும் சோழர் காலத்து மக்களுடைய உடல் அமைப்பு—உடைவிசேடம்—அணிச் சிறப்பு முதலியவற்றை நமக்கு நன்முறையில் எடுத்துக் காட்டுவனவாகும்.

நாயக்கர் கால ஓவியங்கள்

சோழர்க்குப் பின்வந்த விஜயநகரப் பேரரசின் பிரதி நிதிகளாகச் சோணாட்டிலும் பாண்டிய நாட்டிலும் இருந்து ஆண்ட நாயக்க மன்னர் காலத்தில் ஓவியக்கலை பெற் றிருந்த மேன்மையை மேற் சொல்லப்பட்ட தஞ்சைப் பெரிய கோவிலிலேயே கண்டு களிக்கலாம். நாயக்கர்க்குப் பிற்



தஞ்சைப் பெரிய கோவில் ஓவியம் [பக்கம் 90]



சித்தன்னவாசல் ஓவியங்கள்

படத் தஞ்சையை ஆண்ட மகாராட்டிரர் கால ஓவியங்களைத் தஞ்சை அரண்மனையில் பார்த்து மகிழலாம்.

ஓவியங்கள் விழிகட்கு விருந்தூட்டுவன; அவை தோன்றிய காலத்து மக்களை நமக்கு அறிவிப்பன; அக்கால உடை-அணி-கூந்தல் ஒப்பனை முதலியவற்றை உணர்த்துவன; இவை அனைத்திற்கும் மேலாகத் தாம் தோன்றிய காலத்து ஓவியக்கலைத் திறனை நமக்கு உள்ளங்கை நெல்லிக் கனியென உணர்த்துவனவாகும். இக்காரணங்களாற்றான் அரசியலார் பண்டை ஓவியங்களை மேலும் அழிந்துவிடாமற் காத்துவருகின்றனர்.

8. சிற்பக்கலை

சங்க காலம்

சிற்பக் கலை

மக்கள் தாம் காட்டவிரும்பும் பொருள்களின் உருவங்களைக் கல்லிற் செதுக்கி அமைத்தல் சிற்பமாகும். இக் கலையுணர்ச்சி ஆறறிவு படைத்த மனிதர்க்குக் கற்காலத்திலிருந்தே தோற்றமாயிற்று என்பது கற்கால மக்களைப்பற்றி ஆராய்ந்த அறிஞர் கருத்தாகும். அக்கலையுணர்ச்சி மனிதனது நாகரிக வளர்ச்சியுடன் வளர்பிறைபோல வளர்ச்சி பெற்றுவந்தது என்பதை நூற்றுண்டு வாரியாக அறிஞர் கணக்கிட்டுள்ளனர். இங்ஙனமே அறிவியற் கலைகள் அனைத்தும் பண்டை மக்களிடமிருந்தே படிப்படியான வளர்ச்சியைப் பெற்று, இன்றுள்ள நிலையில் இலங்குகின்றன. இனி இச்சிற்பக்கலை எங்ஙனம் தமிழர் செல்வமாய் வளர்ந்துவந்தது என்பதைக் காண்போம்.

நடுகற் சிற்பம்

நம் பண்டை நூல்களிற் பழமை வாய்ந்தது தொல்காப்பியமாகும். அப்பெரு நூலிற் சிற்பக்கலை பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. போரில் தன் ஆற்றலைத் தோற்றி விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு அறிகுறியாக ஒரு கல்லை நட்டு அதனில் அவனது உருவத்தைப் பொறித்தல் வழக்கமாகும். அவனுடைய பெயரும் பீடும் பொறித்து மற்ற மக்கள் அவனைப் பாராட்டி வழிபடுவர். இப்பழக்கம் தம் காலத்தில் புதியதாகத் தோன்றியது என்று தொல்காப்பியர் கூறுமையின், அவர் காலத்திற்கு முற்பட்டது என நாம் கொள்ளத் தடையில்லை. எனவே, வீரர்க்குச் சிலை அமைக்கும் வழக்கம் தொல்காப்பியர்க்கும் முற்பட்டதென்பது போதரும்.

நம் முன்னோர் இதனை எங்ஙனம் அமைத்து வந்தனர்? அவர்கள் இதுபற்றி ஆறு படிகளைக் கையாண்டனர் என்பது தெரிகிறது. முதற்படி—கல்கெழு சுரத்திற் சென்று கற்காண்டல், அக்கல்லைக் கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப் பின்னர்க் கற்காண்டலும் என இருவகைத்து. இரண்டாம் படி—கல்லுறுத்து இயற்றுதற்குக் கால் கோடலும், கல் நாட்டிய பின்பு அவ்வீரன் ஆண்டு வருதற்குக் கால் கோடலும் என இருவகைத்து. மூன்றாவது—கண்டு கால் கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டியவழி நீராட்டுதலும் என இருவகைப்படும். நான்காவது—கல்லினை நடுதலும், அக்கல்லின்கண் மறவனை நடுதலும் என இருவகைத்து. ஐந்தாவது—அவ்வீரனின் புகழைப் பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புக்களைப் படைத்தலும் என இருவகைத்து. ஆறாவது—கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலும் என இருவகையாகும். இந்த ஆறு படிகளும் முறையே **காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை, வாழ்த்தல்** எனத் தொல்காப்பியத்திற் பெயர் பெறும்.

ஓர் உருவத்தைப் பொறிப்பதெனின், அதற்குத் தகுதியான கல்லைத் தேர்ந்தெடுத்தல் எளிதன்று. அதனைத் தேர்ந்தெடுக்கவல்லவர் சிற்பத் தொழிலாளரேயாவர். எனவே, 'கற்காண்டல்' என்று மேற்சொன்ன முதற்படியினால் அக்காலத்தில் கல்லைத் தேர்ந்தெடுக்கும் சிற்பிகள் இருந்தனர் என்பதும், சிற்பக்கலை உணர்வு தமிழரிடம் ஓரளவு உயர்நிலையில் இருந்தது என்பதும் அறியப்படும்.

பத்தினிச் சிலை

தொகைநூல்களிலிருந்தும் சிலப்பதிகாரம், மணி மேகலை என்ற பண்டைக் காவியங்களிலிருந்தும் தமிழகத்திற் கோவில்கள் பல இருந்தன என்பதும், கடவுளர் உருவங்களையும் பிறர் உருவங்களையும் அமைக்கும் மண்ணீட்டாளர் இருந்தனர் என்பதும் அறியலாம். வீரர் உருவங்களைக் கல்லிற் பொறிக்கும் சிற்பத் தொழிலாளர் தொல்காப்பியர் காலத்திலே இருந்தனர் எனின், அதற்குப் பிற்பட்ட தொகை நூற்களின் காலத்தில் இருந்திருத்தல் வேண்டுமென்பது கூருதே அமையுமன்ரே? செங்குட்டுவனுல் இமயமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட கல்லில், பத்தினிக் கடவுளின் உருவம் பொறிக்கப்பட்டது என்பதிலிருந்து, கி. பி. இரண்டாம் நூற்ருண்டில் நிலவியிருந்த தமிழ்நாட்டுச் சிற்பக்கலை உணர்ச்சியை ஒருவாறு உணரலாம்.

பல்லவர் காலம்

குடைவரைக் கோவில்கள்

இங்ஙனம் தமிழகத்தில் தோன்றிப் பல நூற்ருண்டுகளாக வளர்ந்துவந்த சிற்பக்கலையறிவு பல்லவர் காலத்தில் விரைந்து வளர்ச்சியுற்றது. பல்லவருட் சிறந்து விளங்கிய மகேந்திரவர்மன் என்பவன் சிறந்த வடமொழிப்புலவன்; சிற்பம்–ஓவியம்–இசை–நடனம்–நாடகம் முதலிய கலைகளில் வல்லவன்; அவற்றிற் சிறந்த பற்றுடையவன்; கட்டடப் பிரியன். அப்பெரியோன் சிறந்த கலையின்பன் ஆதலின், அவன் காலத்தில் மேற்சொன்ன பல கலைகளும் தமிழகத்தில் நன்கு வளர்ச்சி பெற்றன. அவன் முதலில் குன்றுகளின் சரிவில் உள்ள பகுதியைக் குடைந்து கோவில்களை அமைக்கத் தொடங்கினுன். நீள் சதுரமுள்ள கூடம், அதன் எதிர்ப்புறப் பாறையில் சில சிறிய அறை

கள், அந்த அறைகளில் தெய்வங்களின் உருவச்சிலைகள், முன்கூடத்தில் நான்கு அல்லது ஆறு கற்றூண்கள் ஆகிய இவையே குடைவரைக் கோவிலிற் காணப்படுவன. இங்ஙனம் பாறையைக் குடைந்து கோவிலாக்குதல் எளிதான செயலன்று. ஆயினும், இதனை மகேந்திரன் உறுதியாக மேற்கொண்டான். அவன் ஊக்கத்தைக் கண்ட தமிழகத்துச் சிற்பிகள் உடனுழைத்து இக்குடைவரைக் கோவில்களை அமைத்தனர்; உருவச் சிலைகளை அமைத்தனர். இங்ஙனம் மகேந்திரன் அமைத்த குடைவரைக் கோவில்கள் பலவாம். அவை சென்னையை அடுத்த **பல்லாவரம்** (பல்லவபுரம்), செங்கற்பட்டிற்கு அண்மையில் உள்ள **வல்லம்**, தென் ஆர்க்காட்டுக் கோட்டத்தில் பேரணிப் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கில் ஐந்து கல் தொலைவில் உள்ள **தளவானூர்**, அக்கோட்டத்தில் உள்ள **மண்டகப்பட்டு**, வட ஆர்க்காட்டுக் கோட்டத்துச் **சீயமங்கலம்**, அக்கோட்டத்தில் சோளிங்கரை (சோழ சிங்கபுரம்) அடுத்துள்ள **மகேந்திரவாடி**, செங்கற்பட்டுக் கோட்டத்தில் உள்ள **மாமண்டூர்**, திருச்சிராப்பள்ளியை அடுத்த **சித்தன்னவாசல்** என்பன.

இக்குடைவரைக் கோவில்கள் பலவற்றில் இன்று கடவுளர் உருவங்கள் காணுமாறில்லை. எனவே, அங்கு இருந்தவை தனித்தனி உருவச்சிலைகள் என்பதும் அவை பிற்காலத்தில் அப்புறப்படுத்தப்பட்டன என்பதும் தெளிவாகின்றன. தூண்களுட் கரடுமுரடான சதுரத் தூண்கள் பல; ஓரளவு வேலைப்பாடு கொண்ட தூண்கள் சில. இவ்விருவகைத் தூண்களும் சிற்பக் கலைவளர்ச்சியை நமக்கு உணர்த்துவனவாகும். சில தூண்களில் இரண்டு சதுரங்கள் காணப்படுகின்றன. அவற்றின் மேற் சதுரத்தில் சிங்கமும், கீழ்ச் சதுரத்தில் தாமரை மலரும் செதுக்கப்பட்டுள்ளன. உருவச் சிலைகள் இருந்த மாடங்

களின் உச்சியில் 'இரட்டைத் திருவாசி' என்னும் தோரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வாயிற் காவலர் உருவங்கள் காணத்தக்கவை. அவர்சள் நேரான பார்வை உடையவர்கள். சில கோவில்களில் அவர்களுடைய கால்கள் ஒன்றன்மீதொன்ருகக் குறுக்கிட்டுக் காணப் படுகின்றன; தலையில் மயிர் அடர்ந்து காணப்படுகிறது; கதாயுதத்தின்மீது கை பொருந்தியிருக்கின்றது. இக் கோவில்கள் சிலவற்றில் மகேந்திரன் காலத்து உருவச் சிலைகள் சில இன்றளவும் இருந்துவருகின்றன.

அரசர்—அரசியர் உருவச்சிலைகள்

கலையின்பனுன மகேந்திரவர்மன் உருவச்சிலையும் அவன் தந்தையின் உருவச்சிலையும் மாமல்லபுரத்து ஆதி வராஹர் கோவிலில் இருக்கின்றன. அவை மகேந்திரன் காலத்திற் பொறிக்கப்பட்டவை என்று அறிஞர் கூறுகின்ற னர். அச்சிலைகளைக் கூர்ந்து கவனித்தல் நல்லது. மகேந் திரவர்மன் தந்தையான **சிம்மவிஷ்ணு**, முக்காலி என்று கருதத்தகும் அரியணைமீது அமர்ந்துள்ளான். அவனது இடக்கால் அரியணைமீது மடங்கியுள்ளது. வலக்கால் நிலத் தில் படிந்துள்ளது. அவனது இடக்கை இடத்தொடைமீது வைக்கப்பட்டுள்ளது; வலக்கை ஞான முத்திரை நிலையில் உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசன் நீண்ட காதணிகளையும் கழுத்தணிகளையும் அணிந்திருக்கிருன். அவன் தலைமீது காணப்படுவது அரசமுடி என்னலாம். அவனுக்குப் பக்கத்தில் அவனுடைய அரசமாதேவியர் இருவர் நின்ற வண்ணம் காட்டப்பட்டுள்ளனர். அவர்களும் முடிகளை அணிந்துள்ளனர்.

மற்ருெரு பக்கத்துச் சுவரில் சிம்மவிஷ்ணு மக ஞன **மகேந்திரவர்மன்** உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மகேந்திரன் நின்ற கோலத்தில் காணப்படுகிருன். அவ

னுடைய அரசமுடி, காதணி, கழுத்தணிகள் என்பன அவன் தந்தை அணிந்திருப்பவற்றையே ஒத்திருக்கின்றன. உடல் அமைப்பில் மகேந்திரன் தன் தந்தையினும் சிறிது பருத்துக் காணப்படுகிறான். அவனது எடுப்பான தோற்றம் அவன் கருதியதை முடிக்கும் வன்மையுள்ளவன் என்பதைக் காட்டுகிறது. அவனது வலக்கை கோவிற் கருவறையைச் சுட்டுகிறது. இடக்கை தன் மனைவியருள் ஒருத்தியின் கையைப் பற்றியுள்ளது. தந்தைக்கு மனைவியர் இருவர் வாய்த்தாற்போலவே மைந்தர்க்கும் மனைவியர் இருவர் இருந்தனர் என்பது இச்சிற்பத்தால் தெரிகிறது. தந்தை, மைந்தன் ஆகிய இருவர்தம் உடை விசேடங்களையும் நன்கு உணர்த்திய அக்காலச் சிற்பிகளது வேலைத்திறனை என்னென்பது!

ஒற்றைக் கற்கோவில்கள்

மகேந்திரன் மகனான நரசிம்மவர்மன் காலத்தில் சிற்பக்கலை பெருவளர்ச்சி அடைந்ததென்னலாம். அவன் காலத்தில் சிறு குன்றுகள் கோவில்களாகச் செதுக்கப்பட்டன. அவையே மாமல்லபுரத்திலுள்ள **ஒற்றைக்கல் கோவில்கள்** என்பன. அவை தனித்தனி விமான அமைப்பும் சிற்ப வேலைப்பாடும் கொண்டவை. யானை, சிங்கம் முதலியன தனித்தனிக் கல்லில் செதுக்கப்பட்டன. நரசிங்கன் காலத்துத் தூண்கள் குறிக்கத்தக்கவை. மகேந்திரன் காலத்துத் தூண்கள் சதுரத்தூண்களாகச் செய்யப்பட்டன அல்லவா? ஆயின் அவன் மகன் காலத்தில் தூண்கள் சிங்கத் தூண்களாகக் காட்சியளித்தன. தூணின் அடியில் சிங்கம் அமர்ந்த நிலையில் இருக்கிறது. அதன் முதுகின்மீது தூணின் மேற்பகுதி செல்லுகிறது. தூணின் மேற்பகுதியில் அழகிய வேலைப்பாடு அமைந்துள்ளது.

நரசிம்மவர்மன் காலத்துக் கற்கோவிற் புறச்சுவர்களில் அவன் உருவம் அழகாகப் பொறிக்கப்பட்டது. அவனுக்குப் பிற்பட்ட பல்லவர் உருவங்களும் அங்ஙனமே புறச்சுவர்கள்மீது பொறிக்கப்பட்டுள்ளன.

கயிலாசநாதர் கோவிற் சிற்பங்கள்

நரசிங்கனுக்குப் பின்வந்த **இராஜசிங்கன்** புது முறையில் கற்கோவிலை அமைக்கத் தொடங்கினுன். அவன் கற்களைச் செங்கற்களைப் போல உடைத்து, அவற்றை ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கி, இன்றுள்ள கோவில்களைப் போலக் கட்டினுன். அவ்வாறு கட்டத் தொடங்கிய முதல் அரசன் இராஜசிங்கனேயாவான். அவன் கருவறைமீது பல அடுக்குகளைக் கொண்ட விமானத்தை அமைக்க முற்பட்டான். அவ்விதமான அமைப்பினை மாமல்ல புரத்துக் கடற்கரைக் கோவிலிலும் காஞ்சி - கயிலாச நாதர் கோவிலிலும் காணலாம்.

காஞ்சி—கயிலாசநாதர் கோவில் சிற்பக் கொலுக் கூடம் என்ருல் தவருகாது. திருச்சுற்றுச் சுவரில் தென்ருட்டில் வேறெங்கும் காணுதற்கியலாத சிறு சிறு கோவில்கள் ஐம்பதுக்கு மேற்பட்டன செதுக்கப்பட்டுள. அவற்றில் சிவபிரான் திருமணம், உமையம்மை தோழிகளுடன் இருத்தல், சிவனை வழிபடல், இருடிகள் தவங்கிடத்தல் போன்ற புராண—இதிகாசச் செய்திகளைக் குறிக்கும் சிற்பங்கள் பல இருக்கின்றன. நான்கு சுவர்களிலும் காணப்படும் இச்சிறு கோவில்களும் உருவச் சிலைகளும் வியப்புடன் கவனித்தற்குரிய வேலைப்பாடு கொண்டவை.

கருவறையின் புறச்சுவர்களிலும் இத்தகைய உள்ளறைகள் இருக்கின்றன. அவற்றில் சிவபிரானைப் பிரமன், திருமால் முதலியோர் வழிபடுதலை உணர்த்தும் சிற்பங்கள் சிலவும், சிவனுர் ஆடிய ஊர்த்துவ நடனம்,

பதாகை நடனம், குஞ்சித நடனம் முதலிய பல நடன வகைகளை உணர்த்தும் சிற்பங்கள் பலவும் காட்சியளிக்கின்றன. கோவிற் சுவர்களில் காந்தருவர் இசைக் கருவிகளை வைத்துக்கொண்டு இசைபாடுதல், சிற்பங்கள் வாயிலாகக் காட்டப்பட்டுள்ளது. பதினாறு பட்டைகளையுடைய பெரிய சிவலிங்கம் கோவிலில் காட்சியளிக்கிறது. அதன் வழவழப்பான வேலைப்பாடும் முன் சொன்னவையும் கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் இருந்த சிற்பக்கலை வளர்ச்சியை நன்கு காட்டுவனவாகும். இராஜசிங்கன் காலத்துத் தூண்கள் கவனிக்கத்தக்கவை. நாம் நரசிங்கன் காலத்துத் தூண்களில் அமர்ந்த நிலையிலுள்ள சிங்கங்களைக் காண்கிறோம்; இராஜசிங்கன் காலத்துத் தூண்களில் நிற்கின்ற நிலையில் உள்ள சிங்கங்களைக் காணலாம். இந்நிலையிலுள்ள சிங்கத் தூண்களே பிற்காலத்தில் மிகுதியாகச் செதுக்கப்பட்டன. இராஜசிங்கனுக்குப் பின்வாழ்ந்த அரசர் கட்டுவித்த கோவில்களிலும் இவ்வகைத் தூண்கள் இருத்தலின், இந்த உண்மை புலனாகிறதென்னலாம்.

வைகுந்தப் பெருமாள் கோவிற் சிற்பங்கள்

இராஜசிங்கற்குப் பின் வந்த **இரண்டாம் பரமேசுவரவர்மன்** (கி. பி. 715—780) காலத்துச் சிற்பக்கலை வளர்ச்சியைக் காஞ்சி—வைகுந்தப் பெருமாள் கோவிற் சிற்பங்களைக் கொண்டு நன்கறியலாம். கோவில் திருச்சுற்றின் உட்புறச் சுவர்கள் முழுவதிலும் பல்லவ வேந்தர் வரலாறு முழுவதையும் உணர்த்தும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில், நரசிங்கன் முன் வாதாபியிலிருந்து கொணர்ந்த பொருள்களைப் பரஞ்சோதியார் வைத்து வணங்குதல் ஒரு சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. திருச்சுற்றின் நடுவில் உள்ள தனிக் கட்டட

மாகிய கருவறையுள் நீலவண்ண நெடுமால் நின்ற திருக் கோலத்தில் இருப்பது விழிகளாரக் காணக்தகும் பெருங் காட்சியாகும். ஒரே கல்லில் செதுக்கப்பட்ட அந்தப் பெரிய திருவுருவம் அழகு மிக்கது. கருவறைமீது உள்ள விமானம் கயிலாசநாதர் கோவில் விமானம் போன்றது. இவ்வகை விமானங்களின் பிற்கால வளர்ச்சியே தஞ்சைப் பெரிய கோவில் விமானமாகும்.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள்

மாமல்லபுரத்துப் பாறைச் சிற்பங்கள் இதிகாச—புராண நிகழ்ச்சிகளைக் குறிப்பன. அவை பல்லவர் காலத்தன. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவை பகீரதன் தவத்தைக் குறிக்கும் சிற்பம் என்னலாம். அச்சிற்பம் ஏறக்குறைய நூற்றைம்பதுக்கு மேற்பட்ட உருவங்களைக் காட்டுகிறது. இரண்டு பக்கங்களிலும் பெரிய பாறைகளால் அடைக்கப்பட்டு, அவற்றின் நடுவே தோன்றும் பெரிய பிளவும், அப்பிளவில் நாகர், நாககன்னியர் உருவங்களும் காணப்படுதல் சிற்பத்தின் ஒரு பகுதியாகும். முன் சொல்லப்பட்ட பிளவு இயற்கையாகவே மழைநீர் பாயும் ஓர் அருவியின் வழியாகும். அது, கங்கை வானத்திலிருந்து கீழே இறங்குவதைக் குறிப்பதாகும். மழைக் காலத்தில் அப்பிளவின் வழியாகக் கீழிறங்கும் நீர், கங்கை வானத்திலிருந்து கீழ்நோக்கி வந்த முறையை உணர்த்தி நிற்கிறது. சிற்பத்தின் அடிப்பகுதியில் ஒரு கோவில் கட்டப்பட்டுள்ளது. அங்கு ஒரு காலில் நின்று தவம் புரிபவன் பகீரதன் என்றும், அவனுக்கு மேலுள்ள உருவம் சிவபிரானைக் குறிப்பது என்றும், பிற உருவங்கள் தேவர் முனிவர் முதலியோருடையன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தவசி ஒருவன் தண்ணீர்க் குடத்தைத் தோள்மீது சுமந்துபோதல், மான் ஒன்று நீர் அருந்த

ஆற்றினருகில் வருதல், ஆற்றுக்கு மேற்புறம் இரண்டு அன்னங்கள் நீராட நிற்றல், கீழ்ப்புறம் ஒரு கோவிலைச் சுற்றித் தவசியர் பலர் இருந்து தவம் புரிதல், அவர்களைப் பார்த்துப் பூனை ஒன்று பின்கால்கள்மீது நின்று முன் கால்களைத் தலைக்குமேல் கூட்டி யோகநிலையில் இருத்தல், அதனைக் கண்ட எலிகள் அச்சமற்று அதனைப் பணிதல் முதலிய காட்சிகள் விழிகட்கு விருந்தளிப்பனவாகும். நூற்றுக்கு மேற்பட்ட உருவங்களை மிகவும் தெளிவாகச் செதுக்கி, இன்றளவும் அழகுடன் காட்சியளிக்கும் முறையில் அமைத்துவைத்த அப்பெருமக்களது சிற்பத்திறனை என்னென்று பாராட்டுவது! மகிஷாசுர மண்டபமும் சிறந்த சிற்ப வேலைப்பாடு கொண்டதாக அமைந்திருக்கிறது.

தஞ்சைப் பெரிய கோவிற் சிற்பங்கள்

பல்லவர்க்குப்பின் தமிழகத்திற் பேரரசராக விளக்கமுற்ற சோழருள் இராஜராஜன் (கி. பி. 985—1014) முதலிடம் பெறத்தக்கவன். அவன் பல்லவர் காலக் கட்டடக்கலையையும் சிற்பக் கலையையும் ஓவியக் கலையையும் பிற கலைகளையும் நன்கு வளர்த்த கலையின்பன் ஆவான். அவன் அதுகாறும் தென்னாட்டிற் காணப்படாத முறையில் மிகப் பெரிய கோவிலை அமைத்தான். அதுவே தஞ்சைப் பெரிய கோவில் எனப்படும் இராஜ ராஜேசுவரம் என்பது.

தஞ்சைப் பெரிய கோவிலிற் சிறந்த சிற்பங்கள் உள்ளன. ஏழடிக்கு மேற்பட்ட உயரமுள்ள வாயிற் காவலர் உருவச்சிலைகள் சிறந்த சிற்ப வேலைப்பாடு கொண்டவை. கோவிற் சுவர்களில் சோழ வீரர் உருவங்களும், பிள்ளையார், திருமால், பிச்சாடனர், சூலதேவர், தக்ஷிணாமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராசர்,


லிங்கோற்பவர், அர்த்தநாரீசுவரர், கங்காதரர், கலியாண சுந்தரர், மகிஷாசுரமர்த்தனி ஆகியோர் சிலைகளும் காணத்தக்கவை. விமானத்தில் உள்ள உருவங்கள் அழகியவை.

கங்கைகொண்ட சோழேச்சரச் சிற்பங்கள்

இராஜராஜன் தவமைந்தனுன கங்கைகொண்ட சோழன் கட்டுவித்த **கங்கைகொண்ட சோழேச்சரம்** தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்றதே. அதில் உள்ள சிற்பங்கள் மிகவுயர்ந்த வேலைப்பாடு கொண்டவை. நாமகள், மலர்மகள் சிற்பங்கள் பேரழகு பெற்றவை. சண்டீசர்க்குச் சிவபிரான் அம்மையுடன் தோன்றிக் கொன்றைமாலை சூட்டிச் சண்டீசப்பதம் அருளிய அற்புதச் சிற்பம் இன்று செய்தாற்போலக் காணப்படுதல் பெரு வியப்பளிப்பதாகும். கி. பி. 11-ஆம் நூற்ருண்டின் சிற்பத்திறனை உலகறியச் செய்ய அச்சிற்பத்தின் சீரிய வேலைப்பாடு ஒன்றே அமையும். வாயிற்காவலர் சிலைகள் பாராட்டுக்குரிய வேலைப்பாடு கொண்டவை. மிகப் பெரிய சிற்பங்கள் விமான அடுக்குகளை அழகு செய்கின்றன.

இராசராசபுரத்துச் சிற்பங்கள்

இரண்டாம் இராசராசன் காலத்து இராசராசபுரத்துச் (தாராசுரம் கோவில்) சிற்பங்கள் முன்னவற்றினும் வேலைப்பாடு மிக்கவை. கருவறையின் புறச்சுவர்களில் அறுபத்துமூவர் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இராசகெம்பீரன் திருமண்டபம் என்பது மிகவும் அழகிய சிற்ப நுட்பங்கள் அமைந்தது; குதிரை பூட்டிய தேர்போலச் சித்தரிக்கப் பட்டுள்ளது. சைவ ஆச்சாரியர்களுடைய சிலைகளும் பிற தேவருடைய சிலைகளும் சிற்பத்திறனைச் சிறக்கக்



சோழர்காலச் சிற்பம் [பக்கம் 102]

காட்டுவன. சுருங்கக்கூறின், இராஜராஜேசுவரம் சிற்பக் கலைக்கு ஒரு நிலைக்களம் என்று கூறலாம்.

நாயக்கர் காலச் சிற்பங்கள்

சோழர்க்குப்பின் தமிழகத்தை ஆண்ட நாயக்கர் காலத்தில் சிற்பக்கலை மிகுதியாக வளர்ச்சி பெற்றது. திருவண்ணுமலை, தில்லை, மதுரை, இராமேசுவரம் போன்ற இடங்களில் உள்ள பெருங்கோவிற் கோபுர வாயில் நிலைகளிற் செதுக்கப்பட்டுள்ள பலவகை **நடன நிலைகளே** அக்காலச் சிற்பக் கலையின் சீர்மையை விளக்கப் போதியவையாகும்.

மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள **குறத்தியின் உருவச்சிலை** ஒன்று இங்குக் குறிக்கத்தக்கது. அது பார்த்து வியக்கத்தக்கது. குறத்தி நான்கு பிள்ளைகளுடன் காணப்படுகிருள். ஒன்று அவள் முதுகின்மீது இருக்கிறது; மற்றென்று கூடைக்குள் காணப்படுகிறது; மூன்ரும் குழந்தை அவள் மார்பில் துணியாற் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கிறது. கடைசிக் குழந்தை அவளது ஒரு கையைப் பற்றிக்கொண்டு நிற்கிறது. குழந்தை இருக்கும் கூடையைச் சிற்பி எவ்வளவு அழகுபடச் சமைத்துள்ளான் என்பதை நேரிற் காண்பவரே நன்குணர முடியும். இத்தகைய அழகுடைச் சிற்பங்களும், தூண்களில் குதிரைகள்மீது இருக்கும் வீரர் வடிவங்களும், தாரமங்கலம், பேரூர் முதலிய இடங்களிலுள்ள கோவிற் சிற்பங்களும் 16, 17, 18-ஆம் நூற்ருண்டுகளில் தமிழர் பெற்றிருந்த சிற்பக்கலை அறிவினை நன்குணர்த்துவன வாகும்.

நாகரிகக் கலைகளுள் ஒன்ருன சிற்பக் கலையில் தமிழகம் வேறெந்நாட்டிற்கும் பிற்பட்டதன்று என்பதை இதுகாறும் கூறியவற்றிலிருந்து நன்குணரலாம்.

9. இசைக்கலை

இசையின் சிறப்பு

இசை என்னும் சொல்லுக்கு 'இசைவிப்பது' - 'தன் வயப்படுத்துவது' என்பது பொருள். மரம், செடி, கொடிகள் என்னும் ஓரறிவுயிர் முதல் மக்கள் என்னும் ஆறறிவுயிர் ஈருக எல்லா உயிர்களையும் இசை தன்வயப்படுத்த வல்லது என்பது ஆன்ருேர் கண்ட உண்மையாகும். பாம்பைப் பிடிக்கும் பிடாரன் புற்றினருகிற் சென்று மகுடி பாடப் பாம்பு புற்றிலிருந்து வெளிப்பட்டு வந்து படமெடுத்தாடும். வண்டி மாடுகளையும் ஏற்றக் காளைகளையும் இயக்குபவர் தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுகின்றனர். அவ்விலங்குகள் அவற்றைக் கேட்டுக்கொண்டே தம் வேலையைச் சிறிதும் களைப்பின்றி அமைதியாகச் செய்கின்றன. பெருவழிகளிற் கல்லுடைப்பவரும், கல்லுருட்டுபவரும், கட்டைவண்டிகளில் பெருஞ்சுமை ஏற்றிச் செல்பவரும் தம் களைப்புத் தோன்ருதிருக்கப் பாடிச் செல்லுதலை இன்றுங் காணலாம். ஏற்றத்தில் நின்று நீர் இரைப்பவர் பாடுவது, நாற்று நடுவோர் பாடுவது இக்கருத்தைப் பற்றியனவே ஆகும்.

தினைப்புனப் பரண்களிலிருந்து குறிஞ்சி நிலப் பெண்கள் இனிய பண்களைப் பாடுவர். அப்பொழுது தினைக் கதிர்களை உண்ணவந்த பறவைகள் அவர்களின் இன்னிசையில் ஈடுபட்டுத் தாம் வந்த நோக்கத்தையும் மறந்து செயலற்று மயங்கிக்கிடக்கும் என்னும் செய்தி திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. யானையும் இங்ஙனம் செயல் மறந்து இசையில் மயங்கி நின்றுவிடும் என்று அகநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது. தினைக் கொல்லையைக் காத்துவந்த பெண் ஒருத்தி தெள்ளிய

சுனையில் நீராடிப் பரண்மீது நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிக்க களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நின்றாள். அவ்வமயம் தினைக் கதிரை உண்பதற்காக அங்கு வந்த யானை ஒன்று அப்பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரை உண்ணாமல் நின்றது.[1] குத்துக் கோலுக்கு அடங்காத மதம் பிடித்த யானையும் இசைக்கு அடங்கிவிடுமாம்.[2] 'அசுணமா' என்பது பறவை என்றும் விலங்கு என்றும் சொல்லப்படும். அஃது இன்னிசைக்கு உருகும் இயல்புடையது. அதனைப் பிடிக்க விரும்புபவர் மறைவாக ஓரிடத்திலிருந்து இனிமையாக யாழ் இசைப்பர். அசுணமா இவ்வின்னோசை கேட்டு உளம் உருகி அருகில் வந்து தன்னை மறந்து நிற்கும். யாழ் இசைப்பவர் அப்பொழுது அதனைப் பற்றிக்கொள்வர்.[3]

பாலை நிலத்து ஆறலை கள்வர் வழிவருவோர் பொருளையும் உயிரையும் கவர்வர்; பொருள் இல்லை எனில், வழிவந்தோரைக் கொன்று, அவர்தம் உடல் துள்ளுவதைப் பார்த்துக் களிப்பர். அத்தகைய கொடியவர் எதிர்ப்படின், அவ்வழிச் செல்லும் கூத்தர் முதலியோர் பாலைப் பண்ணை இனிமையாகப் பாடுவர். கள்வர், இசையில் ஈடுபட்டுத் தம்

---

[1] " ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும்" —அகநானூறு

[2] " காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு" —கலித்தொகை

[3] " அசுணம் கொல்பவர் கைபோ னன்றும்
இன்பமுந் துன்பமும் உடைத்தே" —நற்றிணை

கொலைக் கருவிகளையும் கைநழுவ விட்டுத் தம் வழிப்பறி வேலையையும் மறந்துவிடுவதுண்டு.

இறைவன் இசையின் வடிவாய் இருப்பவன் என்று நம் சமய குரவர்கள் சாற்றியுள்ளனர். "ஏழிசையாய் இசைப்பயனாய்", "இயலவன், இசையவன்" என்னும் தொடர்கள் இந்த உண்மையை உணர்த்துவன. இறைவன் இசையில் மிக்க ஈடுபாடு உடையவன் என்பதை, "இசை விரும்பும் கூத்தனார்" என்னும் தொடரிலிருந்து நன்கறியலாம். "எம்மிறை வீணை வாசிக்குமே" என்பதிலிருந்து, இறைவன் கையில் வீணையை வைத்து வாசித்தின்புறுவதாகப் பெரியோர் நம்பினர் என்பது தெரிகின்றது. இசை இறைவனுக்கு விருப்பமானது என்பதை அறிந்தே சமய குரவர்கள் பண்ணோடு பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டார்கள். ஆனாய நாயனார் திருவைந்தெழுத்தை வேய்ங்குழலில் இசைத்துச் சிவனருள் பெற்றார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிசைத்துப் பேறுபெற்றார், பாணபத்திரர் யாழ் வாசித்து இறைவனை வழிபட்டார், திருப்பாணாழ்வார் யாழ் வாசித்தும் பாக்களைப் பாடியும் பேறு பெற்றார் என்று நூல்கள் கூறுகின்றன.

சீவகசிந்தாமணி என்னும் காவியத்தின் தலைவனான சீவகன், ஆடவரைப் பார்ப்பதுமில்லை என்ற நோன்புடன் இருந்த சுரமஞ்சரி என்ற நங்கையின்பால் கிழ வேடத்திற் சென்று, இசைபாடி, அவளைத் தன்வயப் படுத்தினான். அவன் இசையைக் கேட்ட பெண்கள், வேடன் பறவைபோல் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கிக் கூட்டமாக வரும் மயிலினங்களைப் போல விரைந்து வந்தனராம்.[4]

---

[4] "கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீதவீதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழைம லர்த்தடங்கணார்

இசைத்தமிழ்

இத்தகு சிறப்புடைய இசையின் இயல்பினை ஓர்ந்தே பழந்தமிழர் இசைத்தமிழை முத்தமிழுள் நடுநாயகமாக வைத்துள்ளனர். இயற்றமிழ் செய்யுட்கள் உண்டு. அவற்றைப் பாட இசை இன்றியமையாதது. எனவே, இயற்றமிழுக்கு இசை வேண்டப்படுகிறது. நாடகத்துக்கு இசை உயிர் போன்றது. ஆதலின் இயற்றமிழ், நாடகத் தமிழ் ஆகிய இரண்டிற்கும் இடையில் இசைத்தமிழ் வைக்கப்பட்டதென்க.

தமிழரும் இசையும்

தமிழன் தன் குழந்தைப் பருவத்திலிருந்தே இசையைக் கேட்டுக் கேட்டு இன்புற்றவன். அவன் தன் குழவிப் பருவத்தில் தாலாட்டுப் பாட்டுக்களையும், ஊசல்வரி எனப்படும் ஊசற்பாட்டுக்களையும் கேட்டான். விளையாடும் பருவத்தில் பந்து விளையாடல் முதலிய எல்லா விளையாட்டுக் களுக்கும் பாட்டுக்கள் உண்டு. அவை **கந்துகவரி** முதலியன. பெண்கள் விளையாடிய **அம்மானை, பொற் சுண்ணம், சாழல், தெள்ளேணம், உந்தி பறத்தல், தோள்நோக்கம்** முதலிய ஆடல்களுக்கும் பாடல்கள் இருந்தன என்பதைத் திருவாசகம்கொண்டு தெளியலாம்.

திருமணம், போர் முதலிய சிறப்புச் செயல்களுள் ஒவ்வொன்றுக்கும் வகை வகையான பாட்டுக்கள் இருந்தன. **மங்கல வாழ்த்துப் பாடல்** திருமணத்துக்கு உரியது. பெண்கள் உலக்கை கொண்டு குற்றுந் தொழிலுக்குரிய பாட்டு **வள்ளைப் பாட்டு** எனப்பட்டது. இவ்வாறு

புள்ளுவம் மதிமகன் புணர்த்த வோசை மேற்புகன்
றுள்ளம் வைத்த மாமயிற் குழாத்தினோடி யெய்தினர்."
—சிந்தாமணி 2039

பண்டைத் தமிழகத்தில் பல தொழில்களுக்கும் பாட்டுக்கள் இருந்தன. இழவு வீட்டிலும் இசையோடு அழுதல் தமிழ்ப்பெண்டிர் வழக்கம் என்பதிலிருந்து, நம் முன்னோர் இசைத்தமிழில் எவ் அளவு ஈடுபட்டிருந்தனர் என்பதை ஒருவாறு உணரலாம். தமிழர் இங்ஙனம் இசையிற் சிறந்திருந்தமையாற்றான் இசையை மொழிப்பகுதியாக்கி, 'இசைத்தமிழ்' என்றனர்.

பண்டை இசைவாணர்கள்

சங்ககாலத்தில் கண்ணகனார், கண்ணன் நாகனார், கேசவனார், நல்லச்சுதனார், நந்நாகனார், பித்தாமத்தர், பெட்டகனார், மருத்துவன் நல்லச்சுதனார் முதலியோர் இசைப்புலவர்களாக இருந்தனர். ஒருவர் நெடும் பல்லியத்தனார் எனப் பெயர் பெற்றிருந்தனர். இன்னிசைக் கருவிகள் பலவற்றில் ஆன்ற பயிற்சியுடையவர் என்பதைக் குறிக்கவே அவருக்கு அப்பெயர் வழங்கியாதல் வேண்டும். சங்ககாலத்தில் இசைப் பயிற்சியிற் சிறந்து விளங்கியவர் பாணர் என்ற குடியினராவர். பொருநர், கூத்தர் என்பவரும் இசை வளர்த்த அறிஞர்களேயாவர். அவர்கள் சென்று முடியுடை அரசரையும் குறுநில மன்னரையும் செல்வரையும் கண்டு இசை பாடிப் பரிசில் பெற்றுவந்தனர். பலாமரங்களில் சிறியவும் பெரியவுமான காய்கள் இப்புறமும் அப்புறமும் கொத்துக் கொத்தாகத் தொங்குவதுபோல இவ்விசைவாணர்கள் பெரியவும் சிறியவுமான பலவகை இசைக்கருவிகளைக் கொத்தாகத் தம் தோள்களிற் சுமந்து வள்ளல்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர் என்று **மலைபடுகடாம்** கூறுகின்றது. இவர்களால் தமிழிசை அக்காலத்தில் நன்கு வளர்க்கப்பட்டது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** சிறந்த இசைவாணராக இருந்தார். எட்டு அல்லது ஒன்பதாம்

நூற்றாண்டில் **திருப்பாணாழ்வார்** இசை வளர்த்த பெருமையுடையார். கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருமுறைகட்குப் பண் வகுத்தவர் திரு நீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த **இசையரசியாரே** யாவர். பிற்பட்ட சோழர் காலத்திலும் பாணர்கள் இசை வளர்த்துவந்தனர் என்பதைச் சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

பண்டை இசை நூல்கள்

இசைப் புலவர்கள் சிறந்திருந்த சங்ககாலத்தில் இசை நூல்கள் பெருகி இருந்தன என்பது சிலப்பதிகார உரையிலிருந்து தெரிகிறது. அவை பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்சபாரதீயம், பஞ்ச மரபு, தாளசமுத்திரம், சச்சபுடவெண்பா, இந்திரகாளியம், பதினறு படலம், தாளவகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக்கோவை முதலியன. இவை **இசைத் தமிழ் இலக்கண நூல்களாம்.** சிலப்பதிகாரம், பரிபாடல், கலித்தொகை முதலியவற்றை **இசைத் தமிழ்ச் செய்யுள் நூல்கள்** என்னலாம். இவற்றுள் சிலப்பதிகாரம் இசைத் தமிழ் இலக்கணமும் கூறும். சைவசமய ஆச்சாரியர்கள் பாடிய திருமுறைகளும் ஆழ்வார்கள் பாடிய நூல்களும் இடைக்கால இசை நூல்கள் ஆகும். சிந்தாமணி, சூளாமணி, கல்லாடம், திருவிளையாடற்புராணம், பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய பிற்கால இலக்கியங் களில் ஆங்காங்கு இசையிலக்கணம் குறிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்திற் செய்யப்பட்ட குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலிய பிரபந்த நூல்களும், 19, 20-ஆம் நூற்றாண்டு களிற் செய்யப்பட்ட கீர்த்தனை நூல்களும், அண்ணமலைப் பல்கலைக்கழக இசைத்தமிழ் வெளியீடுகளும், இசைத்தமிழ் இலக்கிய நூல்களே ஆகும்.

இசை வகை

இசையில் **பண்கள்** என்றும் **திறங்கள்** என்றும் இருவகை உண்டு. பண்கள் ஏழு நரம்புகளையும் கொண்டவை (நரம்பு - சுரம்). அவை தமிழில் **குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி,** விளரி, **தாரம்** எனப் பெயர் பெற்றன. ஏழு பண்களும் இக்காலத்தில் ச, ரி, க, ம, ப, த, நி எனப் பயிலப்படுவதுபோலத் தமிழ் முறையில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு நெடிலை யும் சுரங்கட்கு எழுத்துக்களாகக் கொண்டு அக்காலத் தமிழர் பயின்றனர். பண்களிலிருந்து பிறப்பவை **திறங்களாம்.** பண்களுக்கு இனமாகத் திறங்கள் கூறப் படும். இவ்வாறு பிறக்கும் பண்களும், திறங்களும் கிளைகளாக இயங்கும் வகைகளில் பழந்தமிழர் 11, 991 இசைவகைகளைக் கண்டறிந்து பயின்று இன்புற்றனர்.

பண்கள் பலவகைப்படும். அவற்றுள் **குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்** எனப் பெரும் பண்கள் ஐந்தாகும். இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல. அவற்றுள் பகற்பண்கள், இராப் பண்கள், யாமப் பண்கள், அவ்வப்பொழுதிற்கமைந்த பண்கள், சுவைகட்குரியவை எனப் பலவகைப்படும்.

பாடுவோர் இலக்கணம்

பண்ணும் பாட்டும் இயைந்திருத்தல் வேண்டும் என்பது, "பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்" என்னும் குறள் தொடரால் அறியலாம். இங்ஙனம் பண்ணுடன் பாடுவோர் இன்ன இன்ன இலக்கணங் களுடன் பாட வேண்டும் என்னும் விவரங்களை இசை இலக்கண நூல்கள் கூறும்.

" கருங்கொடிப் புருவம் ஏரு கயல்நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா அணிமணி எயிறும் தோன்று

இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி ஞளோ
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று நைந்தார்.''

எனவரும் சிந்தாமணிச் செய்யுள் சிறந்த பாடகர்க்குரிய இலக்கணம் என்னலாம். இங்ஙனமே, பாடுவோர்பால் இருத்தலாகாக் குற்றங்கள் இவை எனத் திருவிளையாடற் புராணச் செய்யுள் கூறுகின்றது :

'' வயிறது குழிய வாங்கல் அழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணுடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்டல் இன்ன வுடற்றெழிற் குற்றம் என்ப.''

இசைக் கருவிகள்

தமிழர் இசைகளைக் குரலாலும், கருவிகளாலும் இசைத்தனர். குரலாற் பாடுவதும், இசைக் கருவிகளால் இசைப்பதும் ஒருங்கு நிகழ்தலும் உண்டு. குரல்வழிக் கருவிகள் நிகழும். அக்கருவிகள் பலதிறப்படும். அவை ஒன்றின் வழி ஒன்று மிகப் பொருத்தமாக ஒத்து நிகழும்.

'' குழல்வழி நின்றது யாழே ; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே ; தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே ; முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை'' (காதை 3, வரி 139-42)

எனவரும் சிலப்பதிகார அடிகளில் இவ்வழகைக் காணலாம்.

இசைக்கருவிகள் தாம் பயன்படும் முறையால் மூவகைப்படும். அவற்றுள் பாடும்பொழுது பயன்படத் தக்கவை ஒருவகையின. அவை பாட்டுறுப்பு (கீதாங்கம்) எனப்படும். நாடகத்திற்குரியவை மற்றொரு வகை. அவை கூத்துறுப்பு (நிருத்தாங்கம்) எனப் பெயர் பெறும். இவ் விரண்டிலும் பயன்படுவன பொதுவுறுப்பு (உபாங்கம்) என்பன. இப்பிரிவுகளை நோக்க, நம் முன்னோர் இவற்றை விரிவாகப் பயன்படுத்தி இன்புற்றனர் என்பதை உணரலாகும்.

இவ்விசைக் கருவிகள் தாம் செய்யப்படும் முறையால் தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என நால்வகைப்படும். மத்தளம் போன்றவை தோற்கருவிகள். குழல் போன்றவை துளைக் கருவிகள். யாழ் போன்றவை நரம்புக்கருவிகள். வெண் கலத்தாற் செய்யப்பட்ட தாளக்கருவிகள் கஞ்சக் கருவிகள் ஆகும்.

தோற்கருவிகள் : இவை பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை - முதலியவாகப் பல வகையினவாகும்.

துளைக்கருவி : இவை புல்லாங்குழல், நாதசுரம் முதலியன. குழலில் கொன்றையங்குழல், ஆம்பலங் குழல், முல்லையங் குழல் எனப் பலவகை உண்டு. அவை இலக்கியங்களிற் கூறப்பட்டுள்ளன. பண்டை நூல்களிற் குழலின் இலக்கணம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

புல்லாங்குழல் : பழமையானது (புல் - மூங்கில்). யாதேனும் ஒரு மூங்கிலை எடுத்துக் குழல் செய்துவிடல் என்பது இயலாது. இன்னவாறு வளர்ந்த மூங்கிலைக் கொண்டுதான் குழல் செய்ய வேண்டும் என்று இசைக்கலை நூல்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளது. இதனை, "பழைமையாகிய இசைக்கலை நூல்களில் மொழிந்த மரபின் முறைப்படி எழுந்து வளர்ந்த மூங்கிலின் நுனியில் நான்கு பங்கிலும் அடியில் இரண்டு பங்கிலும் அரிந்து இடைப்பட்ட பகுதியை எடுத்துச் சுரங்கள் எழும் தானங் களையும் அவற்றிற்குத் துளை செய்யும் இடங்களையும்

வரிசை பெறக் குறித்துக்கொண்டு, முதலில் காற்று உண்டாக்கும் துளையையும் இடைவெளி ஒவ்வோர் அங்குல அளவில் இருக்கப் பிற துளைகளையும் செய்து முடிக்க வேண்டும்,'' என்னும் பொருள்பட வரும் சேக்கிழார் பெருமான் திருப்பாடலைக் கொண்டு[5] நன்கு அறியலாம்.

சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி இவற்றைக் கொண்டும் குழல் செய்யப்பட்டது. இவற்றுள் மூங்கிலில் செய்வது உத்தமம்; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமாம். அடியார்க்குநல்லார் காலத்தில் கருங்காலி, செங்காலி, சந்தனமரங்களைக் கொண்டும் குழல் செய்யப்பட்டுவந்தது என்பது பின்வரும் அவர் கூற்றால் அறியப்படும் :

"...இக்காலத்துக் கருங்காலி, செங்காலி, சந்தனம் இவற்றாற் கொள்ளப்படும். கருங்காலி வேண்டும் என்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால், உயர்ந்த ஒத்த நிலத்தில் பெருகவளர்ந்து, நாலுகாற்று மயங்கின் நாதமில்லையாமாதலான், மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும் பிராயமும் இன்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே ஆற இட்டுவைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்து படுதலின்மையை அறிந்து ஓர்யாண்டு சென்ற பின் இலக்கணவகையான் வங்கியம் (குழல்) செய்யப்படும்.''[6]

---

5 " முந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை யெழுந்தவேய்
அந்தமுத லிரண்டில் அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
யந்தமில்சீர் இடையீட்டி னங்குலியெண் களினமைத்து "
—ஆனாயர் புராணம் 13.

6 அரங்கேற்று காதை, வரி-26 உரை.

இவ்வுரைப் பகுதியின் அடியில், வங்கியம் செய்யப்படும் முறை 'பிண்டியிலக்கணம்', 'துளையளவிலக்கணம்' என்னும் பகுதிகளில் தெளிவுற விளக்கப்பட்டுள்ளது.

நரம்புக்கருவிகள் : இவை பலவகையின. இவற்றுள் 21 நரம்புகளையுடைய **பேரியாழ்**, 19 நரம்புகளையுடைய **மகரயாழ்**, 14 நரம்புகளையுடைய **சகோடயாழ்**, 7 நரம்புகளையுடைய **செங்கோட்டியாழ்** என்பன குறிப்பிடத் தக்கவை. ஆயிரம் நரம்புகளைக் கொண்ட யாழும் இருந்தது. அதன் பெயர் 'ஆதியாழ்' என்பது. இவை நாளடைவில் வழக்கொழிந்துவிட்டன.

கி. பி. 300-க்குப் பிறகு தமிழகத்தில் **வீணை** என்னும் புதிய கருவி வழக்கிற்கு வந்தது. "எம்மிறை **வீணை** வாசிக்குமே" என்பது (தேவாரம்) காண்க. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திரவர்மன் இசை, நடனம், நாடகம் முதலிய நாகரிகக் கலைகளிற் சிறந்த புலமையுடையவன். அவன் '**பரிவாதிநீ**' என்னும் பெயர் கொண்ட ஒருவகைவீணையை வாசித்துவந்தான் என்பதைக் குடுமியான்மலைக் கல்வெட்டுக் கூற்றிலிருந்து ஊகிக்கலாம். பரிவாதிநீ என்பது பெரிய வீணை. அதன் நரம்புகள் பொன்னால் செய்யப்பட்டவை. எட்டு நரம்புகளையுடைய வீணையும் அக்கால வழக்கில் இருந்தது என்பதைக் குடுமியான்மலைக் கல்வெட்டுக் குறிக்கிறது.

கஞ்சக் கருவிகள் : வெண்கலத்தாற் செய்யப்பட்ட தாளவகைகள் அனைத்தும் கஞ்சக்கருவிகள் ஆகும்.

தமிழிசை வழக்கொழிந்த வரலாறு

சங்ககாலத்தில் தமிழரசர் தமிழகத்தை ஆண்டனர்; முத்தமிழும் வளம் பெற்றன. பல்லவர் தமிழகத்தின்

பெரும்பகுதியை ஆண்ட நூற்றாண்டுகளில் வீணை, பரிவாதிநீ போன்ற புதிய இசைக்கருவிகளும் சில புதிய இராகங்களும் தமிழகத்தில் நுழைந்தன என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். ஏறத்தாழக் கி. பி. 900 முதல் 1300 வரை சோழர்கள் பேரரசு செலுத்தினர். அக்காலத் தில் தமிழிசை நன்கு வளர்ந்தது. ஆயின், பிற்காலத்தில் தமிழகம் விஜயநகர ஆட்சிக்கு உட்பட்டது. அப்பொழுது **கருநாடக இசை** தமிழகத்திற் கால் கொண்டது; தமிழிசை சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டது. நாயக்க மன்னர், மகாராஷ்டிரர், முகம்மதியர் ஆகியோர் செல்வாக்கு மிக்கிருந்த பின் நூற்றாண்டுகளில் கருநாடக இசையே வளர்க்கப்பட்டது. தமிழ்ப் பாக்களும் பண்களும் பெரும்பாலும் வழக்கொழிந்தன.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எழுதியுள்ள **கருணா மிருத சாகரம்** என்னும் இசைப் பெருநூலிலும், விபுலானந்த அடிகள் வரைந்துள்ள **யாழ்நூலிலும்** யாழைப் பற்றிய பல விவரங்களைக் காணலாம். ஆபிரகாம் பண்டிதரது திருமகனார் வரகுண பாண்டியர் **பாணர் கைவழி** எனப்படும் யாழ் நூலை வெளியிட்டுள்ளார். அந்நூலிலும் சில விவரங்கள் காணப்படுகின்றன. தமிழிசைபற்றி ஆராய்ந்து நூல்களை வெளியிட்ட இப்பெரு மக்கட்கு நமது நன்றி உரியது.

இன்றுள்ள இசைத்தமிழ் நூல்கள்

பரிபாடல், தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், வரிப்பாடல், குரவைப் பாடல், திருப்புகழ், முத்துத் தாண்டவர், வேதநாயகம் பிள்ளை முதலியோர் கீர்த்தனை கள், சீகாழி அருணாசலக் கவிராயர் இராமநாடகக் கீர்த்தனை, கோபாலகிருஷ்ண பாரதியார், நந்தனார் சரித் திரக் கீர்த்தனை, அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து,

நொண்டிச்சிந்துகள், தில்லானு, தெம்மாங்கு (தென் பாங்கு ?), பள்ளு முதலிய பல இசைத் தமிழ் நூல்கள் இப்பொழுது இருக்கின்றன. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுவரும் இசைத்தமிழ் நூல்களும் இவ்வரிசையில் அடங்கும்.

தமிழிசைக்குப் புத்துயிர்

இந்த இருபதாம் நூற்ருண்டில் இற்றைக்கு ஏழாண்டு கள் முன்வரை தமிழகத்தில் யாண்டும் பிறமொழிப் பாடல் களே பாடப்பட்டுவந்தன. தமிழர் வீட்டுத் திருமணங் களிலும் பிறமொழிப் பாடல்களே பாடப்பட்டன. மொழிப் பற்று மிகுந்த பெருங்கொடை வள்ளலாகிய **ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார்** அவர்கள் தமிழிசை உணர்ச்சியைத் தோற்றுவித்தார்கள் ; சென்னையில் தமி ழிசைச் சங்கத்தைக் கண்டார்கள் ; தமிழிசைக் கல்லூரி யையும் நிறுவினர்கள் ; அண்ணுமலைப் பல்கலைக் கழகத் திலும் தமிழிசை வகுப்புக்களை அமைத்தார்கள் ; தமி ழகத்துப் பெரிய நகரங்களில் தமிழிசை வளர்க்கக் கிளைச் சங்கங்கள் தோன்றத் துணைபுரிந்தார்கள் ; பல இசைத் தமிழ்நூல்கள் வெளிவரச் செய்தார்கள். இசைப் புலவர்கள் ஊக்கங்கொண்டு தமிழிசை வளர்ச்சிக்கு உழைக்க முன் வந்தனர். இப்பெரு முயற்சியில் டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார், ராஜா சர் முத்தைய செட்டி யார், மு. அ. சிதம்பரம் செட்டியார் போன்ற அறிவு ஆற்றல்களிற் சிறந்த பெருமக்களும், இசைப்புலமையிற் சிறந்தோங்கும் அறிஞர்களும் மிக்க ஊக்கம் காட்டிவரு கின்றனர் ; தமிழ்ப் பண்கள் இவை என முடிவு காண இசை வல்லுநர் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. இப்பொழுது நாடெங்கும் தமிழ்ப் பாடல்களே மிகுதியாகப் பாட வேண்டும் என்று தமிழர் உணர்ச்சி கொண்டுள்ளனர்.

தமிழ்ப்பாடல் நூல்களும் பெருகிவருகின்றன. சென்னையில் தமிழிசைச் சங்கத்திற்குப் பெரிய கட்டடம் கட்ட முயற்சி நடைபெற்றுவருகின்றது. தமிழறிஞர் மேற்கொண்ட இப்புத்துணர்ச்சி தமிழிசைக்குப் புத்துயிர் அளித்துள்ளது. நமது பண்டை இசைப் பெருமையையும் பழமையையும் உணர்ந்து தமிழிசையை நன்கு வளர்ப்பது தமிழ்ப் பொதுமக்கள் கடமையாகும்.

10. நடனக்கலை

நடனக்கலையின் தோற்றம்

இசை முதன்முதலில் எவ்வாறு தோற்றம் எடுத்திருத்தல் கூடும் என்று ஆராயப்புகுவோர், இயற்கைப் பொருள்களினிடத்திலேயே அவை தோற்றம் எடுத்திருத்தல் கூடும் என்று ஆராய்ச்சி முடிவு காணுகின்றனர். காட்டின்கண் வண்டுகளாலும் பறவைகளாலும் துளைக்கப்பட்ட மூங்கில் மரங்களினூடே விரைந்து செல்லும் காற்று, நுழைந்து செல்லும்போது குழலோசை எழுதல் இயல்பன்றோ? மலையின் மேனிலையிலிருந்து விழும் அருவி நீரோட்டத்தின்பால் தாள ஓசையும் காண்டல் கூடுமன்றோ? குயில் முதலிய இன்னோசை எழுப்பும் பறவைகள் இசைப்புலமைக்கு எவ்வாறு தோற்றம் அளித்திருத்தல் கூடும் என்பதனையும் நாம் ஆய்ந்து நோக்குதல் வேண்டும். இங்ஙனமே நடனமும் தோற்றமெடுத்துப் படிப்படியாக வளர்ந்திருத்தல் கூடியதோ என்பதை ஆய்ந்து காணுதல் வேண்டும். இசைவாணர் பாடும்போது இசைக்கலையில் மிகுந்த தேர்ச்சியில்லாதாரும் தம்மை மறந்து தலையசைத்தல் முதலிய செயல்களைச் செய்கின்றனர். வானவெளியில் திரண்டு வரும் கருமுகிற் கூட்டங்களைக் கண்ட துணையானே மயில்கள் தோகை விரித்து மகிழ்ச்சிப்பெருக்கோடு ஆடுதலைக் காண்கின்றோம். அங்ஙனமே பாம்பு முதலிய அஃறிணைப் பொருள்களும் இசை கேட்டு மயங்கி ஆடுகின்றன. இம்முறையிலேயே மக்களும் இசையைக் கேட்டுக்கேட்டுத் தம்மை மறந்து ஆடுதலை மேற்கொண்டனர்போலும்! அவ்வாறு தோன்றிய நடனம் நாள் செல்லச் செல்லப் பெருகி, இலக்கண வரம்பு பெற்று, அவையின்கண் ஆடிக் காட்டும் நிலைக்கு வளர்ந்ததாதல் வேண்டும்.

சிந்துவெளியில் நடனக்கலை

வேதகாலத்துக்கு முற்பட்ட மக்கள் சிந்துவெளியிலும் வாழ்ந்துவந்தார்கள். அம்மக்கள் வாழ்ந்த நகரங்கள் நாளடைவில் மண்ணிற் புதையுண்டன. அவற்றைத் தோண்டி எடுத்து ஆராய்ச்சி செய்தபோது பல சிறந்த பொருள்கள் கிடைத்தன. வெண்கலத்தாற் செய்யப்பட்ட நடனமாதின் உருவம் ஒன்றும் கிடைத்தது. நடனத்தை விளக்கும் சில கற்சிலைகளும் கிடைத்தன. களிமண்ணால் செய்யப்பட்டுத் தவுல் என்னும் கருவியைக் கழுத்தில் தொங்கவிட்ட மனிதவுருவம் ஒன்றும் கிடைத்துள்ளது. மிருதங்கம், வீணை, தாளம், யாழ் முதலிய இசைக் கருவிகளைக் குறிக்கும் ஓவியங்கள் பலவும் கிடைத் துள்ளன. இவற்றை ஆராய்ந்து நோக்கும்போது சிந்து வெளியிலும் நடனக்கலை சிறந்தோங்கியிருந்தது என்பது அறியப்படுகிறதன்றோ ?

வடநாட்டில் நடனக்கலை

வடஇந்தியாவில் நடனத்தைப் பற்றிக் கூற எழுந்த முதல் வடமொழி நூல் 'பரதம்' என்பது. அது கி. மு. மூன்றும் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது என அறிஞர் கூறுகின்றனர். அஃது இன்றளவும் சிறந்த நூல் எனப் போற்றப்பட்டுவருகின்றது. ஒரு கலையைப்பற்றி ஒரு நூல் எழுந்ததாயின், அந்நூல் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே அக்கலை அந்நாட்டில் பரந்து விளங்கியிருத்தல் வேண்டுமன்றோ? அங்ஙனமே நடனக்கலையும் 'பரதம்' என்னும் நூல் தோன்றுவதற்கு முன்னரே பல நூற்றாண்டுகளாக வடநாட்டில் விளங்கி யிருத்தல் வேண்டும். "நடனக்கலை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கினையும்

நல்கவல்லது; மனவுறுதி, உடல்வளம், இன்பவுணர்ச்சி முதலிய நற்பண்புகளையும் அளிக்கவல்லது. இக்கலை தரும் இன்பம் தவத்தினர் அடையும் இன்பத்திற்கு இணை யானது,'' என்பது பரதத்திற் கூறப்படும் சிறப்புச் செய்தி யாகும்.

தமிழ் நாட்டில் சங்ககாலத்து நடனக்கலை

இன்றுள்ள நூல்களிற் காலத்தால் முற்பட்டதெனப் பலராலும் சொல்லப்படும் தொல்காப்பியத்தில் பழந்தமிழ் மக்கள் மேற்கொண்டிருந்த சில கூத்து வகைகள் குறிக் கப்படுகின்றன. அவை வெறிக்கூத்து, கருங்கூத்து, வள்ளிக்கூத்து, கழனிலைக்கூத்து முதலியனவாகும். இவை பெரும்பாலும் போர்த் தொடர்பு கொண்டவை. இவையே யன்றி ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி முதலிய வகை யினவும் இருந்தன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானி லங்களிலும் அவ்வந்நிலத்துக்குரிய கூத்தர் இருந்துவந் தனர்; கூத்துக்கள் நடைபெற்றுவந்தன என்பதைச் சங்க நூல்களால் நன்கு அறியலாம். குறிஞ்சி நிலத்துக் குறப் பெண்கள் தங்கள் குறிஞ்சி நிலக் கிழவனாகிய முருகப் பெருமானை வழிபட்டு ஆடும் கூத்துக் **குன்றக் குரவை** அல்லது 'குரவை' எனப்படும். முல்லை நிலத்து ஆய மகளிர் ஆடும் கூத்து **ஆய்ச்சியர் குரவை** எனப் பெயர் பெறும். குரவைக் கூத்து என்பது, எழுவரேனும், எண்ம ரேனும், ஒன்பதின்மரேனும் கைபிணைந்து ஆடும் கூத்து. இஃது இரு பாலர்க்கும் உரியது. குறவர் குறிஞ்சி நிலத் துக்குரிய தொண்டகப் பறை கொட்டக் குரவையாடுவர். அந்நிலத்து மகளிரும் மேற்கூறிய இலக்கணப்படி நின்று ஆடுவர். அவர்கள் தம் ஆட்டத்திற்குத் தகுந்த தாள ஓசையோடு பாடி ஆடுவர். இதன் விரிவைச் சங்கத்

தொகைநூற்களிலும் சிலப்பதிகாரத்தும் விளங்கக் காணலாம்.

துணங்கை என்னும் கூத்தும் பண்டைக் காலத்து நிகழ்ந்த தொன்ருகும். இஃது இரண்டு கைகளையும் முழங்கைவரை முடக்கி விலாப் புடைகளில் ஒற்றி அடித்துக்கொண்டு இடம் பெயர்ந்து களித்து ஆடும் ஒருவகைக் கூத்து ஆகும்.

விறலியர்

நால்வகை நிலங்களிலும் இருந்த வள்ளல்களிடத்தும், மாநிலத் தலைமைபெற்ற மன்னர்களிடத்தும் சென்று தன்னுடைய ஆடற்புலமை தோன்றவும், உள்ளக் குறிப்புப் புறத்து வெளிப்படும் மெய்ப்பாட்டோடும் ஆடும் மங்கையாகிய நடன மகள் விறலி என்று பெயர் பெற்ருள். இங்ஙனம் மெய்ப்பாடுகள் தோன்ற நடித்து அவையோரையும் மன்னனையும் மகிழச் செய்யும் விறலியர் சங்ககாலத்தில் பலர் இருந்தனர் என்பதைத் தொகை நூல்களால் நன்கு அறியலாம். பண்டைக் காலத்து மன்னர்கள் விறலியருடைய ஆடற் பாடல்களைப் பாராட்டிப் பொன்னரி மாலை முதலியவற்றைப் பரிசாக அளித்தனர்; தொடி முதலிய அணிகலன்களையும் வழங்கினர்.

'விறலியர் கலவை பூசப்பட்ட முன்கையினையும், வேய் போன்ற தோளினையும், ஒளி பொருந்திய நெற்றியையும் உடையவர்', என்று கோவூர் கிழார் பாராட்டிக் கூறியுள்ளார்.

'சோழன் நலங்கிள்ளி விறலியர்க்கு மாடமதுரையையும், வஞ்சி மாநகரத்தையும் தருவான்' என்று கோவூர் கிழார் கூறியுள்ளதிலிருந்து, விறலியர் பண்டையரசர்பால் பெற்றிருந்த பெருஞ்சிறப்பினை நன்கு உணரலாம்.

விறலி கூத்தி, ஆடுமகள், ஆடுகளமகள் என்னும்

பெயர்களால் நூல்களிற் கூறப்பட்டுள்ளாள். அங்ஙனமே நடனமாடும் ஆண்மகனும் கூத்தன், ஆடுமகன், ஆடுகள மகன் எனக் கூறப்பட்டான். இவர்கள் சங்ககாலத்திற் கூத்துக்கலையை வளர்த்த கலைவாணர் ஆவர். இவர்கள் நடனம் ஆடிய அரங்கம் 'ஆடுகளம்' எனப்பட்டது. விழாக் காலங்களில் விறலியர் பலவகைக் கூத்துக்களை ஆடினர் கள்; அவ்வாறு விழாக் காலங்களில் அரங்கேறிய நாடக மகளிர் சிறப்புற ஆடுவாராயின் அவர் திறமையைப் பாராட்டி மன்னன் அணிகலன் முதலியவற்றைப் பரிசாக அளித்தலன்றி, சிறந்த பட்டங்களையும் வழங்குதல் மர பாகும். மாதவிக்கு மன்னன் "தலைக்கோல்" என்னும் பட்டம் வழங்கினன் என்பதை இளங்கோவடிகள் கூற்ருல் அறியலாம். அஃதன்றியும், திருவாரூர்க் கோவிலில் ஒரு நாடகமகள் தன் நாட்டியத்திறனை அரசன் முன்னிலையில் அரங்கேற்றிய காரணத்தால் '**பூங்கோயில் நாயகத் தலைக்கோலி**' என்ற பட்டம் பெற்றனள் என்பதைச் சோழர் காலத்துக் கல்வெட்டு ஒன்று (548 of 1904) கூறு கின்றது. இவர்களது கலையை யுணர்த்தும் நூலே கூத்த நூல் என்பதாகும்.

சிலப்பதிகாரத்திற் காணும் நடனக்கலைச்சிறப்பு

சிலப்பதிகாரத்தில் கூத்து என்பது, நாட்டியம், நாடகம் என்னும் பெயர்களால் வழங்கப்பெற்றுள்ளது. நாடக மகளிர் என்னும் தொடர் நடனமகளிர், கூத்த மகளிர், விறலியர் என்னும் பெயர்களின் பொருளையே அளிப்பதாகும். மாதவி நாடக மங்கை (விறலி) யாவாள். அவள் ஆடிய களம் நாடக அரங்கு எனப் பெயர் பெற்றது. சிலப்பதிகாரத்தில் நடனக்கலையைப் பற்றிய பல விவரங்கள் அரங்கேற்று காதையில் விளக்கமாகச் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளன.

நடனமகள் சிறப்பாகக் கூத்து, பாட்டு, அழகு என்னும் இம்மூன்றினுலும் நிறைவு பெற்றுச் சிறப்புற்று விளங்குதல் வேண்டும். அவள் ஏழு வயது முதல் பன்னிரண்டு வயதுவரை (ஏறத்தாழ ஆருண்டுகள்) கூத்துக் கலையிற் பயிற்சி பெறுதல் வேண்டும். நடனமகளைப் பயிற்றுவிக்கும் ஆடலாசிரியன் இருவகைக் கூத்துக்களில் வல்லமை பெற்றவனுய் இருத்தல் வேண்டும். 'இருவகைக் கூத்தாவன :—வசைக்கூத்து-புகழ்க் கூத்து ; வேத்தியல்-பொதுவியல்; தரிக்கூத்து-வரிச்சாந்திக் கூத்து; சாந்திக்கூத்து-விநோதக்கூத்து ; ஆரியம்-தமிழ் ; இயல்புக் கூத்து-தேசிகக்கூத்து எனப் பலவகைய. இவை விரிந்த நூல்களிற் காண்க,' எனவரும் அடியார்க்கு நல்லார் உரை காணத்தக்கது. 'சாந்திக்கூத்து' என்பது தலைவன் இன்ப மேந்தி நின்று ஆடிய கூத்து. அது (1) சொக்கம், (2) மெய், (3) அவிநயம், (4) நாடகம் என நால்வகைப் படும். இவற்றுள் (1) சொக்கம் என்பது தூயநடனம். அது 108 கரணமுடையது ; (2) மெய்க்கூத்து என்பது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இவை மெய்த்தொழிற் கூத்தாகலின் மெய்க் கூத்தாயின. இவை அகச்சுவை பற்றி எடுத்தலின் 'அகமார்க்கம்' என நிகழ்த்தப்படும் ; (3) அபிநயக்கூத்து என்பது கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபம் செய்யும் பலவகைக் கூத்து ; (4) நாடகம் என்பது கதை தழுவி வரும் கூத்து'..................எனவரும் அடியார்க்கு நல்லார் உரையும், அவர் மேலும் அரங்கேற்று காதையில் தரும் பல விவரங்களும் ஊன்றிப் படித்து ஆராய்ந்துணரற் பாலன. அவை சிலப்பதிகார காலத்தில் இருந்த கூத்துக் கலையின் வளர்ச்சியைத் தெளிவாக உணர்த்தும் விவரங்கள் ஆகும்.

நடனமகளைப் பயிற்றுவித்துத் தேர்ச்சியுறச் செய்யும்

ஆடலாசிரியன் அமைதி, இசையாசியரின் அமைதி, தண்ணுமை ஆசிரியன் அமைதி, குழலோன் அமைதி, யாழாசிரியன் அமைதி என்பன யாவை என்பதைச் சிலப்பதிகாரம்—அரங்கேற்று காதையில் தெளிவுறக் காணலாம். 'இன்ன இன்னவற்றில் முழுப்பயிற்சி பெற்றவரே இன்ன இன்ன ஆசிரியர்' என இளங்கோ வடிகள் கூறுதலைக் காணின், அவர் காலத்தில் தமிழகத்தில் இசையும் கூத்தும் மிக உயரிய நிலையிற் சீரும் சிறப்பும் பெற்றிருந்தன என்பது வெள்ளிடை மலைபோல் விளக்க மாகும். ஆடற்குரிய அரங்கு அமைக்கப்படும் முறையும் இந்நூலுள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அரங்கிற் சென்று ஆடும் இயல்பும் விவரிக்கப்பட்டுள்ளது.

மாதவி அரங்கேறிப் பாடினுள்; ஆடினுள். அப்பொழுது மேற்சொன்ன பலவகை ஆசிரியர்களும் அரங்கில் இருந்து தத்தம் தொழில் செய்தனர். அவ்வேளை,

"குழல்வழி நின்றது யாழே; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே; முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை
ஆமந் திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டிரண் டுடையதோர் மண்டில மாகக்
கட்டிய மண்டிலம் பதினொன்று போக்கி
வந்த முறையின் வழிமுறை வழாமல்..........."

(காதை 3, வரி 139-46)

மாதவி ஆடினுள்.

இக்கருத்துடன்,

"நெய்திரள் நரம்பில் தந்த மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்

கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்.''[1]

எனவரும் கம்பராமாயணச் செய்யுளின் கருத்து ஒன்றுபடல் காண்க.

மேற்சொன்ன கூத்து வகைகளுள் சாக்கைக் கூத்து என்பது ஒன்று. சாக்கையன் என்பவன் கூத்து நிகழ்த்தும் ஒரு மரபினன். அவனால் ஆடப்படும் கூத்து 'சாக்கைக் கூத்து' எனப் பெயர் பெற்றது. சாக்கையன் ஒருவன், வடநாடு சென்று திரும்பிய சேரன்—செங்குட்டுவன் முன்னிலையில், திரிபுரம் எரித்து நின்ற சிவபெருமான் ஆடிய **கொட்டிச் சேதம்** என்னும் கூத்தை ஆடினன் எனச் சிலப்பதிகாரம் செப்புகின்றது.[2]

சங்ககாலத்து இருந்த கூத்த நூல்கள்

மேற் கூறப்பட்ட கூத்துவகைகளையும், அவற்றில் திறம்பெற்ற விறலியர், கூத்தர் முதலானோர் செயல்களையும் காணும்போது சங்ககாலத்தில் கூத்த நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடைமலையாம். ஆயினும் அந்நூற்பெயர்களை உள்ளவாறு அறிந்து கொள்ளற்குச் சான்று இல்லை. கி. பி. 14-ஆம் நூற்றாண்டினரும் சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்தவருமாய அடியார்க்கு நல்லார் தமக்குப் பல நூற்றாண்டுகட்குமுன் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்திற்கு உரை காணும்போது சில கூத்த நூற்பெயர்களைக் குறிக்கின்றார். அவற்றுட் பல சிலப்பதிகார காலத்தில் இருந்தன என்று கொள்வதினும் அடியார்க்கு நல்லார் காலத்தில் இருந்தன, அவர்

---

[1] மிதிலைக் காட்சிப் படலம், 8.

[2] காதை 28, வரி. 65–79.

அவற்றை நன்கு படித்தறிந்தவர் எனக் கோடலே பொருத்த முடையதாகும். அவர் கூறியுள்ள கூத்த நூல்களிற் குறிக்கத்தக்கன, பரதம், அகத்தியம், மதிவாணனுர் நாடகத் தமிழ் நூல், கூத்தநூல் என்பன.

பல்லவர் காலம்

சிற்பச் சான்றுகள்

சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்த கூத்துக்கலை பல்லவர் காலத்தில் வளர்ச்சியுற்றதென்று கூறுவோமாயின் அஃது மிகையாகாது. பல்லவமன்னனுன முதலாம் மகேந்திரன் அருங்கலை விநோதன். அவன் நாட்டியக் கலையில் பெரிதும் ஈடுபாடு உடையவன் என்பதை உறுதிப்படுத்தச் சித்தன்ன வாசல் நடன மாதர் ஓவியங்களே ஏற்ற சான்ருகும். அவன் இயற்றிய மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடக நூலில், "சிவனுர் ஆடிய தாண்டவ நடனம் மூவுலகங்களே யும் ஒருமைப்படுத்த வல்லது" என்று பாராட்டி வரைந் துள்ளான். இராஜசிங்கன் நடனக்கலையின் மேன்மையை நன்குணர்ந்தவன்; தன் பெரும்பொழுதை அதற்கென்றே செலவழித்தவன்; அக்கலையில் தன் உள்ளத்தைப் பதிய வைத்தவன். அவன் தான் கட்டிய காஞ்சி—கயிலாசநாதர் கோவிலில் சிவனுர் ஆடிய பதாகை நடனம், ஊர்த்துவ நடனம் முதலிய நடன வகைகளேச் சிற்ப அமைப்பிற் காட்டி அழியாப் புகழ்பெற்ருன். பலவகை நடிகையர் உருவங்களும் அக்கோவிலில் செதுக்கப்பட்டுள்ளன.

காஞ்சி—வைகுந்தப் பெருமாள் கோவிலில் கூத்தர், கூத்தியர் உருவங்கள் இரு சிற்பங்களில் செதுக்கப்பட் டுள்ளன. ஆடவர், பெண்டிர் என்னும் இருதிறத்தாரும்

சேர்ந்து ஆடிய நடனங்களும் அக்காலத்து இருந்தன என்பதற்கு அச்சிற்பங்கள் சான்று பகர்வனவாகும்.

இலக்கியச் சான்று

பல்லவர் காலத்தில் எழுந்த சைவத் திருமுறைகளில் இறைவனுடிய பலவகைக் கூத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பாடல் பெற்ற சிறந்த கோவில்களிலிருந்து நடனமாதர் நடனக்கலையை வளர்த்துவந்தனர் என்பதைத் திருப்பதிகங்களிற் காணலாம்.

“ தேனுர் மொழியார் திளைத்தங் காடித் திகழும் குடமூக்கில்,”
“ வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே,”

என்பனவும் இவைபோன்று வேறு திருப்பதிகங்களில் வருவனவும் அக்காலத்துக் கூத்துக்கலை எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதை விளக்குவனவாகும். நாயன்மார் காலமாகிய பல்லவர் காலத்தில் தில்லைப்பெருமான் ‘ நடராசன் ’ என்று நாயன்மாராற் பாடப்பட்டனன். அவன் திருக்கூத்தைச் சிறப்பித்து அவர்கள் பல பாக்கள் பாடியுள்ளார்கள். பல்லவர் காலத்துக் கோவில்களில் நடனமாதர் இருந்தனர் என்பதற்கு மேற்சொன்ன இலக்கியச் சான்றுகளேயன்றிக் கல்வெட்டுச் சான்றுகளும் உண்டு. அம்மாதரசிகளே இசையையும் கூத்தையும் வளர்த்தனர். அவர்கள் அக்காலத்தில் **கணிகையர்**, மாணிக்கத்தார் எனப்பட்டனர். காஞ்சி—முத்தீச்சுரர் கோவிலில் மட்டும் நாற்பத்திரண்டு பேர் இருந்து இசை, கூத்துக்களை வளர்த்தனர் எனின், பிறகு கோவில்களில் இருந்தாரைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ ! அது பற்றிய விவரங்கள் விரிக்கிற் பெருகும்.

சோழர் காலம்

சிற்பங்கள்

தமிழக வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம் (கி. பி. 900–1300) பொற்காலம் என்று போற்றத்தகுந்த காலமாகும். அவர்கள் புதியனவாகக் கட்டிய கோவில்களிலும், புதுப்பித்த பழைய கோவில்களிலும் கருவறையின் அடிப்பகுதியிலும், வேறு மண்டபங்களிலும் அமைத்துள்ள நடனச் சிற்பங்கள் கண்டு வியந்து பாராட்டத் தக்கனவாகும். நடனமாதர் தனித்திருந்து ஆடுங் கூத்தும் பலவகைகளில் சிற்பவுருவில் காணப்படுகின்றது. அக்காலச் சோழமன்னர்கள் ஓவியம்—சிற்பம்—இசை—நடனம் முதலிய கலைகளை நன்கு வளர்த்தனர் என்பதற்கும் இது சிறந்த சான்ருகும்.

கல்வெட்டுக்கள்

சிறந்த சிவபக்தன் எனப் புகழ்பெற்ற இராஜராஜன் தான் தஞ்சையில் அமைத்த பெரிய கோவிலில் இசை, நடனம் என்னும் இரு கலைகளையும் வளர்க்கப் பல கோவில்க்ளிலிருந்தும் **பதியிலார்** நானூற்றுவரை வரவழைத்தான். ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும், ஒரு வேலி நிலமும் அளித்தான் எனப் பெரிய கோவில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அந்நடனமாதர் நானூற்றுவரும் பல கோவில்களிலிருந்து வந்தனர் என்பதை நோக்கின், அக்காலத்துக் கோவில்தோறும் நடனமாதர் இருந்தனர் என்பது பெறப்படுகின்றதன்ருே? திருவிடைமருதூரைச் சேர்ந்த காமரசவல்லி என்னும் பதியில் சாக்கைக் கூத்தில் வல்லவன் ஒருவன் இருந்தான் என்றும், அவன் 'சாக்கை மாராயன்' என்ற பட்டம் பெற்ருன் என்றும் கல்வெட்டுக் கூறுகின்றது. இதனுல் சிலப்பதிகார காலத்து

இருந்த சாக்கைக்கூத்து 11-ஆம் நூற்ருண்டிலும் தமிழ் நாட்டில் நிலேபெற்றிருந்தது என்பது புலனுகின்றது.

இலக்கியம்

சோழர் காலத்து இலக்கியங்களுள் நடனக் கலேயைப் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. சோழர் காலத்துப் பேரிலக்கியங்களாக நாம் இரண்டு நூல்களேக் குறிப்பிடலாம். அவை பெரியபுராணம், கம்பராமாயணம் என்பன. அவற்றுள் கம்பர் கூற்றை முன்னர்க் கண்டோம். பெரிய புராணத்துள்ளும் நடனம் தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது :

" கற்பகப்பூந் தளிரடிபோய்க் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்வில்ரவட் டணேயோடும் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடிஞர்."

சோழர் தம் காலத்து நடனக்கலேயின் முறைகள் அனேத்தையும் கல்லிற் செதுக்கிச் சிற்பவுருவில் காட்டியதே சிறந்த செயலாகும். சோழ மன்னர்கள் சைவசமயத்தை வளர்ப்பதைக் கடமையாகக் கொண்டு அச்சமயத்தோடு தொடர்புபடுத்தி நடனக் கலேயையும் வளர்த்த முறை பாராட்டுக்குரியதாகும்.

பிற்கால நிலே

சோழ மன்னர்கட்குப் பிறகு தமிழகத்தைக் கைப் பற்றிய நாயக்கர், மகாராஷ்டிரர் ஆகியவர் காலத்தில் கரு நாடக சங்கீதம் தமிழகத்திற் புகுந்தது ; பரத நாட்டியம் தலேயெடுத்தது.

இதுகாறும் கூறியவற்ருல், நடனக்கலே எவ்வாறு தோன்றிப் பல நூற்ருண்டுகளிலும் வளர்ச்சி பெற்று வந்தது என்பதை நாம் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

முடிவுரை

தமிழகத்தில் பிறந்து வளர்ந்து, தமிழ்மொழி பேசி, கல்வி கற்று, தொழிலிலும் வாணிகத்திலும் அனுபவம் பெற்று, கவின் கலைகளை வளர்த்து, வாழ்க்கை இன்பம் துய்த்த தமிழ்ப் பெருமக்களின் வழித் தோன்றல்களாகிய நாம், தாய் மொழியிடத்தும் தாய் நாட்டிடத்தும் கவின் கலைகளிடத்தும் பற்றுக் கொண்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலம்பெற இறைவன் இன்னருள் புரிவானாக!